ga. No. M. 2569

10 APR 1937

229

1216

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 5

செந்தமிழ் மாத சஞ்சிகை

இதழ் 3

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1352 துல்கஃதா மீ 1934 மார்ச்சு மீ

உள்ளடக்கம்.

1.	அல்குர்ஆன் ...	69
2.	அல்ஹதீது ...	70
3.	மாட்சிமிக்க ஹஜ்ஜு ...	72
4.	கஃபத்துல்லாஹ்வும் மஸ்ஜிதுல் ஹருமும் ...	74
5.	மிர்ஸாவின் உண்மைத்தோற்றம் ...	86
6.	சுகாதாரம்—தேகாரோக்கியம் ...	89
7.	இஸ்லாமிய வீரர்களின் சேவை ...	92
8.	சத்திய வீரர்களின் சத்தொழுக்கவாழ்க்கை	96
9.	ஹிபாஜத்தின் அரிய சேவை ...	98
10.	கள்ளிக்கோட்டையில் காதியானிகள் ...	99
11.	மார்க்க வினாவிடை ...	101
12.	செய்தித்திரள் ...	104
13.	ஆசிரியர் குறிப்புகள் ...	106

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ...	,,	4 0 0
தனிப் பிரதி ...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 5	ஹிஜ்ரி 1352 துல்கஃதா மீ 1934 ளூ மார்ச்சு மீ	இதழ் 3

அல்குர்ஆன்

பனீஇஸ்ராயீல் வர்க்கத்தாரில் (அல்லாஹ்வின் கட்டளைக்கு) மாறு செய்தவர்கள், தாவூத் (அலை), ஈஸப்னுமர்யம் (அலை.) இவர்களால் சபிக்கப்பட்டார்கள். இவ்வாறு சபிக்கப்பட்டது, அன்னார் அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறுசெய்து வரம்பை மீறியதற்கே யாகும். அன்னார் புரிந்து வந்த மாறுபாடான செயலைத்தவிழ்ந்து கோள்பவர்களாயில்லை. ஆகவே அன்னாரின் இச்செயல் நிச்சயமாக கெட்டதாக இருந்தது. (அல்குர்ஆன்)

அதாவது, ஹஸ்ரத் தாவூத் (அலை.)அவர்கள் காலத்தில் பனீஇஸ்ராயீல் வர்க்கத்தார் சனிக்கிழமைய தினம் மீன்வேட்டையாடக்கூடாதென்னும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அன்னோர் இத்தெய்வக் கட்டளையை ஒழுங்காய்ச்சரிவரநிறைவேற்றுகின்றார்களா வென்பதைப் பரீக்ஷிப்பதற்காக அன்று சனிக்கிழமைய தினம் கடலில் அதிகமான மீன்கள் காணப்படுவதாகயிருந்தது. எனவே, பனீஇஸ்ராயீல்கள் ஒவ்வொரு சனிக்கிழமைய தினமும் இதனைக்கண்டு பெரும் வருத்தமுற்றனர். கடைசியாக 'ஈலா' என்னும்சிராமத்தில்வசிப்பவர்யாவரும் ஆலோசனைபுரிந்து, சமுத்திரத்துக் கருகில் சிறிய சிறிய குழங்களைத் தோன்றி அதில் தண்ணீர் நிரப்பிவிட்டால் சனிக்கிழமைய தினம் சமுத்திரத்தில் மீன்கள் அதிகமாய் ஏற்படுங்கால் தண்ணீருடன் சமீபத்திலுள்ள குழங்களுக்கு வந்துவிடுமாதலால் அன்று மாலையில் அக்குழங்களின் வாயில்களை அடைத்துத் தண்ணீர் திரும்பவும் கடலுக்குச் செல்லாமற் செய்துவிட்டால் மீன்கள் அக்குழங்களிலேயே தங்கிவிடும்; மறுநாள் ஞாயிற்றுக்கிழமைய தினம் மீன் வேட்டையாடத்தக்க வசதி ஏற்பட்டுவிடுமென முடிவுசெய்து அவ்வாறே காரியாதிகள் நடத்திவந்தார்கள். அன்னாரில் இச்சதிச்செயல் ஹஸ்ரத்தாவூத் (அலை.) அவர்களுக்குத்தெரிந்தவுடன் அன்னார்மீது சாபம் புரிந்தார்கள். ஹஸ்ரத் அவர்களின் இச்சாபத்தால் அன்னோரின் உருவங்களெல்லாம் குரங்குகளேபோன்றாய், அல்லாஹ்தஆலாவின் கிருபையினின்று வெளியாக்கப்பட்டவர்களாய் விட்டனர்.

இதேபோன்று ஒருமுறை பனீஇஸ்ராயீல்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களிடஞ் சென்று, தாங்கள் உண்மையான நபியாகயிருப்

பீர்களேல், ஒவ்வொருநாளும் தயாரிக்கப்பட்ட பலவாறுன சாப்பாடுடைய தட்டம் வானத்தி லிருந்து இறங்கும்படி பிரார்த்தனை புரியுங்கள்; இல்லாதுபோனல் தங்கள்மீது ஈமான்கொள்ள மாட்டோமெனக் கூறினர். இதனைச் செவியுற்ற ஹஸ்ரத் அவர்கள், யான் அவ்வாறு பிரார்த் தனை புரிவேனுகில் உங்கள் கோரிக்கைப் பிரகா ரம் சாப்பாட்டுத் தட்டம் வானத்தினின்று மிறங்கிவிடும்; அதற்குப்பின்னும் நீங்கள் ஈமான்கொள்ளா திருப்பீர்களேல் அல்லாஹ் வின் கடிசான வேதனையிலகப்பட்டுக் கொள் வீர்களெனக் கூறினர்கள். இதற்கு பனீஇஸ் ராயீல்கள், நாங்கள் அவசியம் ஈமான் கொண்டு விடுவோமென்று உறுதி கூறினர். உடனே ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் பிரார்த்தனை புரியவே வானுலகிலிருந்து சாப்பாட்டுத் தட் டம் இறங்க ஆரம்பித்தது; உடனே யாவரும் புசித்தார்கள். ஆனல் அந்த அயோக்கியர்கள் அதற்குப் பின்னும் ஈமான் கொள்ளவேயில்லை. இதனை ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) அவர்கள் கண்டு அன்னோர்மீது சாபம்புரிந்தார்கள். அதனல் சற் றேரக்குறைய 5 ஆயிரம் நபருடைய உருவங் கள் பன்றிகளே போலாய்விட்டது. ஆகவே இவ்விரண்டு சம்பவ நிகழ்ச்சிகளை மேலேகூறப் பட்டுள்ள ஆயத்துகள் மூலம் அல்லாஹ்தஆலா நம்மனேருக்கு அறிவித்து, உங்கள் முன் னேர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்து வரம்புமீறி நடந்துவந்தும், ஒருவருக் கொருவர் கெட்ட காரியத்தைவிட்டு விலகிக் கொள்ளாதும் இருந்துவந்ததால் அல்லாஹ் தஆலாவின் இவ்வாறுன சாபத்திற்காளானர்க ளென விளக்கிக் காண்பிக்கிறுன்.

ஆகவே, அல்லாஹ் தஆலாவின் கட்டளைக்கு மாறுசெய்து அதனை மீறிநடப்பது சகலபாவங்க ளுக்கும் முதன்மையானதாகும்; அவனது கட் டளையின்மீது குயுக்தியான கருத்துகள் அமை த்து தந்திரோபாயங்களைக் கையாள முற்படு வது அவனது வேதனையில் அகப்பட்டுக்கொள் வதற்குக் காரணமாகயிருக்கின்றது. கெடுதி யான காரியங்கள்—சன்மார்க்கத்திற்கு முரணு யுள்ளவைகள் நிகழ்பெறுமாயின் அதனைவிலக்க வேண்டியது ஒவ்வொரு முஸ்லிம் மீதுமுள்ள பிரதானக் கடமையாகும். ஒரு முஸ்லிம் ஏதா கிலும் கெட்டசெயல் புரிவதை மற்றொரு முஸ் லிம் காண்பாராகில் தன்னுலேண்டவரை அத னைத் தடுப்பதற்கு முயற்சிசெய்யவேண்டும். அவ்வாறு செய்யாதிருப்பாராகில் அல்லாஹ்த ஆலாவின் வேதனைக்கு பாத்தியஸ்தராகிரு னென்பது திண்ணம். எனவே அல்லாஹ்த ஆலா நம்மனேவோர்களையும், அவனது கட்டளை யைச் சிறமேற்றாங்கி நடந்து நற்காரியங்களைக் கொண்டு ஏவல்புரிபவர்களாயும் கெடுதியை விலக்குகிறவர்களாகவும் செய்தருள்புரிவானுக.

அல்ஹதீது.

(1) அல்லாஹ்வின் வேதத்தில் அதிகப்படுத்து பவன், (2) அவனது கற்பனையைப் பொய்யாக்கி வைப்பவன், (3) அற்பர்களுக்குக் கௌரவம் கோடுப்பதற்காகவும் சங்கைவான்களைத் தாழ் மைப்படுத்துவதற்காகவும் தானே அநீதியாக அதிகாரப் பதவி வகிக்க நாடுபவன், (4) ஹரம் ஷரீபில் ஆகாக் கருமங்களைச் செய்பவன், (5) அல்லாஹ் தஆலாவால் ஹறுமாக்கப்பட்ட விஷ யங்களை ஆகுமென எண்ணுபவன், (6) என் சுன்னத்தை விட்டு நடப்பவன் ஆகிய இவ்வாறு கூட்டத்தினர்மீதும் அல்லாஹ்வுடையவும் என் னுடையவும் சாபமுண்டாகுக. என நபிகள் பெருமானர் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றுர்கள்.

தூய்மை வாய்ந்த அல்லாஹ் தஆலாவின் திருவேதத்தில் தன்னறிவைச்சம்பந்தப்படுத்தி குதர்க்க வியாக்கியானங்கள் செய்வதும், தனது மூடநம்பிக்கையை ஸ்திரப்படுத்தஅவ்வேதத்தி லிருந்தே ஆதாரந்தேட முயற்சிப்பதும் வேதத் தில் அதிகப்படுத்துவதாகும். இவ்வாறு செய்ப வர்கள் விஷயமாய் மேற்கூறப்பட்டுள்ள இவ்ஹ தீது நன்கு பகிரங்க போதனை புரிகிறதென்பது வெள்ளிடை. விஷயமிவ்வாறிருந்தும் இக்காலை சிலர், தங்களது நூதனக் கூற்றுக்கு திரு குர்ஆன்ஷரீபை ஆதாரமாகக் காண்பிப்பது தான் பெரும் விந்தைக்குரியதாயிருக்கின்றது.

(1) ஹறம் ஷரீபில் பாவஞ் செய்பவன், (2) இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட பிறகும்

ஜாஹிலியத்தின் நடையைத் திருப்தி கோள்பவன், (3) அநீதியாக ஒரு முஸ்லிமைக் கோலை புரிய முற்படுபவன் ஆகிய இம்மூன்று வகையாரும் அல்லாஹ் தஆலாவால் வெறுக்கப்பட்டவர்களாயிருக்கின்றார்கள். என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

எவர்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றிய பிறகும் தங்கள் முன்னோர்களின் பழக்க வழக்கங்களை அனுஷ்டிக்க முற்படுகின்றார்களோ அன்னோர் இஸ்லாத்திற்குள் ஜாஹிலிய்யத்தான பழக்க வழக்கங்களை அனுஷ்டிக்க முயற்சிப்பவர்களைப்போலாய் விடுகின்றார்கள். உதாரணமாக சிலர் கைம்பெண்களை விவாகம் புரிவதை மானக்கேடாகக் கருதுகின்றனர்; சிலரோவெனியில் பந்துக்களில் கல்யாணஞ்செய்துகொள்வதை திருப்தியாகக் கருதுகின்றார்களில்லை. இவை எல்லாம் அறியாக்காலத்தின் அந்தகாரச் செயல்களேயாகும். எனவே, இவ்வாறான அனுச்சார காரியங்களைப் புரியாதிருப்பது முஸ்லிம்களின் கடமையாகுமென்பது திண்ணம்.

சகல கிதாபுகளைவிட அல்லாஹ்வின் திருகிதாபாகிய அவனுடைய வேதம் மேலானதாயிருக்கும். சகல நடத்தை—செயல்களைவிட முஹம்மது (ஸல்.) அவர்களதுநடத்தை மேலானதாகும். சகல கேடுதியைவிட சன்மார்க்கத்தில் ஒரு நூதனச் செயலை உற்பத்தி செய்வது பெரும் கேடுதியாகும். புதிதாகக் கிளப்பப்பட்ட விஷயங்களடங்கலும் வழிகேடுடையதாகும். என நபிகள்பெருமானார் (ஸல்.) அவர்கள் நவின்றிருக்கின்றார்கள்.

எனவே, சன்மார்க்கத்தில் ஒரு நூதனச் செயலைப் புதிதாக உண்டுபண்ணுவது பெரும் பாவமாகுமென்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம். எனவே சஹாபாக்களினுடையவும் தாபியீன்களுடையவும் காலத்திலில்லாதவைகளை செய்ய முற்படுவது அநேகமாய் வழிகேட்டிலேயே கொணர்ந்து சேர்த்துவிடுகின்றது. எம்பெருமானார் நபிகள் திலகம் காத்தமுன்நபிய்யீன் (ஸல்) அவர்களது தூய்மைவாய்ந்த புண்ணிய காலத்திலேயே இஸ்லாம் சம்பூர்ணத்தை அடைந்து அதில் எவ்வாறான குறைவுக்குமிடமில்லாது வெற்றிபெற்றிருந்ததால் சங்கைவான்களான ஸஹாபாக்கள் அவ்வெற்றியின் நமூனாவாய்த் திகழ்ந்து கொண்டிருந்தார்கள். இவ்வாறான இஸ்லாத்திற்குள் புதிய எற்பாடுகளை உற்பத்திசெய்வது அதில் குறைவு காண்பதுபோலவும், அது நிறைபூர்ணமடையவில்லை என்பதை அனுஷ்டானத்தில் காண்பிப்பது போலவுமிருக்கிறது. ஆகவே சன்மார்க்கத்தில் புதிதாக ஒரு வஸ்துவைக் கொணர்ந்து சேர்ப்பது வழிகேடேயாகும்.

நம்முடைய இந்த சன்மார்க்கத்தில் புதிதாக ஒரு விஷயத்தை உண்டுபண்ணுவது ஆகாக் கருமமாகும். என சத்தியத்தூதர் (ஸல்.) சான்று பகர்ந்திருக்கின்றார்கள்.

எனவே நம் தூய்மைவாய்ந்த சன்மார்க்கத்தில் புதிதாக ஒரு விஷயத்தைக் கொணர்ந்து நுழைத்து வைப்பது ஆகாச் செயலென்பதை நன்கு தெரிந்துகொள்வோமாக!

எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் ஒருநாளன்று 'அபூஆமிர்' அவர்களது தெருவுக்குச் சென்று, மானிடர் தங்கள் குணங்களை சற்குணமாக்கிக்கொள்ளவேண்டுமென்னும் பொருள் பற்றி அரும் சொற்பெருக்காற்றினார்கள். அதில் "மானிடர்களில் எவன் தன் நண்பர்களுடன் ஒழுங்கான முறையில் நடந்துகொள்கின்றானோ அவன்தான் அல்லாஹ் தஆலாயிடத்தில் மேலானவனாகும்; அயல்பாகக்காரர்களில் மேலானவன் தமது அயல்பாகக்காரர்களுக்கு நன்றி புரிபவனாகும்" எனக் கூறினார்கள். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின் இத்திருவாக்கிய மொழிகளை ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி (ரஹ்.) அவர்கள் விரித்துரைக்குங்கால், எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் இவ்வுபதேச மொழிகளை நாம் ஒரு காலத்தில் பின்பற்றி நடந்து வந்ததின் காரணமாய் இஸ்லாமிய ஒழுக்கம் இஸ்லாமிய சற்குணம் ஆகிய ஆபரணங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்தோம்; அதுகாலை உலகமுழுதும் நம்மைப் பார்த்து ஆச்சரியப் பட்டுக்கொண்டிருந்தது; இக்காலத்திலோவெனில் நாம் இஸ்லாமிய சத்தொழுக்கத்தினின்று வெகுதூரம் பின்னடைந்து போயிருப்பதால் நம்முடைய நிலைமை எவ்வாறிருக்கிறதென்பதை சொல்லவும்வேண்டுமோ? தவிர நாம் தயை தாக்ஷணியமற்றவர்களாகப் போய்விட்டதால் நம்முடைய அயல்பாகக்காரர்கள் இராக்காலங்களில் பட்டினியோடு தூங்கும் நிலைமையில் நாம் சுவைபொருந்திய பதார்த்தங்களை வயிறு நிறம்ப சாப்பிட்டுவிட்டு மல்லார்ந்து படுத்து மதிமயங்கி யிருக்கிறோம். இது எவ்வளவுதூரம் பொருத்தமாகுமென்பதை யோசித்துப் பார்ப்போமாக எனக் கூறியிருக்கிறார்கள்.



மாட்சிமிக்க ஹஜ்ஜு.

நேயன்மீர்!

பரிசுத்த ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுங் காலம் இதோ நம்முன் அணுகிவிட்டது. அதற்காக உலகின் பற்பல பாகங்களிலிருந்தும் முஸ்லிம்கள் யாத்திரை செய்துகொண்டிருக்கின்றனர். அல்லாஹ் தஆலாவின் இக் கட்டளையை நிறைவேற்றுவான் வேண்டி பல்லாயிரக்கணக்கான மைல்கள் பிரயாணஞ்செய்து செல்வதின் கஷ்டங்களையும் பொருட்படுத்தாது சகலரும் ஆங்கு விரைந்து செல்கின்றனர். அப் புனித பூமியில் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் புராதனமான பைத்துல்லாஹ்ஷரீபை தரிசிப்பதே அன்னாரின் பிரதான நோக்கமாகும். சிறப்புவாய்ந்த மக்காமுஅல்லமாவானது எம்பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள் திருஅவதாரம் புரிந்த சிறப்புமிக்க புண்ணிய பூமியாகும். அதுதான் நபிப் பட்டம் பெற்ற நன்னிலமுமாகும். அவ்வமயம் குப்பார்கள் எம்பெருமானார் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களினது சத்பிரஸாரத்தின்மீது சத்துருவாகி சொல்லொணா துன்பத்துக்காளாக்கினார்கள். அதனால் அப்பரிசுத்த பள்ளத்தாக்கினின்றும் பெருமானார் (ஸல்.) அவர்கள் 'ஹிஜ்ரத்' செய்யவும் நேர்ந்தது. அதுபொழுது இம்மாபெரும் புண்ணிய க்ஷேத்திரத்தை விட்டு அகலவேண்டியிருந்த காரணத்தால் நபிபெருமானார் (ஸல்.) அவர்களுக்கேற்பட்ட மனக்கவலை அளவிடக் கூடாததாயிருந்தது. அவ்வாறு 'ஹிஜ்றத்' செல்லுங்காலை பெருமானார் (ஸல்.) அவர்கள் 'அபூகுபைஸ்' மலைக்குன்றின் மீதேறி கஃபத்துல்லாவை முன்னோக்கிக் கூறியுள்ள பொன்மொழிகளை ஞாபகத்திற்குக் கொண்டு வருவோமாக:—"அல்லாஹ்வின் அனுக்கிரகமிக்க புண்ணிய வீடே! சற்றேனும் உன்னைவிட்டு யான் பிரிவதற்கு மனங்கொள்ளவில்லை; என்றாலும் குப்பார்கள் என்னை நிம்மதியாயிருக்க விடுகின்றார்களில்லை; இக்காரணத்தினாலேயே இப்புண்ணிய பூமியை விட்டு யான் வெளிச்செல்ல நேர்ந்திருக்கிறது" என்று கூறியது, சங்கைபொருந்திய அப்புண்ணியஸ்தலத்தின் மகிமையாதாகுமென்பதை நன்கு துலக்குகிறதன்றோ? மக்கா முஅல்லாவை விட்டுநபிகள் திலகம் (ஸல்) அவர்கள் மதீனாசென்று அங்கு குடியேறிய பின்னரும் சதாவும் மக்கா முஅல்லமாவின் ஞாபகமும், திரும்ப அங்கு செல்ல வேண்டுமென்னும் அவாவும் அதிகரித்துக்கொண்டே யிருந்தது. அவ்விருப்பத்திற் கேற்ப ஹிஜ்ரீ 8-ம் ஆண்டில் பரிசுத்த மக்காவை ஜெயித்து வெற்றிக்கொடிநாட்டி தங்களது மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டார்கள். அச்சமயம் பரிசுத்த கஃபாவில் குப்பார்கள் நூற்றுக்கணக்கான விக்கிரகங்களை நிலைநாட்டி வைத்திருந்தார்கள். ஆதலின் எம்பெருமானார் ஏகத்துவத் தூதர் (ஸல்.) அவர்கள், அவைகளைச் சுத்தப்படுத்தி அதனை தெய்வ வணக்கத்திற்கு உறைவிடமாகச் செய்துவிட்டார்கள். இம்மாண்புமிக்க தேவாலயத்துக்கு முஸ்லிம்கள் சென்று ஹஜ்ஜை நிறைவேற்றுமாறு அல்லாஹ்தஆலா கட்டளை பிறப்பித்திருக்கிறானாதலின் அக்கட்

டளையைச் சிறமேற்கொண்டு தேயத்தின் நானுபாகங் களிலுமிருந்து அங்கு விரைந்து சென்று அக்கடமையை நிறைவேற்றி வைக்கின்றுர்கள். ஹஜ்ஜுடைய கிரிகைகள் யாவும் நபிமார்களின் ஞாபகத்தை யுண்டு பண்ணுபவைகளாயிருக்கின்றன. முக்கியமாய் நபிமார்களின் தந்தையரான செய்யிதுனு இப்ருஹீம் (அலை.) அவர்களின் அடிச்சுவற்றைப் பின்பற்றக் கூடியதாக இருக்கிறது. மேலும் நபிபெருமானுர் (ஸல்.) அவர்கள் "'மஸ்ஜிதஹறுமில் ஒரு ரக்கஅத்துத் தொழுகையை நிறைவேற்றி வைப்பது இதர இடங்களில் ஒரு லக்ஷ ரக்கஅத்துத் தொழுவது போலாகு" மென்று அருள் செய்திருக்கிறுர்களென்றுல், அம்மகத்துவ மிகும் புண்ணிய க்ஷேத்திரத்தின் மகிமை இன்னதென நன்கு புலனுகிறதல்லவா? இது மட்டுமா! இதுபோன்ற இன்னும் எண்ணத்தொலையான எத்துணையோ பாரதூரமான நன்மைகள் ஹஜ்ஜில் அமைந்திருக்கின்றன. ஈதன்றி ஹஜ்ஜை நிறைவேற்றுவதில் மாபெரும் சரீரப் பிரயாசையும் பெரும் பணச்செலவும் ஏற்படுவதால் மானிடர் மட்டில்லா பாக்கியங்களைப் பெற்று புண்ணியசாலிகளாய் விடுகின்றனர். மேலும் இயல்புள்ளவர்கள் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதில் சற்றும் பின்னடையலாகாதென்று நபிகள்பெருமானுர் (ஸல்.) அவர்கள் எச்சரிக்கையும் செய்திருப்பதால் நாம் எவ்வளவுதூரம் விரைந்துசென்று அதனை நிறைவேற்றி வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேமென்பது உங்களுக்குத் தெரியாததன்று. இந்நிலைமையில், நந்தென்னுட்டில் ஹஜ்ஜை நிறைவேற்றக் கடமைப்பட்டவர் அநேகருளர்; அன்னேரில் இதன் பக்கல் கவனம் செலுத்துபவர் ஒரு சிலரே காணப்படுகின்றனர். அன்னேர் அனுவிஷயமான காரியங்களிலும் வீண் விஷயங்களிலும் எவ்வளவோ பணத்தைச் செலவிட்டு விடுகின்றனர்; இந்நற்காரியத்துக்கு—அல்லாஹ்வின் கட்டளையை நிறை வேற்றுவதற்கு—ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்களின் ஏவலுக்குத் தலை சாய்ப்பதற்குச் செலவிடுவதென்பது அன்னேருக்கு ஒரு பருவதமாகத் தோன்றுகிறதுபோலும். மேலும் பணம் படைத்த அநேகர் தங்கள்மீதுள்ள கடமையை நிறைவேற்றுவதில் காலங்கடத்திச் செல்வதால் அப்புண்ணிய காரியத்தை நிறைவேற்றுமலே தங்கள் காலத்தைக் கடத்தி சென்று பாவிகளாய் விடுகின்றனர்.

ஹஜ்ஜை நிறைவேற்றக்கடமைப்பட்டு அதற்கான எவ்வித இடையூறுகளும் இல்லாதிருந்தும் அதனை நிறைவேற்றுது விட்டு விடுவார்களாயின் அவர்கள் நஸாராக்களாக அல்லது எஹூதியர்களாக மரிக்கின்றுர்களென நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கிறுர்கள். இவ் விஷயத்தை அறிந்த முஸ்லிம்கள் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதில் பின்னடைந்திருப்பது பேராச்சரியமே யாகும். மானிடர்களுக்கு மரணம் எப்பொழுது சம்பவிக்குமென்பதை நிர்ணயிக்க எவராலும் முடியாது. எனவே, ஹஜ்ஜு கடமை யாக்கப்பட்டவர்கள் கூடியவரை விரைந்து சென்று அதனை நிறைவேற்றுவதற்கு முற்படுவதே சாலச் சிறந்ததாகும். ஹாஜிகளுக்கு அல்லாஹ்தஆலாவிடம் அநேக சன்மானங்கள் கிடைக்கின்றன: உலகிலுள்ள எழுபது கோடி முஸ்லிம்களும் முன்னேக்கி வணக்கம் புரியக் கூடிய கிப்லாவாகிய கஃபத்துல்லா ஷரீபை நேரில் கண்டு களிக்கும் பாக்கியம் அன்னேருக்குக் கிடைக்கின்றது; பொதுவாக நபிமார்களும் குறிப்பாய் எம்பெருமானுர் நபிகள்திலகம் (ஸல்.) அவர்களும் வணக்கம் புரிந்த புண்ணிய ஸ்தலங்களையும் சந்தித்து அதில் இன்னேரும் வணக்கம் புரிவதற்குள்ள சந்தர்ப்ப மேற்படுகின்றது.

ஆகவே நம் முஸ்லிம் நேயர்கள் இவ் விஷயத்தில் ஜாக்கிரதையாயிருந்து முற்கூட்டியே இக்கடமையை நிறைவேற்றி இகபரசாதனங்களை அடைவார்களாக.

கஃபத்துல்லாஹ்வும் மஸ்ஜிதுல் ஹறாமும்

முஸ்லிம்களின் கிப்லாவான கஃபதுல்லாவைப் பற்றியும், ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதிலுள்ள இதர க்ஷேத்திரங்கள் சம்மந்தமாயும், பரிசுத்த ‘ஹரம்ஷரீ’பின் எல்லைகளையும் ‘இஹ்றாம்’ கட்டவேண்டிய இடங்களின் விபரங்களையும், புண்ணிய க்ஷேத்திரங்களிலுள்ள கட்டடங்கள் சம்மந்தமான சரித்திர வரலாறுகளையும் முஸ்லிம்கள் தெரிந்திருக்க வேண்டியது அத்தியாவசியமாகையால் அவைகளை இவண் விபரமாக எழுதத் துணிகின்றனம் :—

‘கஃபத்துல்லாஹ்’ என்னும் புனித வீட்டை மூன்று வட்டங்கள் சூழ்ந்துகொண்டிருக்கின்றது. அதாவது, முதலாவதாக ‘மஸ்ஜிதுல் ஹறாம்’ என்னும் பள்ளிவாசலின் கட்டடமும் இரண்டாவதாக ‘ஹறம்’ ஷரீபின் எல்லையும் மூன்றாவதாக ‘இஹ்றாம்’ கட்டவேண்டிய இடங்களும் சூழ்ந்துகொண்டிருக்கின்றன.

மக்கமா நகரினுட் பிரவேசிக்க நாடுபவர் ‘இஹ்றாம்’ கட்டாது இந்த மூன்றாவது எல்லையைக் கடந்து செல்லலாகாது. (இஹ்றாம் என்பது தையல் சம்மந்தப்படாத இரு துணிகளை அணிந்து ஹஜ்ஜையோ அல்லது உம்றாவையோ நாடி ‘தல்பியா’ச்சொல்வதாகும்.) இந்த எல்லையானது மதீனாவாசிகளுக்கு ‘துல்ஹுலைபா’ என்றஇடமும், ஷாமிகளுக்கு ‘ஜுஹைபா’ என்னுமிடமும், நஜ்தியருக்கு ‘கர்னு’ என்னுமிடமும், எமனிகளுக்கு ‘எலம்லம்’ என்னுமிடமும் ‘இராக்’ வாசிகளுக்கு ‘தாத்த இர்கின்’ என்னுமிடமுமாகும். (நம் தேசவாசிகள்

கப்பலில் செல்லும்போதே 'எலம்லம்' குறுக்கிடுகின்றது ; அங்கு அறிக்கை செய்யப்பட்டவுடன் 'இஹ்றாம்' கட்டிக்கொள்ளவேண்டும்.)

ஹறத்தின் எல்லையானது, நான்குபுறங்களிலும் அடையாளமிடப்பட்டிருக்கின்றது. அந்த எல்லையின் ஆரம்பத்தில் பெரும் பெரும் மதில் சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றது. 'அரபா' செல்லும் வழியில் தாயிப் பக்கத்து எல்லையானது கஃபத்துல்லாவிலிருந்து சுமார் 10 மைல் தூரமுடையதாகவும், இராக்கின் பக்கல் சுமார் 7 மைல் தூரமுடையதாகவும், மதீனா பக்கல் 3 மைல் தூரமுடையதாகவும், எமன் பக்கத்து 7 மைல்தூர விஸ்தீரணமுடைய தாகவுமிருக்கின்றது.

கஃபத்துல்லாவின் சங்கை மரியாதைக்காக ஹறம்ஷரீபின் எல்லையை ஹஸ்ரத் ஜிப்ராயீல் (அலை.) அவர்களது அறிவிப்பைக்கொண்டு குறிப்பிட்டு அதன் எல்லையை நிர்மாணித்து கற்களை நாட்டியது ஹஸ்ரத் செய்யிதுனா இப்றாஹீம் (அலை.) அவர்களாகும். அதன்பின் 'குசை இப்னு கிலாப்' என்பவர் அவைகளை ஒழுங்கு செய்து செம்மைப்படுத்தி வைத்தார். பின்னர் நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் ஹிஜ்ரத்துச் செல்லுமுன் மக்கா வாசத்தின்போது குரைஷியர்கள் அக்கற்களைப் புதுப்பித்து வைத்தார்கள். பிறகு எம்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் மக்காவை ஜெயித்த ஆண்டில் அந்த எல்லைக்கற்களைப் புதுப்பித்து வைத்தார்கள். பின்னர் ஹஜ்ரத் செய்யிதுனா உமர் கத்தாப் (ரலி.) அவர்கள் ஹிஜ்ரத்து 17-வது ஆண்டிலும் ஹஸ்ரத் செய்யிதுனா உதுமானிப்னு அப்பான் (ரலி.) அவர்கள் ஹிஜ்ரத்து 26-வது ஆண்டிலும் அதன்பின் முஆவியா (ரலி.) அவர்களும், அதன்பின் அப்துல்மலிகிப்னுமர்வானும் அதன்பின் மஹ்தியுல் அப்பாஸியும் எல்லைக் கற்களைச் செம்மைப்படுத்தி வைத்தார்கள். ஹிஜ்ரீ 325-வது ஆண்டில் 'ராலீ' என்பவர் 'தன்யீம்' என்னுமிடத்தில் ஹறத்தின் எல்லைக்கறிகுறியாக இரு மாபெரும் மதில்களைக் கட்டி வைத்தாராகையால் அவருடைய பெயர் அந்த மதிலில் பொறிக்கப்பட்டிருப்பதாக ப்ரஸீ கூறுகின்றார்.

'இருபில்' தேசாதிபதியான 'முலப்பர்' என்பவர் ஹிஜ்ரீ 616-ல் அரபாவின் வழியிலுள்ள எல்லையில் இரண்டு அடையாள ஸ்தூபிகளை அமைத்தார். இவ்வாறு பலராலும் பற்பல எல்லைகளிலும் அடையாள சின்னங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஹறத்தினுடைய இவ்வெல்லைக்குள்ளுண்டான மரங்களையோ புற்பூண்டுகளையோ தரித்துவிடுவதும், பறவைகளையும் மிருகங்களையும் வேட்டையாடுவதும் போர்புரிவதும் விலக்கப்பட்டதாகும்.

மூன்றாவது எல்லையானது மஸ்ஜிதுல் ஹறாமாகும். இப்பள்ளியின் தற்சமயத் தோற்றத்தை ஆரம்பத்தில் விபரித்துவிட்டு அதன்பின் அதன் சரித்திரத்தைக் குறிப்பிடுவாம்: அப்புனித பள்ளிவாசல் மக்கமாநகரின் நடுமத்தியில் ஏகதேசத்தில் நச்சதுர வடிவமாகவே அமைந்திருக்கின்றது. அக்கட்டடத்தின் வடபுறசுவர் சுமார் 164 கெஜம் நீளமுடையதாகவும் தென்புற சுவர் 166 கெஜமும் கீழ்புறச்சுவர் 108 கெஜமும் மேல்புறம் 109 கெஜமும் உடையதாக இருக்கின்றது. இதற்கு மத்தியில் நான்குபுறமும் அழகிய கட்டடம் கட்டப்பட்டு நடுவில் பெரும் முத்தவெளி அமைந்திருக்கிறது. இம்முத்தவெளிக்கு நடுவே சற்று தெற்குபக்கல் "பைத்துல்லாஹ்" என்னும் தேவாலயம்அமைந்திருக்கிறது. அப்பள்ளியின் நான்குபுறக் கட்டடங்கள் வெகு அழகாயும் பலம் பொருந்தியதாகவும் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. 'மர்மர்' கற்களினால் செய்யப்பட்ட 301 தூண்களும் கருங்கற்களினால் அமைக்கப்பட்ட 244 தூண்களும் நிலைநிறுத்தி நாலுபுறங்களிலும் வளைவுகள் போட்டு மேலே அழகிய மண்டபங்கள் வெகு விசித்திரமாய் அமைத்து அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது.

கஃபத்துல்லா ஷரீபுக்குச் சுற்றிலும் 'தவாப்' செய்யக்கூடிய இடம் 'மர்மர்' கற்கள் புதைக்கப்பட்டு அதற்குச் சுற்றிலும் வெண்கலத் தூண்கள் நிப்பாட்டி தீபலங்காரஞ் செய்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. தவாப் சுற்றிவருமிடத்திற்கருகிலுள்ள முற்றத்தின் கீழ்புறத்தில் 'ஜம்ஜம்' கிணறு இருக்கிறது. அதற்குமேல் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டு அதன்மேத்தையில் 'ஷெய்குல்முவக்கித்' தொழுகைக்கு நேரம் குறிப்பவரின் இருப்பிடம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்குச் சமீபத்தில் 'மகாமே இப்றாஹீம்' என்னும் ஸ்தலமிருக்கிறது. அந்த இடத்தில் ஆறு தூண்கள் மீது சிறியதோர் 'குப்பா' அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்குச் சமீபத்தில்தான் குத்பா ஓதும் மிம்பருமிருந்துவருகிறது. முற்றத்தின் வடபுறத்தில் 'மகாமுல்ஹனபி' அமைந்துள்

ளது. அந்த இடத்தில் 'மர்மர்' தூண்கள்மீது ஓர் மெத்தைக் கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் தலைமை முஅத்தின் இருந்துவருகிறார். மேற்குப்புறம் 'மகாமுல்மாலிக்கி'யும் தென்புறத்தில் 'ஹம்பலீமகாமும் உளது. அக்காலத்தில் மக்காம இப்ராஹீம்' ஷாபிஈ முஸல்லாவாகும்.

வெளியிலிருந்து இம்மஸ்ஜிதுக்குள் நுழைவதற்காக 25 வாயல்களிருக்கின்றன. அதாவது வடபுறம் 8 வாயலும் கிழக்கில் 5-ம் தெற்கில் 7-ம் மேற்கில் ஐந்துமிருக்கிறது. இவைகளிற் சிலபெரிதாயும் சில சிறியவையாயு மிருக்கின்றன. ஒவ்வொரு வாயல்களும் மிக்க அழகாய் அலங்கரிக்கப்பட்டு அந்தந்த வாயிற்படிக்குத் தக்க கருத்துக்களையுடைய குர்ஆன் ஷரீபின் திருவாக்கியங்கள் மர்மர் கற்களினால் செதுக்கி வைத்துக் கட்டப்பட்டிருப்பது கண்களைக்கவரத்தக்கதாயிருந்து வருகின்றது.

மஸ்ஜித் கட்டட வரலாறும் அதன் விஸ்தரிப்பும்.

சரித்திர ஆராய்ச்சியாளர்களான அர்ஜாகி, இமாம் அபுல்ஹஸனுல்மாவர்தி முதலானோரின் கூற்றுப்படி, நபிகள்நாயகம் (ஸல்.), ஸித்திக் அக்பர் (ரலி.) இன்னோரின் காலத்தில் கஃபதுல்லாவுக்குச் சூழாவுள்ள இடம் இதுபொழுது 'தவாப்' செய்வதற்காக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அளவு உடையதாயிருந்து; அதனைச் சுற்றி யாதொரு சுவருமில்லாதிருந்தது; இந்தவரம்புக்கப்பால் பலருடைய வீடுகளு மிருந்துவந்தது; இவ்வீடுகளுக் கிடையிலுள்ள சந்துகளின் வழியேதான் ஜனங்கள் கஃபத்துல்லா ஷரீபினுட் பிரவேசிப்பார்கள்; ஹஸ்ரத் உமர்கத்தாப் (ரலி.) அவர்கள்கலீபாப் பதவி ஏற்றுக்கொண்டவுடன் ஹிஜ்ரீ 17-ம் ஆண்டில், பக்கத்திலுள்ள அநேகவீடுகளைக் கிரயத்திற்கு வாங்கி அவைகளை இடித்து மஸ்ஜிதை விஸ்தீரணப்படுத்தினார்கள். இதுதான் முதன்முதல் செய்யப்பட்ட விஸ்த்தரிப்பாகும்.

அதுசமயம் சிலர் தங்கள் வீடுகளை விற்க முடியாதென வற்புறுத்தினராயினும், கலீபா அவர்கள் அவைகளின் மதிப்புத் தொகையை கஃபத்துல்லாஹ்வின் பொக்கிஷத்தில் வைத்துவிட்டார்கள். சிலகாலத்துக்குப்பின்னர் வீட்டுக்குடையவர்கள் அவரவர்களின் தொகையைப் பெற்றுக்கொண்டுவிட்டனர். அதற்குபின் ஹஸ்ரத் அவர்கள் மஸ்ஜிதுக்குச் சூழால் ஒரு ஆள் உயரத்தில் சுவர்எழுப்பி மஸ்ஜிதின் எல்லையைக் குறிப்பிட்டுவிட்டார்கள். அச் சுவற்றின்மீது விளக்குகள்வைக்கும் வழக்கமுமிருந்துவந்தது.

ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்கள் கலீபாப் பதவி வகித்தகாலத்தில் ஹிஜ்ரீ 2-ம் ஆண்டில் ஜன நெருக்கடி எற்பட்டுவிட்டதால் மஸ்ஜிதில் இடம்போதாமலாய்விட்டது. உடனே இன்னு மநேகவீடுகளை வாங்கி விஸ்தீரணப்படுத்தினார்கள். ஹிஜ்ரீ 64-ம் ஆண்டில் அப்துல்லாஹிப்னு ஜுபைர் (ரலி.) அவர்கள் தங்கள் கிலாபத் காலத்தில் அநேகவீடுகளை வாங்கி மஸ்ஜிதின் கிழக்குபாகத்திலும் தென்பாகத்திலும் பெரியதோர் விஸ்தீரணத்தைச் செய்துவைத்தார்கள். அவ்வாறு வாங்கியதில் ஒருவீட்டின் ஒருபகுதியை வாங்குவதற்குமட்டில் 10 ஆயிரம் தீனார் கிரயம் கொடுக்கநேர்ந்தாக சரித்திரம் கூறுகின்றது. ஹிஜ்ரீ 75-ம் ஆண்டில் அப்துல்மலிக் கிப்னு மர்வான் என்பார் ஹஜ்ஜை நிறைவேற்ற வந்தபொழுது இடத்தை விஸ்தீரணப்படுத்தாதுகட்டடம் கட்டஆரம்பித்து சுவர்களைஉயர்த்திதேக்குமரத்தினால் முகடுபோடச்செய்தார். அதற்காக நிறுத்தப்பட்ட தூண்களில் தங்க பூச்சுக்களும் செய்யப்பட்டது. பின்னர் இவருடைய மகனான 'வலீத்' என்பவர் பட்டத்தை ஏற்றுக்கொண்டபொழுது தமது தந்தையால் கட்டடப்பட்டிருந்ததை ஏகதேசத்தில் எடுத்துவிட்டு மஸ்ஜிதை விஸ்தீரணப்படுத்தி உறுதியான கட்டடமாக அமைத்தார். அதில் தேக்கமரத்தினால் அநேகவிசித்திரமான வேலைப்பாடுகளைச் செய்ததுடன் உட்புறத்தில் 'மர்மர்' கற்களை அமைத்து தங்கமுலாமும் செய்தார். 'மர்மர்' கற்களைக்கொண்டு ஆரம்பத்தில் விசித்திரவேலைகளைச் செய்யுமாறு எற்பாடு செய்தவர் இவர்தான். அதன்பின் ஜியாதிப்னு அப்துல்லாஹில்ஹாரிதீ என்பார் மக்காவுக்கு அதிபதியாகயிருந்த காலத்தில் அப்பாஸீ வர்க்கத்தாரின் கலீபாக்களில் இரண்டாவது கலீபாவான 'அபூஜஅபர்' அவர்களின் அனுமதியின் மீது மஸ்ஜிதின் வடபாகத்திலும்மேற்குபாகத்திலும் அநேக இடங்களை வாங்கி பெரும் கட்டடத்தை நிர்மாணித்தார்.

பின்னர் இவருடைய புதல்வரான 'மஹ்தீ' அவர்கள் ஹிஜ்ரி 161-ல் ஒருமுறையும் 164-ல் மற்றொருமுறையும் மஸ்ஜிதை விஸ்தீரணப் படுத்தினார்கள்.

164-ம் ஆண்டில் இவர் ஹஜ்ஜுசெய்வதற்காக வந்திருந்தக்கால் கஃபத்துல்லாவையும் அதற்குச் சூழாவுள்ள கட்டடங்களேயும் பார்வையிட்டார். அதுபொழுது, கஃபத்துல்லா ஒருபக்கமாக ஒதுங்கி இருப்பது அவருடைய மனதிற்குத் திருப்தியளிக்காததால் கட்டட நிர்மாணிப்பு நிபுணர்களைத்தருவித்து, அது நடுவில் வருவதற்கான ஆலோசனை செய்தபொழுது, அதற்காக அனேகவீடுகளை வாங்கிச் சேர்க்கவேண்டியிருந்ததால் பெருஞ் செலவேற்படுமென நிபுணர்கள் மலைத்தனர். என்றாலும் சுல்த்தான் மஹ்தி அவர்கள் மாபெரும் 'ஆஷிக்பில்லாஹ்' வாகயிருந்த காரணத்தால் தங்களது பொக்கிஷம் முழுதும் செலவாகிவிட்டபோதிலும் அவ்வாறு செய்து முடித்துவிடவேண்டுமென உறுதிகொண்டுவிட்டார்கள். பின்னர் அங்கிருந்து இராக் சென்றவுடன் ஏராளமான திரவியங்களை அனுப்பிவைத்து வீடுகளை வாங்கி தங்கள் கோரிக்கைப்பிரகாரம் கஃபத்துல்லாஹ் நடுமத்திபத்தில் வரும்படி செய்து மஸ்ஜிதை நிர்மாணிக்க ஏற்பாடுசெய்தார்கள். ஆனால் அவர்கள் சொற்பகாலத்தில் அல்லாஹ்வின் சன்னிதானத்தை அடைந்துவிட்டதால்இக்காரியம் அவருடைய குமாரரான 'மூஸல்ஹாதீ' அவர்களது காலத்தில்தான் முற்றுபெற்றது. மஹ்தீ அவர்களினது இவ்விஸ்தரிப்புக்குப் பின் விசேஷமாக விஸ்தரிப்புவேலை பூர்த்தி யடைந்துவிட்டது.

சுல்த்தான் ஹாரூன்ரஷீதுபாஷா அவர்கள் காலத்தில் அம்மஸ்ஜிதுக்கு மேற்புறத்தில் முஅத்தின்கள் பாங்கு சொல்வதற்காக ஒருகட்டடம் அமைக்கப்பட்டது. அதன்பின் ஆதிகட்டடங்கள் பற்பலராலும் பழுதுபார்க்கப்பட்டும் செம்மைப்படுத்தப்பட்டும் வந்தது: ஹிஜ்ரீ 802-ம் ஆண்டில் மஸ்ஜிதுக்குச் சமீபமாயுள்ள 'ராமுஷ்து' சத்திரத்திலிருந்து நெருப்புகிளம்பி மஸ்ஜிதின் அநேக பாகங்களைத் தீக்கிரையாக்கிவிட்டது. அமீர் 'பைஸகுல்லாஹிரி' என்பவர் தீக்கிரையாயிருந்த கட்டடத்தை 803-ல் புதுப்பிக்க ஆரம்பித்து 804-ல் முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டார். இது மகா ஜனங்களுக்குப் பெரும் ஆச்சரியத்தைக்கொடுக்கும் சம்பவமாகயிருந்தது. இதன்பின் பலராலும் கட்டடம் பழுதுபார்க்கப்பட்டுவந்தது. ஹிஜ்ரீ 979 ல், துருக்கி சுல்த்தான் ஸலீம்கான் அவர்கள் மஸ்ஜிதை பலம்பொருந்தியதாகவும் விசித்திரமுடையதாகவும் அழகுவாய்ந்ததாகவும் நிர்மாணிக்க வேண்டுமென மிஸர்தேசத்தின் அதிபதியான 'ஸனன்'பாஷாவுக்குத்தெரிவித்து இச்சேவைக்காக நிபுணர்களை அனுப்பிவைக்கும்படி உத்திரவிட்டார்கள். அவ் வுத்திரவுக்கிணங்க அக்காரியத்தில் நிபுணத்துவம் வாய்ந்திருந்த அஹ்மத்பேக் என்னும் இன்ஜினீரை அனுப்பிவைத்தார். அவர் தம்மோடு முஹம்மதுல் மிஸ்ரியையும் மற்று மனேகரையும் அழைத்துக்கொண்டு மக்காவந்து சேர்ந்தார். அதன் பின்னர் ஹிஜ்ரீ 980 ம் ஆண்டு ரபீஉல்அவ்வல் மாதம் 14-ந் தேதி யன்று பாபுஸ்ஸலாம் பக்கவிருந்து கொஞ்சம் கொஞ்சமாக இடிக்க ஆரம்பித்து கட்டட நிர்மாணவேலையையும் தொகுத்தே செய்து வந்து, இப்பொழுது காணப்படும் அழகான முறையில் கிழக்கு தெற்கு இருபுறங்களையும் கட்டி முடித்தவுடன் சுல்த்தான்ஸலீம்கான் அவர்கள் அல்லாஹ்வின் பக்கல்சேர்ந்த விஷயம் தெரியவந்தது. அதன்பின்னர் அவர்களினருமைப் புதல்வரான சுல்தான் முராத்கான் சிம்மாசன மேறியவுடன் பாக்கியாயுள்ள நிர்மாணிப்பு வேலைகளைத் தொகுத்துக்கொண்டு போகுமாறு அஹ்மத் பேக்குக்கு அனுமதி கொடுத்தார். அவ்வாறே கட்டப்பட்டு 984-ல் கட்டட நிர்மாணிப்புவேலை பூர்த்தியடைந்தது. இவ்வாறு நிர்மாணிப்பதற்கு மிஸர்தேசத்திலிருந்துவந்த மரம் இரும்பு தங்கமுலாம் செய்யப்பட்ட பிறைகள் முதலியவைகளைத் தவிர 55 ஆயிரம்பவுன் செலவாயிருக்கின்றது இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட கட்டடம்தான் நாளதுவரை யிருந்து பார்ப்பவர்களின் மனதைக்கவரச் செய்துகொண்டிருக்கிறது.

கஃபத்துல்லாஹ்.

நிச்சயமாக மானிடர்களுக்கென நிர்மாணிக்கப்பட்டவற்றில் முதன்முதலான ஸ்தலம் பக்கா (மக்கா)வின் கண்ணுள்ளதாயிருக்கும் (கஃபா). அது பறக்கத்துச் செய்யப்பட்டதாகவும் சர்வ லோகத்தாருக்கும் நேர்வழியுடையதாகவுமிருக்கும். அதன்கண் பஹிரங்க அத்தாக்ஷிகளுண்டு. (அவ்வத்தாக்ஷிகளினின்றும்) மக்காமஇப்ருஹீமுமொன்றாகும். யாரேனுமொருவர் அப்புண்ணியஸ்தலத்தினுட் பிரவேசித்து விடுவாராயின் அச்சந்தீர்ந்தவராய் விடுவார். (அல்குர்ஆன்.)

இத்தெய்வதிருவசனத்திலிருந்து,முதன்முதலாக அல்லாஹ்வின் வணக்கத்திற்கென கட்டப்பட்ட தேவாலயம் கஃபத்துல்லாஹ்தானென்

பதை நிச்சயமாய்த் தெரிந்து கொள்ளுகிறோம். அல்லாஹ் தஆலா இப்பூவுலகினைப் படைத்த பொழுதே கஃபத்துல்லா ஷரீபின் ஸ்தலத்தை ஓர் புண்ணிய இடமாகச் செய்துவிட்டான். பரிசுத்தம் பொருந்திய அந்த ஸ்தலத்தை ஹஸ்ரத் ஆதம் (அலை.) அவர்களுக்குமுன்பே மலக்குகள் சுற்றி வலம் வந்ததாகவும், அவ்வாறு சுற்றி வருவதற்காக அங்கோர் எல்லை குறிப்பிடப்பட்டிருந்ததென்றும்கூறப்படுகிறது. ஹஸ்ரத் செய்யிதுனா ஆதம் (அலை.) அவர்கள் இப்பூவுலகின்கண் தோன்றியபின் அப்புண்ணிய ஸ்தலத்தைச்சுற்றி தவாப்செய்தார்களென்றும், அவர்களுக்குப்பின் தோன்றிய எல்லா நபிமார்களும் அப்புண்ணியஸ்தலத்தை தரிசிக்கவேண்டுமென உத்திரவிடப்பட்டிருந்தார்களென்றும் கூறப்படுகிறது. எனவே, இப்புண்ணிய ஸ்தலமானது எல்லாப் பெரியார்களும்வந்து சேரும் மகிமைபொருந்திய ஸ்தலமாகஇருந்து வந்திருக்கிறது. ஆகவே இப்புண்ணியஸ்தலத்தின் பெருமையையும் மாண்பையும் உலகமக்கள் அடைவதற்காக மக்கமாநகரை நிர்மாணிக்குமாறு ஹஸ்ரத் செய்யிதுனா இப்ருஹீம் (அலை.) அவர்களுக்கு அல்லாஹ் தஆலா உத்திரவிட்டான். அல்லாஹ்வின் இவ்வாணைக்கேற்ப ஹஸ்ரத் அவர்கள் தங்கள் மனைவியரான ஹாஜரா (அலை.) அவர்களையும் தங்களது அருமை சிசுவாகிய இஸ்மாயீல் (அலை.) அவர்களையும் மிஸ்ரிலிருந்து இப்புண்ணியபாலைவனத்திற்குக்கொண்டுவந்து விட்டார்கள். அப்பள்ளத்தாக்கில் அச்சமயம் குடியிருப்புக்கு வீடோ அருந்துவதற்குவேண்டிய தண்ணீரோ, புசிப்பதற்குப்போதிய ஆகாராதிகளோ எதுவுமில்லாதிருந்தது. எனவே, அல்லாஹ்வின் உதவியைத் தவிர வேறெதையும் எதிர்பார்க்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. அவ்வமயம் அப்பரிசுத்த பள்ளத்தாக்கினின்று ஹஸ்ரத் அவர்கள் பிரார்த்தனை புரிந்தார்கள். அப்பிரார்த்தனைக்கேற்ப மக்கமாநகர் இன்று மாபெரும்பட்டணமாகத் திகழ்ந்துகொண்டிருப்பதோடு அவண் வசிப்பவர்களுக்குத் தேவைப்படும் அன்ன ஆகாராதி பானம் முதலியவைகளும் தக்க வசதியுடனேற்பட்டுள்ளது. ஹஜ்ரத் இப்ருஹீம் (அலை.) ஹாஜராநாயகி அவர்களை அப்பாலை வனத்தில்விட்டுச் சென்றபின் ஹஸ்ரத் இஸ்மாயில் (அலை.) அவர்கள் தண்ணீர்தாகத்தால் கஷ்டப்படுங்கால் ஹாஜராநாயகி அவர்கள் தண்ணீர் தேடிக்கொண்டு 'ஸபா' 'மர்வா' என்னும் குன்றுகளுக்கு மத்தியில் ஓடினார்கள். அதுசமயம் ஹஸ்ரத் இஸ்மாயில் (அலை.) அவர்களுடைய காலுக்கடியிலிருந்து நீரருவி ஒன்றுண்டாகி தண்ணீர்பெருக ஆரம்பித்தது. அதுதான் இன்றைக்கு 'ஜம்ஜம்' என்னும் திருப்பெயருடன் விளங்கி வருகிறது. ஹஸ்ரத் இஸ்மாயில் (அலை) அவர்கள் போதிய பிராயத்தை அடைந்தவுடன் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும் மக்காமாநகர் விஜயஞ்செய்து வாசம் புரிய ஆரம்பித்தார்கள். அதுபொழுதுதான் மினாவில் தங்களது அருமைப் புதல்வரான ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களை ஆண்டவனுக்காகப் பலிகொடுக்கத் துணிபு கொண்டார்கள். எனவே இந்த மினா, சபா மர்வா, மக்கா முதலிய புண்ணிய பூமிகளெல்லாம் ஹஜ்ஜின் பிரதான ஸ்தலங்களாகவும் அடையாளங்களாகவும் இடம்பெற்றிருக்கின்றன. எனவே, ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் அங்கு கொணர்ந்துவிடப்பட்டதிலிருந்தேதான் இப்புண்ணியஸ்தலமாகிய மக்காவின் சரித்திரம் ஆரம்பமாகின்றது.

கஃபாவின் நிர்மாணம்

சரித்திர ஆராய்ச்சி நிபுணரான 'தகியுல் பாஸீ' அவர்களின் கூற்றுப்படி கஃபத்துல்லாவானது பலமுறை கட்டப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் எத்தனைமுறை கட்டப்பட்டதென்பதில் பலத்த அபிப்பிராயபேதமிருந்து வருகிறது. முதலாவதாக மலக்குகள் கட்டியதாகவும் இரண்டாவது ஆதம் (அலை.), 3-வது அவர்கள் மக்கள், 4-வது ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.), 5—வது அமாலிக்கா, 6-வது ஜர்ஹம், 7-வது குஸையிப்னுகிலாப், 8-வது குரைஷிகள், 9-வது அப்துல்லாஹிப்னு ஜுபைர், 10-வது ஹஜ்ஜாஜிப்னு யூசுப் ஆகியோர்களால் 10 முறை கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் மலக்குகள், ஹஸ்ரத் ஆதம் (அலை.), அவர்களது சந்ததிகள் இன்னோர் கட்டியதற்கு குர்ஆன், ஹதீதுகளிலொன்றும் ஆதாரம் காணப்படவில்லை. ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களால் கட்டப்பட்டதென்பது குர்ஆன் ஹதீதுகளைக்கொண்டு ஸ்திரப்படுத்தப்படுகிறது. அதாவது, "இப்ருஹீமும் இஸ்மாயிலும் கஃபத்துல்லாஹ்வின் சுவர்களை உயர்த்தியபோது, எங்கள் ரக்ஷகா! எங்கள் ஊழியத்தை ஏற்றுக்கொள்வாயாக! நிக்ஷ்யமாக நீ கேள்க்கிறவனுகவும் அறிகின்றவ

ஞகவும் இருக்கின்ருய் (எனப் பிரார்த்தனே புரிந்தார்கள்)'' என்பதே (அல்குர்ஆன்.) "ஹஸ்ரத் இப்ருஹீம் நபி (அலே.) முதன் முதலாக மக்காவுக்கு வந்தபோது அப்புனித ஸ்தலம் எவ்வாருன கட்டடமுமில்லாது செம்மண்மேடாக இருந்தது'' (புகாரீ.)

அப் பரிசுத்தஸ்தலத்தில் தொழுகிறவர்களுக்காகவும் பிரதக்ஷிணே செய்பவர்களுக்காகவும் ஒரு கட்டடம் நிர்மாணிக்கும்படி ஹஸ்ரத் இப்ருஹீம் (அலே.) இஸ்மாயில் (அலே.) ஆகிய இருவருக்கும் கட்டளே பிறந்தது. அவ்விருவரும் மிக மகிட்சியுடன் தெய்வக்கட்டளேயை நிறைவேற்றிவைக்க முன்வந்தார்கள். இங்கு ஓர் விஷயத்தைக் கவனத்திற்குக் கொண்டுவருதல் அத்தியாவசியமாகும்: ஹஜ்ரத் இஸ்மாயில் (அலே.) அவர்களே ஆரம்பத்தில் அந்த இடத்தில் கொணர்ந்து விட்டபொழுது ஹஸ்ரத் இப்ருஹீம் (அலே.) பிரார்த்தனே புரிந்ததாக ஏற்கனவே கூறியிருக்கிறேம்; அப்பிரார்த்தனேயில், சங்கை பொருந்திய உமது வீட்டண்டை தமது அருமைச்சிசுவை விட்டிருப்பதாகக் கூறியிருக்கின்ருர்கள்; மேலும் ஆண்டவனுடைய வணக்கத்திற்காக முதன்முதல் நிர்மாணிக்கப்பட்ட கட்டடமும் இதுதானென்றும் கூறப்பட்டிருக்கிறது. எனவே ஹஸ்ரத் இப்ருஹீம் (அலே.) அவர்களுக்கு முன்னே பைத்துல்லாஹ்வின் கட்டடம் அங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்ததாகத் தெரிந்துகொள்கிறேம். ஹஸ்ரத் ஆதம் (அலே.) அவர்களால் கட்டப்பட்டிருந்த கட்டடம் ஹஸ்ரத் நூஹ் (அலே.) அவர்களின் உகாந்த வெள்ளத்தில் இடிந்து தரையோடு கிடந்ததென்றும் அந்த அஸ்திவாரத்தைக் கண்டுபிடித்தே ஹஸ்ரத் இப்ருஹீம் (அலே.) கட்டடம் நிர்மாணஞ் செய்தார்களென்றும் முபஸ்ஸிரீன்கள் கூறியிருக்கின்ருர்கள்.

ஹஸ்ரத் இப்ருஹீம் (அலே.) அவர்களால் கட்டப்பட்ட கட்டடம் மேல் முகடுபோடப்படாது சர்வ சாதாரணமாகவே இருந்தது. எனவே நான்கு புறங்களும் சுவர் வைக்கப்பட்டு பூமி மட்டத்தில் கிழ்புறத்திலும் மேல்புறத்திலும் இரண்டு வாயல் விடப்பட்டிருந்தது. கருங்கற்களேக்கொண்டு மண்ணிஞல் கட்டப்பட்டு நாற்புறச்சுவர்கள் கை முழத்தால் ஒன்பது முழம் உயரமுடையதாகவும், கிழ்புறச் சுவற்றின் நீளம் 33 முழமும் வடசுவர் 22 முழமும் மேற்குச்சுவர் 32 முழமும் தெற்கு 20 முழமுடையதாகவும் இருந்தது. கட்டட நிர்மாணிப்பின்போது ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலே.) அவர்கள் கற்களே எடுத்துவந்து கொடுப்பதை ஹஸ்ரத்இப்ருஹீம் (அலே.) அவர்கள் பெற்று சுவரெழுப்புவார்கள். கட்டடம் சற்று உயர்ந்துவிட்டவுடன் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலே.) கொணர்ந்து கொடுத்த ஒரு கல்லே சுவற்றின் ஓரத்தில் வைத்து அதன்மீதேறிக் கொண்டு கட்டட நிர்மாணிப்பு வேலேயீடுபட்டிருந்தார்கள். அக்கல்லானது அல்லாஹ்வின் அனுக்கிரகத்தால் சுவறின் உயரத்திற்குத் தக்கவாறு உயர்ந்து கொண்டும் கிழே இறங்கிக் கொண்டு மிருந்தது. கடைசியாக கட்டடவேலே முடிந்தவுடன் மாண்புமிக்க இக்கல்லே ஒரு பக்கத்தில் எடுத்து வைத்துவிட்டார்கள். இது பொழுது அக்கல் "மகாமெஇப்ருஹீமி'ல்பத்திரமாக வைக்கப்பட்டிருப்பதுடன் அதன்மீது ஓர்உயரிய போர்வையும் போர்த்தப்பட்டிருக்கிறது. ஹஸ்ரத் இப்ருஹீம் (அலே.) அவர்களால் கட்டப்பெற்ற கட்டடம் விழுந்து விடவே 'அமாலிகா' என்பவர் அக்கட்டடத்தைப் புதுப்பித்து அதன் உயரத்தையும் அதிகப்படுத்தி வைத்ததாக 'அஜ்ரகி' என்னும் சரித்திராசிரியர் ஹஸ்ரத்அலீ (ரலி.) அவர்களேத் தொட்டும் றிவாயத்துச் செய்திருக்கிருர்.

பின்னர் 'அமாலிக்கா'வால் கட்டப்பட்ட கட்டடம் விழுந்துவிடவே 'ஜர்ஹம்' என்பவர் அதனேப் புதுப்பித்து வைத்தார். (மஸ்ஊதீ).

'குஸையிப்னு கிலாப்' என்பவர்கள் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் மூதாதையாகும்; அவர்களுடைய காலத்தில் பொதுஜனங்களிடமிருந்து நிதி வசூலித்து கஃபத்துல்லாவை முற்றும் புதுப்பித்துக் கட்டி முடித்தார்கள். இக்கட்டடம் முன்னேயதைவிட உயரமாக இருந்ததுடன் 'தூம்' என்னும் மரம் ஈச்சங்கம்பு இவைகளிஞல் முகடிடப்பட்டதாகவுமிருந்தது.

பின்னர் குரைஷியர்கள், ஹஸ்ரத் இப்ருஹீம் (அலே.) அவர்களுக்கு 1275 வருடங்களுக்குப் பின் கஃபத்துல்லாவைப் புதுப்பித்துக் கட்டமுற்பட்டனர். அதுசமயம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு இப்னு இஸ்ஹாக் அவர்களின் சொற்படி வயது 35; மற்றுஞ்சிலர் 25 வயதென்றும் கூறியிருக்கின்ருர்கள். அது பொழுது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் அப்பாஸ் (ரலி) அவர்களுடன் சேர்ந்து தங்கள் தோள்மீது கற்களேச் சுமந்துவந்து கட்ட

நிர்மாணிப்பு வேலைக்கு உதவிபுரிந்திருக்கின்றார்கள். (புகாரிவமுஸ்லிம்) குறைஷியர்கள் இவ்வாறு புதுப்பிப்பதற்கேற்பட்ட காரணமென்னவெனின், ஒரு ஸ்திரீ கஃபாவுக்கருகே அடுப்பெறித்துக்கொண்டிருந்தகாலை அவளறியாது நெருப்பான்து கஃபா ஷரீபின் போர்வையின் மீது தாக்கி மேல்முகடெறிந்து கற்களும் அணலினால் வெடித்தும் தெறித்தும் போயிற்று. மேலும் இதற்குமுன் பற்பல சமயங்களிலேற்பட்ட வெள்ளப்பிரவாகத்தின் தாக்குதல்களும் சுவர்களைப் பலஹீனப்படுத்தி விட்டிருந்தன.

குறைஷியர்கள் கட்டட நிர்மாணத்துக்காகப் பொது நிதி வசூலித்தபொழுது, புனிதக் கட்டடத்துக்காக வசூலிக்கப்படும் ரூபாயில் வட்டிப் பணம் கொள்ளை முதல் திருட்டுச் சொத்து முதலியவை ஒரு சிறிதேனுங் கலக்கக்கூடாதென உறுதி செய்துகொண்டிருந்ததால் வசூலான நிதி மிகவும் குறைவாகவே இருந்தது. அதிர்ஷ்டவசமாக மக்காவின் துறைமுகமான ஜித்தாவில் ரூம்தேச வியாபாரியின் கப்பலொன்று கரைதட்டி கப்பலுக்குச் சேதமேற்பட்டுப் போயிற்று. இந்நிலைமையில் குறைஷ் தலைவரான 'வலீதிப்னுமுகைறு' என்பவர் கஃபா நிர்மாணிப்புக்காக மரங்கள் வாங்கி வருவதற்காக ஜித்தா வந்து சேர்ந்து அக்கப்பலின் மரச் சாமான்களை சகாயமான விலைக்கு வாங்கிக்கொண்டு அக்கப்பலை யுடையவரின் அனுமதியின்மீது அதிலிருந்த ஒரு தச்சரையும் அழைத்துவந்து கட்டடத்தை இடித்து நிர்மாண வேலை ஆரம்பஞ் செய்தார்கள். ஏற்கனவே வசூலித்திருந்த நிதி குறைவாக இருந்ததால் ஹஸ்ரத் இப்றுஹீம (அலை.) அவர்களின் அஸ்திவாரத்தின்மீது ஏகதேசத்தில் கட்டி முடிக்க முடியாதெனக் கருதி வடபாகமாக ஏழு முழத்தை நீக்கிவிட்டு பாக்கி இடத்தில் கட்டடத்தைப் பூர்த்தி செய்தார்கள். அதுபொழுது மக்கமா நகரிலுள்ள எல்லாக் கூட்டத்தினரும் அச்சேவையிலீடுபட்டு ஊழியம் புரிந்து வந்தார்கள். ஹஜருல்அஸ்வதை வைத்துக் கட்டும் இடம் வந்தவுடன் அதனை எடுத்து அதற்குறிய இடத்தில் வைக்கும் பாக்கியம் தங்கள் தங்களுக்குக் கிடைக்கவேண்டுமென ஒவ்வொரு கபீலாக்காரர்களும் எண்ணிச் சச்சரவு செய்து கொண்டதால், பெரும்போர் நிகழ்வதற்குள்ள சந்தர்ப்பமு மேற்பட்டுப் போயிற்று. கடைசியாக மறுநாள் காலை ஹறம் ஷரீபிற்கு முதன் முதல்வந்து சேரும் முதல் நபரை மத்தியஸ்மாக ஏற்படுத்தி அவர் யோசனைப்படி அச்சச்சரவை நீக்கிக்கொள்வதென முடிவுசெய்து கொண்டார்கள். இம்மாபெரும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கப்போகிறதோ வென்பதை அரப் நாடே எதிர்பார்த்து நின்றது. கடைசியாக செய்யிதுல்அமீன் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் அதிகாலையில் முதன் முதல் ஹறம் ஷரீபினுட் பிரவேசித்தார்கள். பின்னர் யாவரும்வந்து குழுமி தங்களுக் கிடையேயுள்ள சச்சரவை நீக்கிவைக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். எம்பெருமானார் சமாதானத்தூதர் (ஸல்.) அவர்கள் ஆலோசனை புரிந்து மக்கமாநகரிலுள்ள ஒவ்வொரு கபீலாவிலிருந்தும் ஒவ்வொருவரைத் தெரிந்தெடுக்கும்படியும் ஒரு துப்பட்டி கொண்டுவந்து அதில் அக்கல்லைவைத்து அத்துப்பட்டியின் ஓரங்களை அத்தலைவர்களைப் பிடித்துக்கொண்டு உயர்த்தும்படியும் செய்து அதற்குறிய இடம்வந்தவுடன் அத் தலைவர்கள் யாவரிடமும் உத்திரவுபெற்று தங்கள் திருக்கரத்தால் அதனைத் தூக்கிவைத்து விட்டார்கள். இஃது யாவரும் சேர்ந்தே தூக்கி வைத்ததுபோலாய்விட்டதால் அனைவரும் திருப்தியடைந்து சந்தோஷ மகிழ்ச்சி கொண்டார்களாதலின் பின்னர் யாவரும்சேர்ந்து ஒற்றுமையாக மற்றவேலைகளைச் செய்து முடித்தார்கள். ஏற்கனவே தலைவாயல் பூமிமட்டத்தோடு இருந்துகொண்டிருந்தது. பின்னர் குரைஷியர்களும் அவர்களிடம் அனுமதி பெற்றவர்களுமட்டுமே உட் செல்லவேண்டுமென்பதை உத்தேசித்து தலைவாயலையும் உட்புறத்தையும் ஓராள்மட்டத்திற்குமேல் உயர்த்தி தேவையான நேரத்தில் ஏணிப்படி வைத்து ஏறுவதற்கு வசதிசெய்து விட்டார்கள்; கற்களைக்கொண்டு மேல் முகடு போட்டார்கள்; உட்புறத்தில் இரண்டு வரிசையாக ஆறு தூண்களை நிப்பாட்டினார்கள். இவர்கள் நிர்மாணித்த கட்டடத்தின் உயரம் 18 முழமாகும்.

நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் மக்காவை ஜெயித்தபின்னர் கஃபாவினுள் வைக்கப்பட்டிருந்த விக்கிரகங்களையெல்லாம் அப்புறப்படுத்தி சுத்தமாக்கி வைத்துவிட்டு, ஹஸ்ரத் ஆயிஷா நாயகி (ரலி.) அவர்களை நோக்கி "உன் வர்க்கத்தினரான அராபியர்கள் சமீபத்தில்தான் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியிருக்கின்றார்கள்; ஜாஹிலிய்யத்தான காலத்தைவிட்டு திரும்பி சமீபத்தில்தான் நேர்வழி பெற்றிருக்கின்றார்கள்; அவ்வாறில்லாதிருக்கின் கஃபத்துல்லாவை

நூலக காப்பக

இடித்து அதன் மட்டத்தைத் தரையுடன் செய்து அதற்கு கீழ்புறம் ஒரு தலைவாயலையும் மேற்கில் ஒருவாயலையும் ஏற்பாடுசெய்து ஹதீமுடையபக்கல் ஏழு முழம் அதிகப்படுத்தியும்விடுவேன்; ஏனெனின் குரைஷிகள் பைத்துல்லாவின் நிர்மாணிப்பின்போது அதனைக்குறைத்துவிட்டார்கள்" எனக் கூறினார்கள். மற்றுமோர் ஹதீதில், "யான் அஸ்திவாரத்தைப் பிரித்து ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களால் அஸ்திவாரமிடப்பட்டதைக் காண்பிப்பேன்" என அறிவித்ததாகவும்கூறப்பட்டிருக்கிறது. ஆனால் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது காலத்திலாவது நான்கு குலபாக்களின் காலத்திலாவது யாதொருவிதமான மாறுதலும் செய்யப்படாதிருந்தது.

அப்துல்லாஹிப்னுஜுபைர் (ரலி.) அவர்கள் மாபெரும் சஹாபியும், ஆயிஷாநாயகி (ரலி.) அவர்களின் சகோதரியான அஸ்மா (ரலி.) அவர்களின் புதல்வருமாவார்கள். எஜீதினுடைய குழப்பகாலத்தில் அவரிடம் பைஅத்துச்செய்ய மறுத்தவர்களில் இவர்களுமொருவராவார்கள். அவர்கள் அதுசமயம் மக்காவைத் தங்கள்வசப்படுத்திக்கொண்டிருந்தார்களாதலின் எஜீதினுடைய ஒருசேனை ஹஸ்ரத் அவர்களுடன் மக்கமாநகரில் ஹிஜ்ரீ 64-ல் போர்புரிந்தக்கால் அவ்வமயம் எஜீதுடைய சேனை 'மின்ஜனீக்' என்னும் ஒருவகை யுத்த ஆயுதத்தை உபயோகப்படுத்தி அதற்குள் கல்வைத்து எறிந்ததால் அக்கற்கள் கஃபத்துல்லாவின் சுவர்கள்மீதுபட்டு கட்டடத்தைப் பலஹீனப்படுத்தி விட்டது. மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னுஜுபைர் (ரலி.) அவர்களுடைய வேலையாட்களிலொருவன் தவறுதலாய் அவர்களின் கூடாரத்தைக் கொழுத்திவிட்டதால் அந்த நெருப்பு கஃபத்துல்லாஹ்வின் போர்வையையும்பற்றிப் பிடித்து போர்வைகளும் உள்ளாவிருந்த தேக்குமரங்களும் எறிந்துபோய் விட்டது. அது சமயம் எஜீது மரணமாய்விட்டதால் மக்கமா நகரை முற்றிகையிட்டிருந்த சேனையும், தலைவனை ஹஸீனிப்னு நமீர் என்பவனும் ஷாம்தேசஞ் சென்றுவிட்டார்கள். உடனே ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னுஜுபைர் (ரலி.) அவர்கள் ஏகதேசத்தில் கலீபாவாகத் தெரிந்தெடுக்கப்பட்டதால் ஹிஜாஸ், எமன், குராஸான், இராக் முதலிய தேசங்களெல்லாம் அவர்கள் கைவசமாயிற்று. ஷாமும் மிஸ்ரும் சிறிதுகாலம் எஜீதின் குமாரனை மஆவியா வசமிருந்ததாயினும் சீக்கிரத்தில் அவரும் மரணமாய்விட்டதால் இவ்விருதேசங்களும் ஹஸ்ரத் அவர்களது ஆக்ஷிக்குட்பட்டுவிட்டது. அது சமயம் கஃபத்துல்லாவை இடித்துச் சுத்தப்படுத்தி நபிகள்நாதர் (ஸல்.) அவர்கள் ஹஸரத் ஆயிஷா நாயகி (ரலி.) அவர்கள்பால் கூறியிருந்ததற்கேற்ப, ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களின் அஸ்த்திவாரத்தின் மீது கட்டிமுடித்து ஹதீம் பக்கல் குரைஷியர்கள் விட்டிருந்த 7 முழத்தையும் சேர்த்துக்கொண்டு உட்புறத்தில் ஒரே வரிசையாக மூன்று தூண்கள் அமைத்து மேல்தளத்திற்குச் செல்வதற்கு 'இராக்கி' மூலையில் படியும் அமைத்துவைத்தார்கள். இவர்களால் கட்டப்பெற்ற கட்டடத்தின் உயரம் 27 முழமுடையதாக யிருந்தது. பின்னர் அப்துல்மலிக் கிப்னுமர்வான் என்பவர் ஷாம் மிஸர் தேசங்களை ஜெயித்துத் தம் வசப்படுத்திக் கொண்டபொழுது மக்கமா நகர் மீதும் படையெடுப்புச் செய்துஹஜ்ஜாஜிப்னு யூசுபை அதற்கு தலைவராக்கியிருந்தார். இவர்கள் மக்கமா நகரை முற்றுகையிட்டு ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னுஜுபைர் (ரலி.) அவர்களையும் பிடித்துக் கொன்றுவிட்டு அவர்கள் கஃபத்துல்லாவில் செய்த மாறுதலைப்பற்றி அப்துல்மலிக்குக்குத் தெரியப்படுத்தினார்கள். அவர் ஹஜ்ரத் இப்னுஜுபைர் (ரலி.) அவர்களுடைய பெயர் நாமம் விளங்கக்கூடாதென்னும் கெட்டெண்ணத்தால் இவர்களால் அதிகப்படுத்தப்பட்டிருந்த பாகத்தை இடித்துவிட்டு குப்பார்கள் காலத்திலிருந்தவாறு அமைத்துவிடுமாறு ஹஜ்ஜாஜிப்னுயூசுபுக்கு உத்திர விட்டுவிட்டார். அதற்கேற்ப ஹஜ்ஜாஜும் மேற்குவாயலை அடைத்துவிட்டு ஹஸ்ரத் இப்னுஜுபைர் (ரலி.) அதிகப்படுத்திய பாகத்தை இடித்து ஹதீமைப் பிரித்துவிட்டு அவ்விடத்தில் ஒரு சுவற்றைவைத்து அடைத்து பாக்கியுள்ள மூன்று சுவர்களையும் ஹஸ்ரத் இப்னுஜுபைர் (ரலி.) கட்டியவிதமே வைத்துவிட்டார். ஆனால் தலைவாயலைமட்டும் குப்பார்கள் செய்ததுபோல் உயரத்திலாக்கிவிட்டார். இச்சம்பவம் ஹிஜ்ரீ 74-ம் ஆண்டில் நடைபெற்றதாகும். அதன்பின் அப்துல்மலிகிப்னுமர்வான் ஹஜ்ஜு செய்வதற்காக மக்கமா நகர் வந்தபொழுது கஃபத்துல்லாஹ் கட்டட வரலாறுகளை எல்லாம் விசாரணை செய்து, இப்னுஜுபைர் தங்களிஷ்டப்படி செய்ததாக எண்ணிக்கொண்டு இவ்வாறு இடிக்கும்படி சொல்லிவிட்டேன்;

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா நாயகி (ரலி.) அவர்களிடம் கூறியவிதமாகச் செய்திருப்பதாய் ஏற்கனவே எனக்குத் தெரிந்திருந்தால் ஒருக்காலும் இடிக்கும்படி செய்திருக்கமாட்டேனென வருத்தமாகக் கூறினார்.

அதன்பின் ஹாரூன் ரஷீது பாஷா அவர்கள் கஃபத்துல்லாவை ஹஜ்ரத் இப்னு ஜுபைர் (ரலி.) கட்டியவிதமாய் மாற்றியமைத்து விடலாமென யோசனை செய்தார்களாயினும் இமாம் மாலிக் (ரஹ்.) அவர்கள் அவ்வாறு செய்ய வேண்டாமெனத் தடுத்து, இருக்கிற கட்டடத்தை வீணில் இடித்துப் புதுப்பித்து மாற்றியமைக்க வேண்டாமென்றும், இவ்வாறே செய்துகொண்டுபோனால் கஃபத்துல்லாவானது அரசர்களின் விளையாட்டு ஸ்தலமாக ஆய்விடுமென்றும், இதனால் மக்களின் மனதில் கஃபத்துல்லாஹ் சம்மந்தமாய் ஏற்பட்டிருக்கும் பக்திக்கு ஹானி நேரிட்டுவிடுமென்றும் சமாதானங் கூறினார்கள்.

ஹஸ்ரத் இப்னுஜுபைரும் ஹஜ்ஜாஜும் கட்டிவைத்த கட்டடம் ஹிஜ்ரீ 1039-ம் ஆண்டு வரை பழுது மராமத்து செய்யப்பட்டு வந்ததே தவிர வேறு எவ்வித மாறுதலும் செய்யப்படாது அவ்வாறே இருந்துவந்தது. ஹிஜ்ரீ 1040-ம் ஆண்டில் துருக்கி சுல்தான்கள் கஃபாவை பழுது பார்க்கக்கருதி வெண்கலத்தினால் செய்யப்பட்ட பட்டைகளினால் தற்காப்பு செய்து வைத்தார்கள். 1041-ம் வருடத்தில் பெரியதோர் மழை பெய்தபொழுது ஆலங்கட்டியும் விழுந்தது. அதுபொழுது ஏற்பட்ட வெள்ளப் பிரவாகத்தின் காரணமாய் மேற்புறச் சுவர்களைத் தவிர மற்ற சுவர்களெல்லாம் இடிந்து விழுந்துவிட்டது. இவ்விஷயம் துருக்கி தேசாதிபதி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டவுடன் சுல்தான் நான்காவது முராதுகான் அவர்கள் மிஸ்ரிலிருந்து நிபுணர்களையும் வேலையாட்களையும் அனுப்பி அடியோடு பிரித்து பலமாக உறுதியுள்ளதாய்க் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். இவ்வாறு செய்வதற்கு ஏராளமான தங்க நாணயம் செலவானதாகக் கூறப்படுகிறது. அதுமுதல் இதுவரை சாதாரணமாகப் பழுது பார்ப்பதைத்தவிர வேறு எவ்வித மாறுதலுமில்லாதிருந்து வருகிறது.

கஃபத்துல்லாவைச் சுற்றிலும் நான்குபக்கங்களிலும் மஸ்ஜித் கட்டி முடிக்கப்பெற்ற விபரமும், நடுமத்தியில் முத்தம் அமைக்கப்பட்டிருக்கும் விஷயமும் ஏற்கனவே கூறியிருக்கிறோம். அம்முத்த வெளியின் நடுவில் கஃபத்துல்லா அமைந்துளது. தற்பொழுதுள்ள அதன் உயரம் 15 கஜமாகவும் வடக்குச் சுவற்றின் நீளம் 10 கஜமாகவும் மேற்குச் சுவற்றின் நீளம் 12 கஜமாகவும் தெற்குச்சுவர் 10 கஜ நீளமுடையதாகவும் கிழக்கு சுவற்றின் நீளம் 12கஜமுடையதாகவுமிருக்கிறது. கிழக்குச் சுவற்றில் அதன் தலைவாயல் பூமிமட்டத்திலிருந்து இரண்டுகஜ உயரத்திலிருக்கின்றது. நிலையும் கதவும் வெள்ளிப் பட்டையால் அலங்கரிக்கப்பட்டு கதவில் தங்கமுலாமும் செய்யப்பட்டிருக்கிறது. தென் கிழக்கு மூலையில் " ஹஜருல் அஸ்வத் " புதைக்கப்பட்டுளது; அங்கிருந்துதான் தவாப் ஆரம்பிக்க வேண்டும். கஃபா நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கல்லானது நீலநிறமுடைய உறுதியான கற்பாறைகளினாலாகும். அதன் உட்புறத்தில் உறுதியான சந்தன மரங்களினால் மூன்று தூண்கள் நிப்பாட்டப்பட்டுளது. வடகிழக்கு மூலையில் மேல் தளத்திற்குச் செல்லும் படிகள் அமைக்கப்பட்டு அதற்கு வாயலுமிருக்கிறது. அதற்கு 'பாபுத்தௌபா' என்று சொல்லப்படுகிறது. அவ்வாசல்மீது ஜரிகை வேலைப்பாடு செய்யப்பட்ட பட்டுப்போர்வை யொன்று தொங்கவிடப்பட்டிருக்கிறது. கீழ் பூமியிலும் உட்புறச் சுவர்களிலும் மார்பிள் கற்கள் ஒட்டப்பட்டிருக்கின்றது. தளத்தின் உட்புறத்தில் கலிமாக்களும் குர்ஆன் வாக்கியங்களும் நெய்யப்பட்ட சிவப்புப் பட்டுப் போர்வை தொங்கவிடப்பட்டிருக்கிறது. மேல் தளம் மார்பிள் கல்லினாலேயே ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கிறது. தளத்தின் மழைத்தண்ணீர் வெளியாவதற்காக தங்கத்தினால் செய்யப்பட்ட தூம்பு அமைக்கப்பட்டிருக்கிறது. இது சுல்த்தான் அப்துல் மஜீதுகான் அவர்கள் பல்லாயிரக் கணக்கான தங்க நாணயம் செலவிட்டு செய்தனுப்பியதாகும். அதன் ஞாபகார்த்தமாய் அவர்களின் திருநாமமும் அதில் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் பற்பல அரசர்களாலும் சன்மானமாக விலையுயர்ந்த பற்பல சாமான்கள் அனுப்பப்படுவது வழக்கமாகவுமிருந்தது. ஹஜ்ரத் உமர்கத்தாப் (ரலி.) அவர்களும் கிஸ்ராவினுடைய பட்டணங்களை ஜெயித்தகாலத்தில் தங்கத்தினாற் செய்யப்பட்ட இரு பிறைகளை சன்மானமாக அனுப்பிவைத்தார்கள். இச்சாமான்களெல்லாம் கஃபத்துல்லாஹ்வின் உட்புறத்தில் தொங்கவிடப்பட்டிருக்கிறது. இவைகள் கஃ

பத்துல்லாஹ்விற்கென்றே அனுப்பப்பட்டிருந்த தால் அந்த வக்பை வேறு எவ்வகையிலும் உப யோகித்துக் கொள்ளாமல் அதன் மராமத்து வேலைக்குத் தேவைப்படும் காலங்களில் கொஞ் சங் கொஞ்சமாக எடுத்து தேவைக்கேற்றவாறு செலவிடப்பட்டு வருகிறது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கஃபத்துல்லாஹ்வினுட் பன் முறையும் தொழுகை நிறைவேற்றியிருக்கின் றார்கள். அவ்வாறு தொழுத இடத்தில் அடை யாளமு மிடப்பட்டிருக்கிறது. உள்ளால் செல் வதற்குள்ள தலைவாயல் 2 கஜ உயரத்திலிருப்ப தால் உட்செல்வதற்காக ஏணி வைக்கப்பட் டிருக்கிறது.

கஃபத்துல்லாவுக்கு வெளிப் பக்கங்களில் போர்வைகள் போடும் வழக்கம் ஆரம்பமுத லிருந்து வருகிறது. முதன் முதலாகப் போ ர்வை போட்டவர் அபூகர்ப்அஸ்அத் என்பவ ராவர். இவர் ஹிஜ்ரத்துக்கு இரண்டு தலை முறைக்குமுன் காலஞ் சென்றவராவார். பின் னர் குரைஷியர்கள் அக்கட்டடத்தைப் புதுப் பித்தபொழுதும் போர்வைகள் போர்த்தியிருக் கின்றார்கள். நபிகள் நாதர் (ஸல்.) அவர்களும் குலபாயே ராஷிதீன்களும் உயர்ந்த நூலினால் நெய்யப்பட்ட உயர்ந்த போர்வைகளைப் போர் த்தியிருக்கின்றார்கள். அதன்பின் உயர்ந்தபட்டு களினால் போர்வை போடும் வழக்கமேற்பட்டு சில வருடங்களில் மூன்றுமுறை மாற்றி யமை த்து மிருக்கின்றார்கள். ஹிஜ்ரீ 850-ம் ஆண்டில் மிஸர் சுல்த்தானான சாலிஹ் இஸ்மாயீல் என் பவர் மிஸ்ரின் உள் நாட்டிலுள்ள மூன்று கிரா மங்களின் வருமானத்தை போர்வைகளுக்காக வக்பு செய்திருந்தார். துருக்கி சுல்தானான சுலை மான்பின்ஸலீம்கான் அவர்கள் இவை போதா தெனக் கருதி மற்றும்பல கிராமங்களை கிரயத் துக்குவாங்கி அந்த வக்புடன் சேர்த்துவிட்டார் கள். இவைகளின் வருவாயினால் கஃபாவின் வெளிச்சுவர்களுக்குக் கருப்புப் பட்டினாலும், உட்சுவர்களுக்குச் சிவப்புப் பட்டினாலும், எம் பெருமானார் நபிகள் திலகம்(ஸல்.) அவர்களின் து ரவ்ளாஷரீபின் குப்பாவுக்கு பச்சைப் பட்டினா லும் மக்காமதீனாவின் மிம்பர்கள் மகாக இப்ரா ஹீம் இவைகளுக்கு பற்பல வர்ணப் பட்டுகளா லும் அழகிய போர்வைகள் தயாரித்துப் போர்த் தப் பட்டுவந்தது. அந்தந்தஇடங்களுக்குப்போர்த் தப்படும் போர்வைகளில் அதததற்கு நேர்பா டான குர்ஆன் ஆயத்துகளும் கலிமாக்களும் நெசவிலேயே கோர்த்து நெய்யப்பட்டிருந்தது மனக்கவர்ச்சியை அளிக்கக்கூடியதாக இருந் தது.

ஹிஜாஸின் தற்கால அரசரான சுல்த்தான் இப்னு ஸுஊது அவர்கள் ஹறம் ஷரீபின் பரி பாலனத்தை யேற்றபின் சில அபிப்பிராயபே தத்தால் மிஸ்ரீ போர்வை வருவது நின்றுபோயி ருப்பதால் சுல்தான் அவர்கள் இந்தியாவிலிரு ந்து நெசவுத்தொழில் நிபுணர்களைத் தருவித்து உயர்ந்த கருப்பு நூலினால் கலிமாக்களோடுநெய் யப்பட்டு கஃபத்துல்லாஹ்வின் வெளிப்புறங்க ளில்மட்டும் தொங்கவிடப்பட்டு வருகிறது. வழக்கம்போல் தலைவாயலிலுள்ள போர்வை யின்மீது ஜரிகைக் கம்பிகளால் ஆயத்துகளும் கலிமாக்களும் நெய்து போடப்பட்டு வருகிறது.

ஹதீம்

'ஹதீம்' என்னும் ஸ்தலம் பைத்துல்லாவி லிருந்து ஒதுக்கப்பட்டுப் போயிருப்பதாக ஏற் கனவே கூறியிருக்கிறோம். அந்த இடம் கஃபத் துல்லாஹ்வுக்கு வடக்கில் அரைமுட்டை வடி வமாக மார்பிள் கற்களினால் சுவர் போடப்பட்டு கீழ்பூமியிலும் அக்கற்கள் பரவப்பட்டு கஃபா வின் ஓரமாக இருபுறங்களிலும் அதனுட் செல் வதற்குப் பாதைகள் ஏற்படுத்தப்பட்டுமிருக்கி றது. அதன் நீளம் கஃபத்துல்லா முதல் வட புற சுவர்வரை உட்கூடு 7½-முழமிருக்கிறது. தவாப் செய்கிறவர்கள் இதற்கு வெளியில்தான் செல்லவேண்டும். இச் சுவற்றுத் தலையில் விளக்குகளைக்கொண்டு அலங்கரிக்கப்பட்டிருக் கிறது கண்களைக் கவரக்கூடியதாயிருக்கிறது.

கஃபாவின் தலைவாயலுக்கு வடக்கே வெளிப் புறச்சுவர் ஓரமாக மூன்றுபேர்தொழுவதற்குப் போதிய ஒரு பள்ளமிருக்கிறது. அதற்கு 'மஃஜன' என்றுபெயர். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் கஃபா நிர்மாணிப்பின்போது அங்கு சேறு குழைத்துக் கொண்டதாகவும், அந்த இடத்தில்தான் ஹஸ்ரத்ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களுக்குத் தொழுது காட்டியதாகவும் கூறப்படுகிறது.

மகாமஇப்றாஹீம் (அலை)

இந்த ஸ்தலம் கஃபத்துல்லாவிற்கு கிழக்கே மதாபுக்கு வெளியிலுள்ளது. குர்ஆன்ஷரீபில் இந்த இடத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட் டுளது. ஆனால் ஒரு சிலர் ஹஜ்ஜுடைய கிரி யைகளை நிறைவேற்று மிடங்களுக்கெல்லாம் 'மகாமஇப்றாஹீம்' எனச் சொல்லலாமெனக்

கூறியிருக்கின்றனரெனினும் குறிப்பிட்ட இந்த இடத்திற்குத்தான் சொல்லப்படுமென்பதை அநேக அத்தாட்சிகளைக் கொண்டு ஸ்திரப் படுத்தியிருக்கின்றார்கள். ஒரு முறை ஹஜ்ரத் உமர்கத்தாப் (ரலி.) அவர்கள் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களை விழித்து, தாங்கள் மகாமஇப்ராஹீமில் நின்று தொழுவது உசிதமாக இருக்குமெனக் கருதுவதாக விண்ணப்பித்துக்கொண்டார்கள். அது சமயம் "நீங்கள் தொழுவதற்கு மகாமஇப்ராஹீமில் ஒரு இடத்தைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள்" என்னும் திருவாக்கியம் இறங்கிற்று. அதற்குப் பின் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தவாப் செய்தபின் மகாமஇப்ராஹீமில் நின்றுதொழுவார்கள். இது விவரங்களை புகாரியும் இப்னுஜரீரும் றிவாயத்துச் செய்திருக்கின்றார்கள். இப்பொழுது அந்த இடத்தில் 6 தூண்கள் மீது ஒரு சிறியகுப்பா அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த 6 தூண்களில் மேற்குப் பக்கமாயுள்ள நான்கு தூண்களைச் சேர்த்து வெண்கலக் கராதி அடைத்து அதற்குள்ளால் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் கஃபத்துல்லா நிர்மாணிப்பின்போது ஏறி நிற்பதற்கு உபயோகப்படுத்திக் கொண்டிருந்த மாண்புமிக்க ஞாபகார்த்தக் கல் பத்திரப் படுத்திவைக்கப்பட்டிருக்கிறது. கிழக்குபுறமுள்ள இரண்டு அங்கணத்தில் தொழுகைக்காக இடவசதிசெய்து வைக்கப்பட்டிருக்கிறது.

ஜம்ஜம்கிணறு.

இக்கிணறு ஏற்பட்ட வரலாற்றின் விவரம் மேலே கூறப்பட்டிருக்கின்றது. ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களை மக்கமா நகரின் பூமியில் கொணர்ந்து விடப்பட்டிருந்தகாலை ஹஸ்ரத் அவர்களுக்கு தாகமேற்பட்டதால் ஹாஜரா நாயகி அவர்கள் தண்ணீருக்காக அங்குமிங்கும் அலைந்து திரிந்துபார்த்தும் தண்ணீர் கிடைக்காமையால் தவித்துக்கொண்டிருக்குங்கால் ஹஜ்ரத் ஜிப்ராயீல் (அலை.) தங்கள் குதிகாலை பூமியில் அழுத்தினார்கள். உடனே அங்கிருந்துதண்ணீர் வெளிவர ஆரம்பித்தது. தண்ணீர் வெளியிற் சென்று ஓடிவிடுமென ஹாஜரா நாயகி அவர்கள் மணலைக் கோலி அணைபோட்டார்கள். அவ்வாறு செய்யாது ஓடும்படி விட்டிருப்பார்களாயின் அஃதொரு அருவியாய்ப் போயிருக்கும் (புகாரி). இந்த ஊற்று அங்கேற்பட்ட பிறகுதான் ஜனங்கள் வந்து குடியேற ஆரம்பித்தார்கள். 'ஜர்ஹம்' கூட்டத்தாரும் அங்கு தண்ணீர் இருப்பதைக்கண்டு குடியேற ஆரம்பித்தார்கள். பின்னர் ஒரு சமயம் அன்னோர் கஃபாவினுள்ளிருந்த பொக்கிஷத்தைக் காப்பாற்றுவதற்காக அவைகளை அக் கிணற்றிற்குள்ளால் வைத்து மண்போட்டு மூடிவைத்திருந்தார்கள். இவ்வாறே சிலகாலம் சென்றுவிட்டதால் அந்தக்கிணறு இருந்த இடமே தெரியாது மறைந்துவிட்டது. நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் பாட்டனாரான ஹஸ்ரத் அப்துல் முத்தலிப் அவர்களின் கனவில் அந்த இடத்தின் குறிப்பு சமிக்கைசெய்யப்பட்டு அதனைத் தோண்டினார்கள். பெரும்பிரயாசையின் மீது ஊற்று வெளியாக ஆரம்பித்ததுடன் தங்கத்தினால் செய்யப்பட்ட இரண்டு மான்களும் கிடைத்தது. அது முதல் அக்கிணறு ஜனங்களுக்குப் பிரயோசனம்கொடுக்கக்கூடியதாக ஏற்பட்டுப்போயிற்று. இப்பொழுது அக்கிணறு மகாம இப்ராஹீமுக்கு தெற்கிலும் ஹஜருல் அஸ்வதுக்குக் கிழக்கில் 18 கஜதூரத்திலும் அமைந்துளது. அதன் மீது நச்சதுரமான உறுதியான கட்டடமொன்று கட்டப்பட்டு மேல்மாடியும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் கைபிடி சுவரும் தளவரிசையும் மார்பிள்கற்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அக்கட்டடத்தின் தென்புறத்தில் ஒரு தொட்டி அமைக்கப்பட்டு தண்ணீர் மொண்டு குடிப்பதற்கு வசதியும் செய்துவைக்கப்பட்டிருப்பதுடன் அதன் ஜன்னல்களிலும் கதவுகளிலும் சுல்த்தான் அப்துல்ஹமீதுகான் அவர்கள் பெயரும் அக்கிணறு ஏற்பட்ட வரலாறும் வரையப்பட்டிருக்கிறது.

ஜம்ஜம் தண்ணீரின் மேன்மை வரிசை விஷயமாய் "ஜம்ஜம் தண்ணீரானது சகல வியாதிகளுக்கும் ஔடதமாக இருக்குமென்றும், உலகிலுள்ள தண்ணீரிலெல்லாம் மேலான தண்ணீராகுமென்றும், அது பசித்திருப்போருக்கு உணவாகவும் வியாதிஸ்தருக்கு ஔடதமாகவு மிருக்குமென்றும் எனவே அத் தண்ணீர் எதற்காக குடிக்கப்படுகின்றதோ அந்தப் பிரயோசனத்தைக் கொடுக்கும்" என நபிகள் திலகம் (ஸல்.) அருள் செய்திருக்கின்றார்கள். இன்னும் இத்தண்ணீரின் வரிசை விஷயமாய் ஹதீதுஷரீப்களில் பலவாறு கூறப்பட்டிருக்கிறது. தவிர நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் நெஞ்சைப் பிளந்தபோதும் இந்தத் தண்ணீரைக் கொண்டுதான் ஹஸ்ரத் ஜிப்ராயீல் (அலை.) அதனைக் கழுவினார்கள்.

மஸ்ஜித் ஹறாமுக்கு விசித்திரமான வேலைப்பாடு செய்யப்பட்ட மெம்பரொன்று மகாம இப்றாஹீமுக்கு சற்று வடக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

ஹஜருல்அஸ்வத்

இக்கல்லானது, ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களின் ரிவாயத்துப் பிரகாரம் ஹஸ்ரத் ஆதம் (அலை.) அவர்களுடன் சுவர்க்கத்திலிருந்து இறக்கப்பட்டதாகும். நூஹ் (அலை.) அவர்கள் காலத்திலேற்பட்ட வெள்ளப் பிரளயத்தின் போது அல்லாஹ் தஆலா இதனை 'அபூகுபைஸ்' மலையில் பத்திரப்படுத்தியிருந்தான். ஹஸ்ரத் இப்றாஹீம் கலீல்(அலை.) அவர்கள் கஃபத்துல்லாவை நிர்மாணிக்கும்போது ஹஸ்ரத்ஜிப்ரயீல் (அலை.) அக் கல்லைக் கொணர்ந்து கொடுத்தார்களாயின் அதனை தவாப் ஆரம்பிக்கவேண்டிய இடத்தில் அடையாளத்திற்காக வைத்து கட்டி விட்டார்கள். பின்னர் கஃபத்துல்லா புதுப்பிக்கப்படும்காலமெல்லாம் அதற்குறிய இடத்திலேயே வைக்கப்பட்டுவந்தது. ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னுஜுபைர் அவர்கள்காலத்தில் போர்வையில் தீப்பற்றிக்கொண்டபொழுது அக்கல் தெறித்துப் போய்விட்டதால் வெள்ளியைக் கொண்டு பலப்படுத்தப்பட்டது. அதில்சிற்சில சிறியதுண்டுகள் கஃபாவின் பாதுகாப்பாளர்களான பனூஷைபாக்களிடம் தங்கிவிட்டது. ஹிஜ்ரி 189-ம் ஆண்டில் ஹாரூன் ரஷீத் பாக்ஷா அவர்கள் ஹஜ்ஜுக்கு வந்தபோது வெள்ளியை உறுக்கி அக்கல்லை பலப்படுத்துமாறு ஏவினார்கள். ஹிஜ்ரீ 219-ம் ஆண்டில் 'அபூதாஹிருல் குர்மூத்தி' என்ற கொள்ளைக்காரன் மக்கமா நகரில் பெரும்பாதகங்களை யெல்லா மிழைத்து விட்டு ஹஜருல்அஸ்வதையும் எடுத்துச் சென்றுவிட்டானுகையால் அவன்வசமே 22 ஆண்டுகள்வரை இருந்தது. அதன்பின் பெரும் பிரயாசையின்மீது குபலாயெ அப்பாஸிய்யாக்கள் அவனிடமிருந்து எடுத்துவந்து அதற்குறிய இடத்தில் வைத்துவிட்டார்கள். அதன்பின் கஃபாவைப் பழுதுபார்த்தவர்கள் பற்பலதுண்டுகளையும் வெள்ளியைக்கொண்டும் வஜ்ஜிரத்தைக்கொண்டும் இணைத்து உறுதியாக்கியும் அதற்குச் சுற்றியினும் வெள்ளியினுல் வளைவான பட்டை பிடித்தும் அழகு படுத்தி வைத்தார்கள்.

கஃபாவின் சிறப்பு

இப்பரிசுத்த தேவாலய சம்பந்தமான நிகழ்ச்சிகளை ஆதியோடந்தமாய் எடுத்தோதிவிட்டோமாகையால் அதன்மீது முஸ்லிம்கள் காட்டிவந்த தியாகத்தையும், ஆற்றிவந்தசேவைகளையும் நன்குணர்ந்துவிட்டீர்கள். ஆதிகால முதற்கொண்டே உலகிலுள்ள இதர மதஸ்தினரும்அதனை கௌரவித்தே கொண்டாடிவந்திருக்கின்றூர்கள். அனேக மன்னுதி மன்னர்கள் இத் தேவாலயத்தின் சிறப்பைக்கண்டு அதனைத் தங்களது ஆளுகையின்கீழ் கொண்டுவர பகீரதப் பிரயத்தனஞ் செய்தனராயினும் அதுவிஷயத்தில் அன்னோர் ஏமாற்றமேயடைந்துவிட்டனர். சங்கைபொருந்திய இவ்வீட்டின் மகாத்மியத்துக்கு அப்ராஹாம் மன்னனின் படையெடுப்பே போதிய சான்றாகும். இச்சம்பவம் எம்பெருமானுர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் அவதரிப்பதற்கு சற்றுமுன் நடைபெற்றதாகும். இம்மன்னன் எமன்தேசாதிபதியும் கிறிஸ்துவமதத்தைச் சார்ந்தவனுமாவான்; கஃபத்துல்லாவை தரிசிக்க நாஞபாகங்களிலுமிருந்து பல கோடி மக்கள் வருவதை இவன்கண்டு மனப் புழுக்கங்கொண்டுதன் தலைநகரான 'சன்ஆ'வில் ஒரு கோவிலை உற்பத்திசெய்து அங்கு யாவரும் வர வேண்டுமென அறிக்கையிட்டுபலவாறுன சௌகரியமுடையவசதிகளையும் ஏற்படுத்தி வைத்திருந்தான். ஆனுல் அவனது எண்ணம் சற்றேனும் பூர்த்தி அடையவேயில்லை. கடைசியாக ஆக்ரோஷங்கொண்டு மக்காவிலுள்ள புண்ணிய தேவாலயத்தை இடித்துவிட வேண்டுமென்னும் தீர்மானத்துக்குவந்து தனது யானைப்பட்டாளத்தைத் திரட்டிக்கொண்டு மக்காவின்மீது முன்னேறிவந்தான். அதுசமயம் எம்பெருமானுர் (ஸல்.) அவர்களது பாட்டனுரான அப்துல் முத்தலிப் அவர்கள் மக்காவின் அதிபதியாக இருந்தும், அப்ரஹாவுடன் எதிர்த்துப் போர் புரிவதற்கு எவ்வாறுன முஸ்தீபும் செய்யாது அவ்வீட்டுக்குடைய நாயன் அதனைக்காப்பாற்றிக்கொள்வானெனக் கூறிவிட்டு சாதாரணமாயிருந்துவிட்டார்கள். அப்ரஹா கஃபாவை இடிப்பதற்கு முற்பட்டபொழுது ஏராளமான 'அபாபீல்' என்னும் குருவிகள் சிறிய சிறிய கற்களை சிறகிலணைத்துக் கொண்டுவந்து அவனுடைய சேனைமீது எறிந்ததால் உடனே அச் சேனைகள் நாசமாக்கப்பட்டுப் போயின. இந்த விபரத்தை அல்லாஹ்தஆலா ஸூரத்துல்பீலில் விவரித்துள்ளான். இம்மாதிரியே பலமுறை அக்கிரமஸ்தர்களின் கைகளிலிருந்து காக்கப்பட்டிருக்கும்விபரம் நபிகள்பெருமானுர் (ஸல்.) அவர்களினது திருவாக்கியங்களால் நன்குதெரி

ந்துகொள்ளலாம். இப்பரிசுத்த ஆலயம் ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களின் ஞாபகச்சின்னமாக இலங்கா நிற்கின்றது. எம்பெருமானூர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய சன்மார்க்கமானது, ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களுடைய மார்க்கத்தைக்கொண்டே அஸ்திவாரமிடப்பட்டிருப்பதால் முஸ்லிம்களுக்கு கஃபா ஷரீபே கிப்லாவாக இருக்க வேண்டுமென்பது பிரத்தியக்ஷம். ஆயினும் குப்பார்கள் இடைகாலத்தே கஃபாவினுள் விக்கிரகங்களைவைத்து ஆராதனை செய்துவந்ததனால் அது கிப்லாவாக ஆக்கப்படாதிருந்து சிறிதுகாலம் வரை பைத்துல் முகத்தஸை நோக்கித் தொழுது கொண்டிருந்தார்கள். பின்னர் அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் அதனைமாற்றி கஃபத்துல்லாவையே கிப்லாவாக ஆக்கப்பட்டுப் போயிற்று. எனவே சகல அம்ஸங்களிலும் சிறப்பாக்கப்பட்ட கஃபத்துல்லாஹ் ஷரீபை தெரிசிக்கும் பாக்கியத்தை அடைவதற்கு ஒவ்வொரு முஸ்லிம்களும் பிரயத்தனப்படுவார்களாக!

மிர்ஸாவின் உண்மைத் தோற்றம்

(தென்காசி முஸ்லிம் வாலிப சங்கத்தார் வரைவது)

"Mirza In his True Colours" என்னும் தலைப்பையுடைய 8 பக்கங்கள் கொண்ட ஆங்கிலத் துண்டுப் பிரசுரமொன்று வெளிவந்திருக்கிறது. அதில் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானியின் மார்க்க விரோதமான கொள்கைகள் வெகு தெளிவாய் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதினால், அதனை மொழிபெயர்த்துத் துண்டுப் பிரசுர மூலமாகவும், பத்திரிகைவாயிலாகவும் பொது ஜனங்களுக் கெடுத்துக் காட்ட வேண்டியதவசிய மென்று தோன்றியமையால் அதனை மொழிபெயர்த்து கீழே தருகின்றோம். அப்பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கும் புத்தகங்களெல்லாம் மிர்ஸா குலாம் அஹ்மதினாலேயே எழுதப்பட்டனவாகும். இவரது மார்க்க விரோதமான கொள்கைகளை அவரது, சிஷ்யர்கள் நாலுபக்கங்களிலும் பரத்த முயற்சிசெய்துவருமிக்காலே, பாமர முஸ்லிம்கள் அவர்களின் மாய வலையில் சிக்குண்டு போகாதபடி தடுக்கவேண்டியது கற்றோரின் கடமையாதலால், அவர்களின் மார்க்கவிரோதமான கொள்கைகளை ஜனங்களுக்கு எடுத்துக் காட்டுமாறு பெரியார்களை வேண்டுகின்றோம்.

பிரசுரச் சுருக்கம்.

காதியானி மதஸ்தாபகரான மிர்ஸாகுலாம் அஹ்மதும், அவரது வழிகெட்ட சிஷ்யர்களும், முஸ்லிம் மார்க்கக் கலாஞானங்களைத் தக்க முறையில் கற்றறிந்ததின் பயனாக முஸ்லிம் ஜனசமூகத்தாரால் பெரியார்களெனக் கருதப்பட்டு வரும் மௌலவிகளையும் மௌலானாக்களையும் ஒரு பெரும் சாபமேபோல் கருதுகின்றனர். இதற்குக் காரணம் யாதென உற்று நோக்குவோமாகில், எதுபொழுது மிர்ஸா தன்னை "மஹ்தீ" யென்றும், "மஸீஹ்" என்றும், இன்னும் பலவிதமாகவும் கூற ஆரம்பித்தாரோ, அதுமுதலே, இந்த மௌலானாக்கள் தான் அவரது குறைகளையும் வழிகெட்ட தவறுகளையும் மகா ஜனங்களுக் கெடுத்துக் காட்டி, மார்க்க விரோதமான அவரது உபதேசங்களையும் தயை தாட்சண்ணியமின்றி தாக்கி வருகிறார்கள்; இதனை எவ்வாற்றானும் எதிர்க்க வேண்டுமென்று எண்ணங்கொண்ட, அவரது சிஷ்யர்களான அஹ்மதிகள் ஆரம்பத்தில் அம்மௌலானாக்களைத் தூஷிப்பதற்காகவும், அவர்கள்மீது அபாண்டப் பொய்க் கூற்றுகளைச் சுமத்துவதற்காகவும் பலவாறு பிரசாரம் புரியத் தலைப்பட்டனர். பலஹீனமான ஓர் வழக்கை நடத்தும் வக்கீலானவர், நியாயபூர்வமாகவோ சட்ட பூர்வமாகவோ தனக்குச் சாதகமான விஷயங்களை எடுத்துக் கூற கேஸில் இடமில்லாவிடில், தமது எதிரியின்மீது குற்றம் சுமத்தி பலவாறான வீண் வம்பு வார்த்தைகளை உபயோகித்து, தனது கக்ஷியைச் சாதிக்க முயற்சிப்பது போல், போலி வேடதாரியாகிய மிர்ஸாவைப் பின்பற்றுபவர்களான இந்த அஹ்மதிகளும் தங்கள் எதிரிகளைத் தூஷிக்கவும், அவர்கள்மீது பொய்யாக வீண் பழிகளைச் சுமத்தவும் ஆரம்பிக்கின்றனர். எனவே அஹ்மதிகளுக்கு மௌள

லவிகளைக் காண்பது 'மிரண்டகாளைக்குச் சிகப்புத் துணியைக் காண்பது' போலிருக்கிறது. மௌலானுக்கள்மீது அஹ்மதிகள் சுமத்தும் பெரிய குற்றம் யாதெனில், ஒரு சிறிய அபிப்பிராய பேதத்திற்குங்கூட இந்த மௌல்விகள் ஒரு உண்மை முஸ்லிமை, உடனே காபிர் (மார்க்கப் பிரஷ்டர்) என்று கூறிவிடுகின்றனர்; இதனை எந்த நியாய புத்தியுடையவனும் அங்கீகரித்துக்கொள்ள முடியுமா? எனக்கூறி குற்றம் சுமத்துகின்றனர். அஹ்மதியரின் அபிப்பிராயப்படி இவ்வாறு கூறுவது பெரிய குற்றமாயின் மிர்ஸா எல்லோரையும்விட பெரிய குற்றவாளியாகின்றார். ஏனெனின், அவர் எல்லா முஸ்லிம்களையும் காபிராக்குகின்றார். (அதாவது தன்னை யொப்புக் கொள்ளாதவர்களடங்கலும் காபிர் என்பதாகக் கூறியிருக்கிறார்) அஹ்மதிகள், மௌலவிமார்களை எவ்வளவு தூரம் தூஷித்துக்கொண்டிருந்தபோதிலும் உண்மை ஒருநாளில் வெளியில் வந்தே தீரும். எல்லாக் காலங்களிலும் எல்லா முஸ்லிம்களையும் ஏமாற்றிக்கொண்டிருப்பது முடியாதுபோய் போலிச் சாயம் வெளுத்தே தீரும்.

இதுகாலை உலகின் பலபாகங்களிலும் அஹ்மதிகள் தங்கள் தீயக்கொள்கையைப் பரப்புவதற்காக மாயவலையை வீசிக்கொண்டுவந்தாலும் ஆங்காங்கு உண்மை பக்திவாய்ந்த முஸ்லிம்கள் தோன்றி அன்னோரின் வால்களை நறுக்கிக் கொண்டே வருகின்றார்கள். இக்காதியானிகள் ஏதோ பெருந் தியாகஞ்செய்து இஸ்லாத்திற்குழைப்பதாய் பாசாங்கு செய்தபோதிலும் மிர்ஸாவால் தோற்றுவிக்கப்பட்ட மார்க்க விரோதமான முரண்பட்ட கொள்கைகளை இவர்கள் தங்களது பிரசாரத்தில் கலக்காமல் விடுவதில்லை. மிஷினரிகளின் மூலமாக இன்னோர் சாமான்யர்களின் மனம் கவரத்தக்க விதமாக இஸ்லாமியப் பிரசாரம் செய்துவருவதாக இருந்தபோதிலும், பரிசுத்தத் தன்மை வாய்ந்த இஸ்லாத்தின் சத்போதனைகளில் தங்களது மூடக்கொள்கைகளைச் கலக்காமல் விடுவதில்லை. அஹ்மதிகள் பற்பல இடங்களிலும் மார்க்கப்பற்றுள்ள முஸ்லிம்களுக்கிடையே பலவாறுன குழப்பங்களை யுண்டாக்கி வருவதாக நமக்குப் பற்பல இடங்களிலுமிருந்து செய்திகள் கிடைத்து வரும்போதெல்லாம் அது விஷயமாய் நாம் தக்க ஏற்பாடு செய்து அத்திய பிரசாரத்தைத் தடுக்க முயற்சித்தே வந்திருக்கிறோம்.

இதுவன்றி அந்நிய நாடுகளில் இஸ்லாத்தின் அபிவிருத்திக்காக அன்னோர் உழைத்துவருவதாகப் பாசாங்கு செய்து வந்தபோதிலும் விஷங்கலந்த பாலைத் தான் புகட்ட முயற்சிக்கின்றார்களென்று கூறவேண்டியதாக இருக்கின்றது.

ஒரு மதத்தின் தலைவரெனக் கூறிக்கொள்பவரின் செய்கைகளையும் வார்த்தைகளையும் பரிசீலனை செய்து, அவற்றில் ஏதேனும் குற்றங் குறைகளிருப்பின் அதனை பஹிரங்கமாய்வெளியிட வேண்டியதவசியமாகும்; ஒருவரின் மனோநிலைமையை அவரது வார்த்தைகளிலிருந்து சந்தேகமின்றி நன்குதெரிந்துகொள்ளலாம். ஆகையால், நபியென்று உரிமை கொண்டாடுமொருவரின் நிலைமையானது இச்சிறிய பரிசோதனைக்கு நிற்காமலிருந்தால், அவரது மதக்கிளர்ச்சி ஆதாரமற்றதும், அவர் கொண்டாடும் பாத்தியதை (தன்னை நபி எனக் கூறிக்கொள்ளும் கூற்று) நிலைகுலைந்ததுமாகும்.

அஹ்மதிகளில், லாகூர் பார்ட்டியார் அவரை "மஸீஹ்" என்றும், "முஜத்தித்" (சீர்திருத்தக்காரர்) என்றும் கூறுகின்றனர். ஆனால் அந்த (போலி) "மஸீஹ்" கூறியிருக்கும் சில வாக்கியங்களைக் கீழே தருகின்றோம்; அவற்றினை பரீக்ஷித்துப் பார்க்குங்கால், இத்தகைய இழிவான வார்த்தைகளை ஒரு சாதாரண மனிதன் கூடக் கூறமாட்டானென்பதை சாமான்யரும் கண்டுகொள்வர்.

மிர்ஸாவின் வாக்கியத் திரட்டு

(1) "எவனொருவன் என்மீது நம்பிக்கை கொள்ளவில்லையோ, அவன் ஆண்டவன்மீதும் அவனுடைய தூதர்மீதும் நம்பிக்கையற்றவனாகிறான்." [ஹகீகத்துல்வஹீ, ப. 163]

(2) "குப்ர் இரண்டு வகைப்படும்: ஒன்று இஸ்லாத்தையும், முஹம்மது நபி (ஸல்.) அவர்களையும் ஒப்புக்கொள்ள மறுத்தல்; இரண்டாவது வாக்குச் சொல்லப்பட்ட "மஸீஹ்"ஐ மறுத்தல்; ஆழ்ந்து கவனித்தால் இவ்விரண்டு வகை குப்ருக்கும் வித்தியாசமொன்றுமிராது." [ஷை நூல், ப. 179]

(3) "வாக்குச் சொல்லப்பட்ட "மஸீஹ்" (மிர்ஸா குலாம் அஹ்மது) தமக்குத் தேவையில்லையென்று சொல்லுகிற ஒவ்வொருவனும் விசுவாசமில்லாதவனாகிறான்; இங்ஙனம் மஸீஹை யொப்புக்கொள்ளாதவர்கள் உண்மை

யான விஸ்வாசத்திலும், பக்தியிலும், ரக்ஷிப்படைவதிலும் குருடர்களாகவே யிருக்கின்றார்கள். கடவுளுடைய * தூதர்கள் தீர்க்கத்தரிசிகள் மூலமாக சுவர்க்க லோகத்திலிருந்து இறங்குகிற இந்த சுத்தமான விஸ்வாசத்தை யொப்புக் கொள்ளாதவர்களின் வணக்கங்கள் வீண் சடங்குகளாகவும், நோன்புகள் அர்த்தமற்ற பட்டினியாகவுமிருக்குமென்பதை, அவர்கள் தங்கள் ஹிருதயங்களை நோட்டமிட்டுப் பார்ப்பார்களாயின், கண்டுகொள்வர்.''

[லெக்சர் சியால்கோட், ப. 25]

(4) ''எனக்கு * நபிகளும், தீர்க்கத்தரிஸிகளும் தேவையில்லை என்று எவனொருவன் சொல்கிறானோ, அது அவனுடைய வீண் கர்வமாகும்; விஸ்வாசமற்றவர்களின் மனங்களிலிருந்தே இவ்விதப் பேச்சுக்கள் வெளியாகின்றன. இவ்வித அபிப்பிராயத்தை மனதில் வைத்துக்கொண்டு ஒருவன், 'நான் தொழவில்லையா? நோன்புகளனுஷ்டிக்கவில்லையா' என்று சொல்வானாகில், அவன் தன்னையே ஏமாற்றிக் கொண்டவனாகிறான். இதற்கெல்லாம் காரணம் உண்மையான விசுவாசத்தை யறியாமலிருப்பதே............அப்போதைக்கப்போது கடவுளின் தீர்க்கத்தரிசிகள் தோன்றவேண்டுவ தவசியமென்பது மிகவும் நிச்சயம். முஸ்லிம்களையும், கிருஸ்தவர்களையும், ஹிந்துக்களையும் சீர்திருத்துவதற்காகவே இந்தச் சமயம் நான் தோன்றியிருக்கின்றேன்.''

[ஷை நூல், ப. 25-33.]

மேலே கூறப்பட்டிருக்கும் மிர்ஸாவின் வாக்கியங்கள், தான் நபி என்பதாக அவர் கொண்டாடும் பாத்யதையை உறுதிபடுத்தக் கோருவதுடன், அவரை யொப்புக்கொள்ளாதவர்களின் தொழுகையும், நோன்பும் பிரயோஜனமற்றுப் போய் அவர்களும் குற்றவாளியாகின்றார்கள் என்பதை ஸ்திரப் படுத்துகின்றது. விஷய மிங்கனமிருக்க, அஹ்மதிகளில் லாகூர் பார்ட்டியார், 'மிர்ஸா தன்னை நபியென்று ஒரு பொழுதும் சொல்லியது கிடையாது; அல்லது தன்னை யொப்புக்கொள்ளாதவர்களைத் தூஷித்திருப்பதுமில்லை' என்று உண்மையை மறைத்துத் துணிகரமாகப் பொய் பகர்வதானது மிகவும் நிந்தனைக்குரியதாகவும், நயவஞ்சகமுள்ள செயலாகவுமிருக்கின்றது.

(5) தான் நபி என்பதாக வீண் பாசாங்கு செய்கிற இவர், ஒரு சாதாரண மனிதன்கூட தன் நாவினால் உச்சரிக்க அருசை அடையும் வார்த்தைகளால் தனது எதிரிகளைத் தூஷித்திருக்கின்றார்; அவர்களைப் ''பன்றிகள்'' என்றும், அவர்களது மனைவியரைப் ''பெட்டை நாய்கள்'' என்றும் கூறியிருக்கிறார். (நஜ்முல் ஹுதா. ப. 10). இத்தகைய கேவலமான தூஷணைகளை உதாஹரணத்திற்குக்கூட எங்கும் காண்பதரிது. ஆனால் தங்களை ''மஹ்தி''களென்றும், ''மஸீஹ்''களென்றும் பாசாங்கு செய்துவரும் பேடிகளுக்கு இது சொந்தமான உரிமையாக யிருக்கலாம் போலும்!

(6) இதுவன்றி மிர்ஸா, நிகழ்பெறாத அநேக தீர்க்கதரிசனங்களை முற்கூட்டியேகூறி அதிலும் கீர்த்திபெற்றிருக்கிறார். எனவே நபியெனத் தான் கொண்டாடும் பாத்யதையை உறுதிப்படுத்தவேண்டுமென்று அவருக்கிருந்தபேராத்திரத்தினால் முன்னுக்குப்பின்முரணான அநேக தீர்க்க தரிஸனங்களைக் கூறியிருக்கின்றார். ஆனால் அவர் அந்த தீர்க்கதரிஸனங்களைக் கனவில்கூடக் கண்டிருக்கமாட்டார். எனவே ஒரு குறிப்பிட்ட பெண்ணுடன் தன்விவாகம் நடைபெறுமென்று அவர்கூறிய விந்தையான தீர்க்கதரிஸனம் நிறைவேறாததினால் அவரது எதிர்க்கட்சியார்களெல்லாம் அவரை நோக்கி நகைத்துக் கேலிசெய்ய ஆரம்பித்தனர். இத்தகைய கேலி பரிகாசங்கள் அவருக்கு ஆத்திரத்தை யுண்டுபண்ணவே, அவர் பழைய பல்லவியாகிய ஏசல் மாலையைத் தொகுக்க ஆரம்பித்தார். இந்தச் சமயம் தன்னை ஒரு உண்மையான உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்தவராக மதித்துக் கொண்டு, எதிரிகளையெல்லாம் இழிகுலத்தினரென்றும், இழிகுலத்தின்தன்மையை அவர்கள் காட்டுகின்றார்களென்றும் கூறியதுடன், தன்னுடைய தீர்க்கதரிஸனமானது நிறைவேறும்போது அவர்களுடைய ஆபாஸ முகங்களானது பன்றிகளினுடையதாகவும், கழுதைகளினுடையதாகவும் மாறிவிடும் என்று கூறினார். ஆனால் இந்த தீர்க்கதரிஸனமும் இவருடைய மற்றவைகளைப்போல் நிறைவேறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

[அன்ஜாமே ஆத்ஹம் தொடர்புநூல், ப. 53.]

---

* இங்கு மிர்ஸா தூதர் என்றும், தீர்க்கதரிஸியென்றும் தன்னையே குறிப்பிடுகின்றார்.

* இங்கும் மிர்ஸா திரும்பவும் தன்னைத் தூதரென்றும், தீர்க்கத்தரிஸியென்றும் குறிப்பிடுகிறார்.

(7) பெயருக்குக்கூட அவர் எதேனும் வெற்றியடைந்தாரா? என்பது இன்னும் சந்தேகந்தான். அவரது எதிரிகள் அவரைக் குறைகூறும்பொழுதெல்லாம், மிகவும் அருவருக்கத்தக்க ஆபாச வசைச்சொற்களை அவர்கள்மீது சுமத்துவதே இவரது தொழிலாக இருந்துவந்தது. இவர், தனது 'அன்வாருல் இஸ்லாம்' 30-ம்பக்கத்தில், தனது வெற்றியை (?) ஒப்புக்கொள்ளாதவர்கள் வேசை மக்களாக விரும்புகிறார்கள் என்பதாகப் பைத்தியக்காரத்தனமாய்ப் பிதற்றியிருக்கின்றார்.

(8) மௌல்வீ ஸஅதுல்வா என்பவர், இந்த மதத்திலிருந்து தௌபாச் செய்து மீண்டு உண்மை இஸ்லாத்தை ஒப்புக்கொண்ட ஒரு பிரபலஸ்தர்; உண்மை இஸ்லாத்தைஊக்கத்துடன் பரவச் செய்கிறவர்; அவருக்கும் மிர்ஸாவுக்கும் எதிர்ப்புகள் அடிக்கடி ஏற்படுவதுசகஜம். அவர் மிர்ஸாவின் பொய் பாசாங்குகளை அடிக்கடி கண்டிப்பார். அஹ்மதிய மஸீஹ் (மிர்ஸா) அவரைக் குறித்து, "ஏ! வேசை மகனே! நீ எனக்கு அதிக வருத்தத்தைக் கொடுத்திருக்கின்றாய்; உனக்குக் கேவலமான மரணம் சம்பவிக்கவில்லை என்றால், அப்போது நான் ஒரு பொய்யன்" என்று கூறியிருக்கிறார்.

[ஹகீகத்துல்வஹீ தொடர்பு நூல், ப. 15.]

(தொடரும்)

சுகாதாரம்—தேகாரோக்கியம்

"ஆரோக்கியமுடைய தேகத்தில் ஆரோக்கியமான மனம் குடிகொண்டிருக்கும்" என்றொரு பழமொழியுண்டு. ஆரோக்கியமே ஒரு பெருத்த ஆஸ்தி; ஆரோக்கியமே சுகம்; தேக சுகாதாரம் ஆரோக்கியத்தைக் கொடுக்கும். தேக சுகாதாரம் என்றால் தேகத்தின் எல்லாப்பாகங்களும் சரிவரத் தம் தொழிலைச் செய்து, தகுதியான ஸ்திதியில் இருப்பதேயாம். ஆஸ்பத்திரிக்குப் போகாமலிருப்பது மட்டும் ஆரோக்கியமாக இருப்பதாய் எண்ணிவிட வேண்டாம். தேகமும் மனதும் சரியான ஸ்திதியில் இருப்பதுதான் ஆரோக்கியம். ஆரோக்கியமிருந்தால் ஆயுள் விருத்தி உண்டு; நன்றாய் உழைக்கலாம். ஆகவே கீழே குறிப்பிடப்படும் அம்சங்கள் தேக சுகாதாரத்திற்குப் பிரதானவைகளாகும் :—

வாயின் சுத்தம் :—வாயைச் சுத்தமாய் வைத்திருப்பதற்கு, தினம் இரண்டுமுறை பல் தேய்க்கவேண்டும். ஒவ்வொரு வேளை சாப்பிட்டானவுடனும் தேய்க்காவிட்டாலும், காலையில் படுக்கையைவிட்டு எழுந்ததும், இரவில் படுக்கப்போகு முன்னமும் தேய்க்கவேண்டும். இதற்கு வேப்பங்குச்சி சிரேஷ்டமாகும். இது மலிவானது; ஆரோக்கியமுள்ளது; இதனால் கெடுதலொன்றுமில்லை. எழ்மைத்தனமுள்ள நமது நாட்டிற்கு இதுதான் ஒத்தது. பல் குத்துவதற்கு சில சமயங்களில் ஏதாகிலும் ஒரு வஸ்து தேவையாயிருக்கலாம். அதைக்கொண்டு பற்களின் இடையிலுள்ள ஆகாரத் துண்டுகளை எடுத்துவிட வேண்டும். நன்றாய் மென்று தின்றால், அதுவே பற்களைச் சுத்தமாக்கும்.

சர்மத்தின் பாதுகாப்பு :—கிரணத்தினாலும், வெயர்வையை ஆவியாக மாற்றுவதாலும் சர்மமானது தேகத்தின் உஷ்ணக்கிரத்தை ஒழுங்குப்படுத்துகிறது. அது அசுத்தங்களை வெளித்தள்ளும்படியான ஒரு உறுப்பு. இதன்மூலமாய் நல்ல காற்றும், சூரிய வெளிச்சமும் தேகத்தினுள்ளே புகுகின்றன; அதனால் தேகத்திற்கு சௌக்கியமேற்படுகிறது. ஆனதுபற்றி, சர்மத்தை எப்போதும் சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டியதவசியமாகும். அதிலிருந்து வரும் வெயர்வை, மேல்தோலின் பொறுக்குகள் இவைகளைக் கழுவி அப்போதைக்கப்போது சுத்தம் செய்யவேண்டும். இவை உடையில் ஒட்டிக்கொள்வதால், அதை அடிக்கடி மாற்றவேண்டும். சுத்தத்திற்கு ஸ்நானம் அவசியம். வெந்நீர், ஸோப் தேய்த்தல் இவை சுத்தம் செய்வதற்கு அவசியத் தேவையாகும். வெந்நீரில் ஸ்நானம் செய்தால், நரம்புக்குக் கிளர்ச்சியைக் கொடுக்கும்; நல்ல தூக்கம் வரும். ஆனதுபற்றி படுக்கப்போகுமுன் வெந்நீரில் ஸ்நானம் செய்வது நலம். குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்தால் உடம்பிற்கு வலுவு உண்டாகும். அதைக் காலையில் எடுத்துக்கொள்வது நலம். ஆனால், ஒவ்வொரு நபரின் வயதிற்கும் தேகஸ்திதிக்கும் தக்கபடி ஜலத்தின் உஷ்ணக்கிரத்தை ஒழுங்குபடுத்திக்

கொள்ளவேண்டும். வெந்நீரிலோ குளிர்ந்த நீரிலோ வெதுவெதென்றிருக்கும் நீரிலோ தினம் ஸ்நானம் செய்யப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். பலஹீனமுள்ளவர்களுக்கும் தேகம் மெலிந்தவர்களுக்கும் வெந்நீல் ஸ்நானம் செய்வது உபயோகமாக இருக்கும். பலசாலிகள் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்யலாம். நடுத்தரமானவர்கள் அதிக குளிர்ச்சியும் அதிக வெப்பமுமில்லாத நீரில் ஸ்நானம் செய்யவேண்டும். தினம் ஸ்நானம் செய்தால் சர்மம் சுத்தமாக இருக்கும்; இரத்தச் சுழற்சியை தூண்டுதல் செய்யும்; நரம்புகளுக்கு வலுவைக் கொடுக்கும். ஸ்நானம் செய்தவுடனே முரட்டுத் துணியைக்கொண்டு தேகத்தை நன்ருய்த் துடைக்கவேண்டும்.

விரல், ஆகாரம், ஈக்கள் ஆகிய இவைகள் தாம் வியாதிக்குக் காரணம் என்ருேர் வசனமுண்டு. ஆனதுபற்றி, கைகளைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்; நகங்களைக் குறித்துக் கவனிக்கவேண்டிய தவசியம். நகங்களை ஒட்டக் கத்திரித்து அழுக்கு சேரவொட்டாமல் வைத்துக்கொள்ள வேண்டும்.

(3) உடை :—உடையானது பின் கூறப்படும் விதங்களில் உபயோகிக்கக் கூடியதாயிருக்கவேண்டும் .—

(a) குளிர், வெப்பம் தேகத்தின்மேல் தாக்காதபடி பாதுகாக்கும்படியானதாய் இருக்கவேண்டும்.
(b) சர்மத்தின் இயற்கையான தொழில்களுக்குப் பிரதிகூலம் செய்யாதபடி இருக்கவேண்டும்.
(c) சர்மத்திற்கு இழற்சியை உண்டு பண்ணுதாய் இருக்கவேண்டும்.
(d) தீப்பற்றி எறியும்படியானதாயிருக்கக் கூடாது.
(e) தேகத்திற்கு காற்ருேட்டம் கொடுக்கக் கூடியதாயிருக்கவேண்டும். குளிர்காலத்தில் வீட்டிற்குள்ளிருப்பவர்கள் இலேசான பருத்தித்துணியை உடுத்துக்கொண்டும், வெளியே போகும்போது, அதற்குமேல் பளுவான துணியைப் போட்டுக் கொண்டும் போகவேண்டும். வெளிக்காற்றில் வேலைசெய்கிறவர்களுக்கு கம்பள உடை அவசியமாகும்.

(4) கண்ணின் பாதுகாப்பு .—அநேக மணிநேரம் கண்களை உபயோகித்துப் படிக்கும் மாணவர்கள் அதிகமாக கண்களுக்கு நெருக்கி வாசிக்கக்கூடாது. நெருக்கடியால் ஏற்படும் அடையாளக் குறிகள் இரண்டுவிதம்; கண்ணிலேயே உண்டாவது ஒன்று. வேருேரிடத்தில் காண்பது மற்ருென்று. கண்ணிலேயே உண்டாவன: கன்ஜன்க்டைவிஸ் இன்ஜெக்ஷன், கன்ஜெஷன், ஸ்டைஸ், தலைவலி முதலியன. தலைவலி, சாதாரணமான குறி. வேருேரிடத்தில் காணப்படும் குறிகளாவன :—ஜீரணக்கோளாறுகள், வர்டிகோ, தவறுதலான அசைவுகள் முதலியன. கண் நெருக்கடியைப் போதுமான வெளிச்சத்தை உபயோகித்தும், கண்களுக்கு அமைதி கொடுத்தும், இன்னும் இதர வழிகளாலும் தடுக்கலாம். படிக்கும் எழுத்து பெரியதாய் இருக்கவேண்டும். கண்களிலிருந்து $1\frac{1}{2}$ அடி தூரத்தில் வாசிக்கக்கூடியதாயிருக்கவேண்டும். எலக்டிரிக் விளக்கு சுத்தமாயிருப்பதாலும், காற்றை அசுத்தப் படுத்தாமலிருப்பதாலும் சுகாதாரமுறைக்கு ஏற்றதாகும். மந்தமான வெளிச்சத்தையாவது கண் கூசும்படியான வெளிச்சத்தையாவது பார்க்கக் கூடாது. ரெயில் வண்டியிலாவது மோட்டார் வண்டியிலாவது படிக்கக்கூடாது. தேகம்வளரும் காலத்தில் கண்களை அப்போதைக்கப்போது பரீக்ஷைசெய்யவேண்டும். 40 வயதிற்குமேல் 60 வயதிற்குள் சாலேஸ்வரத்திற்காகக் கண்களைப்பார்த்துக்கொள்ளவேண்டும்.

(5) வியாயாமம் :—வியாயாமமானது எலும்புக்கூட்டின் சதைகளைக் கட்டுவதுடன் இரத்தச் சுழற்சியையும் தூண்டுகிறது; நெருக்கடியை ஒழிக்கிறது; பிராணவாயுவை அதிகமாக உட்கொள்ளச் செய்கிறது; சர்மத்திற்கு போஷணையைக் கொடுக்கிறது; நரம்புகளுக்கு வலுவைக் கொடுக்கிறது; நுரையீரலுக்குள் காற்ருேட்டத்தை அதிகரிக்கச் செய்கிறது; தேகத்தின் எல்லா உறுப்புகளும் சரிவரத் தம்தம் தொழில்களைச்செய்ய ஒத்தாசையாக இருக்கிறது; ஹிருதயத்தின் சக்தியை அதிகமாக்குகிறது ஆகவே இதுமிகவும் முக்கியமானது. ஏனெனில், வியாதி காணும்போது, இருதயம் சரியாயிராவிட்டால் உடனே மரணம் உண்டாகும். வியாயாமத்தை வெளிக்காற்றில் செய்யவேண்டும். அதைக் கிரமமாய்ச் செய்யவேண்டும். மனதிற்குத் திருப்தியாய் இருக்கவேண்டும். அவரவர்கள் தேகஸ்திதிக்குத்தக்கபடி இருக்கவேண்டும். வியாயாமம் கடினமானதாயிருக்கக் கூடாது. அதனுல் ஹிருதயத்திற்கு சிரமம் அதிகமாயுண்டாகி, மேல் மூச்சு வாங்கும்; மார்பு படபடவென்றடிக்கும். வியாயாமம் முடிந்ததும்,

சர்மத்தை நன்றாய் ஸோப்பும் ஜலமும் போட்டு அலம்பவேண்டும். அதனால் வியர்வை போகும்.

எப்போதும் உட்கார்ந்து கொண்டே இருந்தால், இச்சாச் சதைகள், அநிச்சாச் சதைகள் ஆகிய இவ்விரண்டிற்கும் வலுவு இராது; வயிற்றுச் சதைகள் பலஹீனப்பட்டுப் போவதால், குடல் சுவர்களுக்கு வலுவு இராது; அதனால் குடலில் மலம் தங்கிவிடும்.

(6) **சுத்தமான காற்றும், சூரிய வெளிச்சமும்:**—சுத்தமான காற்றினால் ஜீரணசக்தி உண்டாகும். ஆகாரம் நன்றாய் உறிஞ்சப்பட்டு தேகசக்தி அதிகமாகும். காற்று வெப்பமாயிருந்தால் தேகசக்தி குறைவாகும். குளிர் காற்றினால் சர்மத்திற்கு உத்தீபனம் உண்டாகி, ஸெல்லுகள் தேகத்தில் அபிவிருத்தியடைந்து, அதனால் தேகத்திற்கு ஆரோக்கியம் ஏற்படும். காற்று விஷப்பட்டிருந்தால் தலைவலி, ஓக்காளம், ஓய்ச்சல், மயக்கம், வாந்தி இவைஉண்டாகும். ஜலதோஷமும் பிடிக்கும். சூரிய வெளிச்சத்தினால் தேகத்திற்கும் மனதிற்கும் நன்மை உண்டாகும். மனத்திற்குக் கிளர்ச்சியை யுண்டுபண்ணி, மனோவேஷ்டையைப் போக்கும். சூரிய கிரணங்களும் அல்ட்ரா வயலெட் கிரணங்களும் மிகவும் உபயோகமானவை. இதற்குப் பதிலாகக் குழந்தைகளுக்கு மீன் எண்ணெய் உபயோகிக்கப்படுகிறது. கணமாந்தம் உள்ள குழந்தைகளை ஹெஸ் என்பவர் சூரிய வெளிச்சத்திற்குக் காண்பித்து, அதனால் அக் குழந்தைகளைச் சொஸ்தப்படுத்தி இருக்கிறார். 'எங்கே சூரியன் உண்டோ, அங்கே யோசனையும் யுக்தியும் உண்டு; சூரியன் நுழையாத இடத்தில் டாக்டர் நுழைவார்'. கணமாந்தம் எப்போதும் சூரிய வெளிச்சம் கம்மியாயுள்ள மழைகாலத்தில் அதிகமாகவிருக்கும். க்ரேட் பிரட்டன் முதலிய தேசங்களில் காற்றுடன் புகை அதிகமாகக் கலந்திருப்பதாலும், குடியிருக்கும் வீடு சரியாயில்லாதிருப்பதாலும் இந்த நோய் அதிகமாய் வியாபித்திருக்கும். சூரிய கிரணங்களுக்கு விஷங்கொல்லிக் குணமுண்டு.

(7) **சுவாஸித்தல்.**—சுவாஸம் நாசிமூலமாய் உட்கொள்ளவேண்டும். அதனால் நுரையீரலுக்குள் தூசு முதலிய அசுத்தங்கள் நுழையா. அந்த சுவாஸமும் வெப்பமாயிருக்கும். வாய் மூலமாய் சுவாஸித்தால், அடிநாய்ட்ஸ், மந்தபுத்தி, மூடத்தனம் முதலியன உண்டாகும்.

(8) **ஆகாரம்.**—ஆகாரம் சரிசமானமான எடையில் இருக்கவேண்டும். அதாவது, அதிலுள்ள ப்ரோடீன் (சத்துப் பொருள்) கொழுப்பு, கார்போஹைட் ரேட்டுகள், (மாவுப் பொருள்கள்) உலோக உப்புக்கள், ஜீவஸத்துப் பொருள்கள் இவை யாவும் சரியான விகிதாசாரப்படி இருக்கவேண்டும். குழந்தைக்குப்ரோடீன் அதிகம்வேண்டும். ஏனெனில், அதுவளர வேண்டி யிருக்கிறது. கார்போஹைட்ரேட்டும் அதிகம் வேண்டும். வயதானவர்களுக்கு ப்ரோடின் கார்போஹைட்ரேட் கம்மியாகவும், கொழுப்பு அதிகமாகவும் இருக்கவேண்டும். ஆகாரம் அவரவர் செய்யும் தொழிலுக்குத் தக்கபடி வித்தியாசப்படும். சக்தி அதிகம்வேண்டியிருந்தால்,கொழுப்புப்பதார்த்தம் அதிகம்வேண்டும். ஸ்திரீகளுக்கு ஆகாரம் புருஷர்களைக்காட்டிலும் ஆறில் ஒன்று கம்பியா யிருக்கவேண்டும். ஏனெனில், அவர்களுக்கு வேலை கம்மி. மலச்சிக்கல் உள்ளவர்கள் ஸெல்லுலோஸ் அதிகமாயுள்ள ஆகாரம் சாப்பிட வேண்டும். சமைத்த காய் கறிகளும் பழங்களும் அவர்களுடைய ஆகாரத்தில் கலக்கவேண்டும். கோதுமை ரொட்டி பிரயோசனமுள்ளது. சாதாரணமாய் 4 வேளை ஆகாரம் சாப்பிடலாம். ஆனால், மூன்றுவேளை போதுமானது. ஆகாரத்தைச் செவ்வையாய்மென்று சாப்பிடவேண்டும். ஆகாரம் சாப்பிட்டானவுடன் சற்றுநேரம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். பாலுக்கும், பச்சை மரக்கறிகளுக்கும் "பாதுகாக்கும் ஆகாரங்கள்" என்று பெயர். ஏனெனில், பசியைத் தீர்த்து சக்தியைக் கொடுக்கும்படியான எந்த ஆகாரத்துடன் சேர்த்தாலும், போஷணைக் குறைவினால் ஏற்படும் வியாதிகளை இது தவிர்க்கிறது.

(9) **தூக்கம்.**—தூக்கம் என்பது தேகத்தைப் பழுது பார்க்கும் முறை. ஆனதுபற்றி, இது அவசியமாகும். படுக்கையறை காற்றோட்டமுள்ளதா யிருக்கவேண்டும். இருட்டாயும், சந்தடியில்லாமலும் இருக்கவேண்டும். சாதாரணமாய் புருஷர்களுக்கு 5 மணி, ஸ்திரீகளுக்கு 7 மணி, முட்டாள்களுக்கு 8 மணி தூக்கம் வேண்டும் என்று ஒரு பழமொழி உண்டு. இது பிசகு. ஸர் வில்லியம் ஜோன்ஸ் சொல்லுகிறபடி "எழு மணி உழைக்கவும், எழுமணி தூங்கவும், 10 மணி உலகத்திற்கும், கடவுளை வணங்குவதற்கும் அற்பணம் செய்யவேண்டியது." இது

நியாயம். 'சீக்கிரம் படுத்து சீக்கிரம் எழுந்திருந்தால் அதனுல்சம்பத்து, ஆரோக்கியம், ஞானம் இவை உண்டாகும்' என்னும் வசனத்தைக் கைப்பற்றவேண்டும். ஆனுல், நிர்ணயமான விதி ஒன்றும் கிடையாது. எனவே கிழவர்கள் வயதானவர்களில் பாதி நேரமும், மத்திய வயதுள்ளவர், குழந்தைகளில் பாதி நேரமும் தூங்கவேண்டும்.

இஸ்லாமிய வீரர்களின் சேவை.

ஹஸ்ரத் செய்யிதுனு முஸ்யிப் இப்னு உமைர் (ரலி.) அவர்கள்.

ஹஸ்ரத் அவர்களின் வாழ்நாள் சரிதையைக் குறிப்பிடுவது, முஸ்லிம் மக்களினிடையே வீரம் பராக்கிரமம் தியாகம் முதலியவைகளை உண்டுபண்ணுவதற்கு மாபெரும் திலகமாய் இலங்கிக்கொண்டிருக்கின்றது. தங்களது பெயர் முஸ்யிபாகும். காரணப்பெயர் அபூ முஹம்மது என்பதாகும். தந்தையின் பெயர் உமைராகும். தாங்கள் குரைஷ் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். மிகவும் அழகு சவுந்திரியமானவர்களாகவும் இயற்கை அமைப்பிலும் மேனியின் வடிவத்திலும் சிறந்திலங்குகிறவர்களாகவு மிருந்தார்களாதலின் தாய்தந்தைகள் மிக்க அன்போடு வளர்த்துவந்தார்கள். தங்கள் தந்தையான உமைர் என்பார் அரபிகளில் பெரும் பணம் படைத்த வியாபாரிபாகவும் மேதை மரியாதையுடையவராகவு மிருந்துவந்தார். அதனுல் ஹஸ்ரத் அவர்கள் அளவற்ற செல்வத்தில்வளர்ந்து வந்தார்களாயின், சதாவும் எமன் தேசத்து உயர்ந்த போர்வைகளையும் விலைமதிப்புள்ள வஸ்திரங்களையும் அடைந்திருப்பதுடன் எப்பொழுதும் வாசனைதிரவியங்களைப் பூசிக்கொண்டு பரிமளித்துக் கொண்டிருப்பார்கள். இவ்வாறுன புறச் சுத்தத்தை அல்லாஹ்தஆலாவால் அளிக்கப்பெற்றிருந்ததுடன் அகச் சுத்தியையும் அளிக்கப் பெற்றிருந்தார்கள்.

'தபகாத்த இப்னுஸஊது' என்னும் கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறதாவது: ஹஸ்ரத் அவர்கள் ஒருநாளன்று நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் வாசஸ்தலத்துக்குச் சமீபம் செல்லுங்கால் தற்செயலாய் அதுசமயம் நபிகள் பிரான் (ஸல்.) அவர்கள் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை போதித்துக்கொண் டிருந்தார்களாதலின் அவ் வழியே சென்றுகொண்டிருந்த முஸ்யிப் அவர்கள் அத்திரு உபதேசத்தைக்கூர்ந்து கேட்டதன்பயனுய் அளவுகடந்த மாறுதலடைந்தவர்களாய் விட்டார்கள். அதன்பின் நபிகள்திலகம் (ஸல்.) அவர்களது சமுகமேகி இஸ்லாத்தைக்கொண்டுசிறப்பிக்கப்பட்டார்கள். அது சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் ஜைத்திப்னு அர்கம் அவர்களது இல்லத்தில் விசேஷமாகயிருந்துவரும் காலமாகும். அந்நாளானது ஏகத்துவமக்களும் இஸ்லாத்தின் தியாகிகளும் மக்காவின் பூமியில் அளவற்றகஷ்டநஷ்ட துன்பங்களை அநுபவிக்கவேண்டியகாலமாக இருந்துவந்தது. இக்காரணத்தினுல் ஹஸ்ரத் முஸ்யிப் அவர்கள், தாங்கள் ஈமான்கொண்டதை ஒருகாலம்வரை மறைத்துவைத்திருந்தார்கள். அதனுல் எவருக்கும் தெரியாது மறைவாக சிற்சிலநேரங்களில் நுபுவ்வத்தின் தர்பாருக்கு ஆஜராய்க்கொண்டிருந்தார்கள். இந்நிலைமையில் ஒருநாளன்று ஹஸ்ரத் அவர்களின் பந்துக்களிலொருவர் தாங்கள் தொழுகை நிறைவேற்றிக்கொண்டிருப்பதைக் கண்டு பேராச்சரியமுற்று இச் செய்தியை தங்கள் பெரியோர்களுக்குத் தெரிவித்துவிட்டார். தந்தையரான உமைருக்கு இவ்விஷயம் தெரிந்தவுடன் பிள்ளையின்மீது அளவற்றப் பிரீதியிருந்தும் அதனைப் பொருட்படுத்தாது சினங் கொண்டவராய் ஹஸ்ரத் அவர்களுக்குத் தொந்திரை இழைக்க முன்வந்து, ஓர் இருட்டறையில் விட்டு அடைத்து விட்டார். ஆனுல் ஹஸ்ரத் அவர்கள் இக் கஷ்டங்களை யெல்லாம் சகித்துக்கொண்டு உறுதியோடு இஸ்லாத்தின்மீது பற்றுடையவர்களாகவே இருந்து வந்தார்கள். இவ்வாறு மூன்றுதினங்கள்வரை அடைத்து வைத்திருந்தும் அவர்களுடைய மனேஉறுதி சுயேச்சை இவைகளில் கிஞ்சிற்றேனும் வித்தியாச மேற்படவேஇல்லை. கடைசியாகபோக்கற்று வீட்டை விட்டு வெளியாக்கி விட்டார்.

இவ்வாறு வீட்டினின்று வெளியேறியபின் சரீரப்பிரயாசை எடுத்துக் கூலிவேலை செய்து தங்கள் ஜீவனோபாயத்தை நடத்திவந்ததோடு இஸ்லாத்தைப் பரவச்செய்வதிலும் அதன் தத்துவத்தை எடுத்துரைப்பதிலும் தங்கள் முழு கவனத்தையும் செலுத்திவந்தார்கள். எனவே, மக்காவின் சுற்றுப்புறங்களுக்குச் சென்று இஸ்லாத்தின் உண்மைத்தத்துவத்தை எடுத்து போதித்து மக்களை அதன்பக்கல் அழைத்துக்கொண் டிருந்தார்கள்.

'அஸதுல்காபா' என்னும் கிரந்தத்தில் கூறப் பட்டிருப்பதாவது: ஒருநாளன்று ஹஸ்ரத் அவர்கள் நுபுவ்வத்தின் தர்பாருக்கு ஹாஜ ரானபொழுது தாங்கள் அணிந்திருந்த போர் வையில் அனேக ஒட்டுகள் போடப்பட்டிருந் தது; இதனை எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.)அவர்கள் பார்த்துவிட்டு, "மக்காவுடைய பூமியில் அளவுகடந்த சுகபாக்கியங்களை அனு பவித்துக்கொண்டிருந்த இச்சத்தியவீரர், அல் லாஹ்வின்மீது கொண்டுள்ள பிரீதியால் தமது சுகவாழ்க்கையை உதறித்தள்ளிவிட்டு, இவ்வுல கின் அற்பவாழ்க்கைவிட அவ்வுலகின் அழியா வாழ்க்கையைத் தெரிந்தெடுத்துக்கொண்டார்" எனக் கூறினார்கள்.

இஸ்லாமிய சேவை

இஸ்லாமென்னும் சூரியனுனது மக்காவி லிருந்து மதீனாவின்மீது பிரகாசிக்கவே, அங் குள்ள பரிசுத்த ஆத்மாக்கள் இஸ்லாத்தை ஒப் புக்கொண்டு தங்களுக்கு இஸ்லாத்தின் உண் மைத்தத்துவங்களை போதிக்கவும் அதனைப் பர வச் செய்யவும் ஒரு ஆசிரியரை அனுப்பித்தர வேண்டுமென விண்ணப்பித்து கொண்டனர். இரு உலகினுக்கும் சர்தாரான உத்தமத்தூதர் (ஸல்.) அவர்கள் இவ் வேண்டுகோளை அங்கீ கரித்துக்கொண்டு, அவ் வுத்தமச் சேவைக்காக ஹஸ்ரத் முஸ்யிப் (ரலி) அவர்களைத் தெரிந் தெடுத்து, அவர்களுக்கு (தாயிஅளத்ரிப்) மதீன வின் பிரசாரகர் என்னும் பட்டமும் சூட்டி அனுப்பி வைத்தார்கள். இஸ்லாத்தின் பிர சாரத்திற் கென்று எம்பிரான் (ஸல்.) அவர்கள் அதுவரை யாரையும் நியமித்தது கிடையாது; இதுதான் முந்திய நியமனமாகும். ஹஸ்ரத் அவர்கள் இக் கட்டளையைச் சிரமேற் றூங்கி இஸ்லாமிய சேவையின் உத்வேகத் தோடு மதீனாவுக்குப்பிரயாணமாகி விட்டார்கள். அங்குசென்று ஏற்கெனவே இஸ்லாத்தைத் தழுவியிருந்த ஹஸ்ரத் அஸ்அத்பின்ஜராரா அவர்களது இல்லத்தில் தங்கினார்கள். அதன் பின்அங்குள்ள விஷயங்களை யெல்லாம் கவனித் துப்பார்த்தார்களாதலின், யாவர்களையும் ஒரே இடத்தில்சேர்த்து உபதேசிப்பது கஷ்டமாகத் தோன்றிற்று. எனவே ஒவ்வொரு மஹல்லாக் களிலும் தெருக்களிலும் வீடுகள்தோறும் சென்று உபதேசம்புரிய ஆரம்பித்தார்கள். இந் நிலைமையில் ஒருநாளன்று "ஷிஅப அஸ்வத்" என்னு மிடத்திற்குச் சென்று இஸ்லாத்தின் உண்மை தத்துவத்தை மகோன் னதமாய் போதித்துக் கொண்டிருங்கால் ஆவேசம் ததும்பும் பிரசங்கமொன்று புரிந்தார் கள். அவ்விடத்திய தலைவர் இச்செய்தியைத் தெரிந்து சினங்கொண்டு உருவிய வாளுடன் ஹஸ்ரத் அவர்களிடம் வந்து, "நீர் நம் முன்னோர் களின் மார்க்கத்தை அழித்துவிட்டு புதிதாக ஒரு மார்க்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றீ ரா? இதுபொழுது நான் நாடுகிறவிதமாய் உம் மைச் செய்துவிட்டால் எம்மைக் கேட்பார் யாருமில்லை" என ஆக்ரோஷமாய்க் கூறினார். உடனே ஹஸ்ரத் அவர்கள் அவரை நோக்கி தலைவ! சற்றுநேரம் என் சமீபத்தில் உட்கா ரும் எனக்கூறவே, அப்படியே உட்கார்ந்தார். அதுபொழுது ஹஸ்ரத் அவர்கள் 'யாஅய்யு ஹல் முதத்திர்' உடைய ஆரம்ப வசனங்களை ஓதிக் காண்பித்தார்கள். இத்திருவசனத்தின் போக்கும் அதன் உபதேசமும் அத்தலைவரு டைய மனதைக் கவரச் செய்துவிட்டதால், அவர் ஆச்சரியமுற்று ஹஸ்ரத் அவர்களை விளித்து, "மகா மேன்மையும் நன்மையும் பொருந்திய திருவசனங்களை எனக்கு ஓதிக் காண்பித்தீர்களாதலின் அந்த இஸ்லாத்தில் என்னையும் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்று கூறி உடனே தூய்மைவாய்ந்த இஸ்லாம் மதத் தைத் தழுவிக்கொண்டார்.

அதுகாலை 'ஸஅதிப்னுமஆத்' மதீனாவின் கியாதிவாய்ந்த தலைவராக யிருந்தார். இவர் ஒரு நாளன்று ஹஸ்ரத் முஸியிப் அவர்களிடம் வந்து, "நீர் நமது மூதாதையர்கள் பின்பற்றி வந்த மார்க்கத்தை தூஷித்து வேறொரு புதிய மார்க்கத்தைப் பிரசாரம் புரிந்துவருவதை நாங் கள் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை; எங் கள் மனம் பெரிதும் தொந்திரவுக்குள்ளாகிறது; ஆகவே உமது பிரசாரத்தை நிறுத்திக்கொள் ளாதுபோனல் உம்மைக் கொன்றுவிடுவோம்" எனக் கூறினார். இதனை செவியுற்ற ஹஸ்ரத்

அவர்கள், ஏ நகரத்தலைவ! யான் உபதேசித்து வரும் பரிசுத்த சன்மார்க்கத்தின் நலவுகளை நோக்கக் கடவீர்; அதன் சத்போதனைகளைச் சிந்திக்கக் கடவீர்; மௌட்டீகத்தனமான எதிர்ப்புப் புரியாதீர் என்று கூறி, 'யாஅய்யு ஹல் முஜம்மில்' அத்தியாயத்தின் சில வசனங்களை ஓதிக் காண்பித்தார்கள். இத்திரு வாக்கியங்கள் ஸஅத் அவர்களின் மனதில் பெரும் மாறுதலை யுண்டுபண்ணிவிட்டதால் அவர்கள் கண்களிலிருந்து சரமாரியாக தண்ணீர் வடிய ஆரம்பித்தது. ஆதலால் அதுபொழுதே முழு விருப்பத்தோடு சந்தோஷமாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். இத்தலைவர் இஸ்லாத்தைத்தழுவிக் கொண்டதால் இவருடைய பந்துமித்திரர்கள் யாவரும் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டதுடன் அவர்களிலனேகர் இஸ்லாமியப்பிரசாரத்திலு மீடுபட்டுவிட்டனர்.

ஹஸ்ரத் அவர்கள் பிரசார நிமித்தம் மதீனா சென்றவுடன் பலவாறான கஷ்ட சங்கடங்களுக்கு ஆளாகவேண்டியிருந்தும், இரவு பகலாய் சற்றும் ஓய்வில்லாது எடுத்துக்கொண்ட பிரயாசையின் காரணமாய், அநேக வன்னெஞ்சர் நன்னெஞ்சர்களாகவும் சத்துருக்களெல்லாம் இஷ்டர்களாகவு மாறிவிட்டார்க ளாதலின் மதீனாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் இஸ்லாத்தின்உண்மை ஜோதி பிரகாசிக்க ஆரம்பித்தது.

மதீனாவில் ஆரம்ப ஜும்ஆ

திருமதீனாவின்கண் இஸ்லாத்தின் ஒளி பிரகாசிக்க ஆரம்பித்து, அனேகர் இஸ்லாத்தைத்தழுவிக் கொண்டவுடன் ஹஸ்ரத்அவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து தொழுகையை நிறைவேற்றக் கருதி, நுபுவ்வத்தின் தர்பாரிலிருந்து உத்திரவு பெற்று 'ஸஅத்பின்நஈம்' அவர்கள் வீட்டில் ஆரம்பமாக ஜும்ஆத் தொழுகையை ஆரம்பஞ் செய்தார்கள். அதுபொழுது ஜனங்களின் ஹிருதயங்களைக் கவரச்செய்யும்படியான நல்லுப தேசங்கள் பொருந்திய குத்பா ஓதி தொழுகை நிறைவேற்றி வைத்தார்கள். அது முதல் ஒவ்வொரு ஜும்ஆவும் நடைபெற ஆரம்பமாயிற்று.

மக்காவுக்குத் திரும்பிவருதல்

ஒருவருஷகாலம் வரை துயர்படியாக மதீனாவில் பிரசாரவேலையை நடத்திவிட்டு, எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் அனுமதியின்பேரில் ஹஜ்ஜுடைய காலத்தில் மக்கமா நகருக்குவந்து, முதன்முதலாக நபிகள்பிரான் (ஸல்.) அவர்களின் தர்பாரில் ஆஜராகி, மதீனாவில் இஸ்லாத்துக்கு கிடைத்த வெற்றியை விபரமாய் எடுத்துக் கூறினார்கள். அதுகாலை பெருமானார் (ஸல்.) அவர்கள் பெரும் மகிட்சியோடு நிகட்சி சம்பவங்கள் முழுதையும் செவியுற்றபின், ஹஸ்ரத் முஸியிப் அவர்கள் பிரயாசை தியாகவும் முதலியவைகள் மீது அளவற்ற சந்தோஷத்தை வெளியாக்கியதுடன் அவர்கள் விஷயமாய் சுபப் பிரார்த்தனையும் புரிந்தார்கள். அல்லாஹ்வின் திருத்தூதர்(ஸல்) அவர்களின் இப்பிரார்த்தனைக்குப்பின் அங்கிருந்து விடைபெற்றுக்கொண்டு தாயாரிடம்சென்று மௌனமாக உட்கார்ந்தார்கள். அதுபொழுது தாயார், "இன்னும் நம்மூதாதையர்களின் மார்க்கத்தைப்புறக் கணித்துத்தான் இருக்கின்றாய் போலிருக்கிறது" எனக் கூறினாள். இதற்கு விடையாக ஹஸ்ரத் அவர்கள், "நான் சத்தியமார்க்கத்தைப் பின்பற்றியிருக்கிறேன்; அல்லாஹ்வுக்குப் பொருத்தமான இஸ்லாத்தைத் தழுவியிருக்கிறேன்" என்றார்கள். இதைக் கேட்ட தாயார், சிறைச்சாலையின் கஷ்டங்களை மறந்துவிட்டாயா; எங்கள் ஆதிக்கத்தை விட்டுவெளிப் பட்டுவிட்டதாக நினைக்கின்றாயா? எனக் கூறினாள். ஹஸ்ரத் அவர்கள் தாயாரின் இக்கடுமொழிகளைச் செவியுற்றவுடன், தம்மை மறுபடியும் சிறைச்சாலையிலடைக்க இவள் உத்தேசிக்கின்றாள் போலிருக்கிறது எனநினைத்து, என்னை அசத்தியத்தை ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்துகின்றீர்களா? என்னை மறுமுறையும் கைது செய்வது உங்கள் நோக்கமாயின், அதற்காகப் பிரயத்தனப்படுபவனை நிச்சயமாய்க் கொன்று போடுவேன் எனக்கூறினார்கள். இக்கடுமொழிகளைச் செவியுற்ற தாயானவள், நல்லது! உம்மைக் கட்டாயப்படுத்தவில்லை; உம்முடைய மூதாதைகளின் மார்க்கத்தைப் பின்பற்றிக் கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக் கொள்கிறேன் எனக்கூறினாள். இதற்கு ஹஸ்ரத் அவர்கள், என் அருமைத்தாயே! அல்லாஹ் ஒருவனாகும்; அவனுக்கு யாதொரு இணையுங்கிடையாது; அவன் சகலவஸ்துக்கள்மீதும் சத்திபெற்றிருக்கிறான்; அவன்தான் நம்மைப் படைத்தவனாகும்; அவன்தான் நம் யாவரையும் ரக்ஷித்துக் காப்பாற்றுபவன்; வணக்கத்திற்குத் தகுதியானவன் அவனைத்தவிர வேறு யாருமில்லை; ஹஸ்ரத் முஹம்மது ரசூலுல்லா ஹிஸல்லல்லாஹு அலைஹிவஸ்ஸல்லம் அவனால் அனுப்பப்பட்ட தூதரும் நல்லடியாருமாகும்

என்று சாக்ஷியங்கூறும்படி உனக்கு ஆலோசனை கூறுகின்றேன் என்றார்கள். அதற்கு தாயானவள், மகனை விழித்து, லாத், உஜ்ஜாவின்மீது பிரமாணமாக யான் ஒருக்காலும் இஸ்லாத்தை ஒப்புக்கொள்ள மாட்டேன்; உன்னையும் உன் மார்க்கத்தையும் வெறுக்கின்றேன் என்று கூறிவிட்டாள். இவ்வருவருக்கத்தக்க பதிலைக் கேட்டவுடன் ஹஸ்ரத் அவர்கள் எழுந்து சென்று, பெருமானார் (ஸல்.) அவர்களின் தர்பாரிலேயே சிலநாள் இருந்துவிட்டு மதீனாவுக்குப் புறப்பட்டுச் சென்று வழக்கம்போல் தங்கள் கடமையைச் செய்ய ஆரம்பித்தார்கள்.

நுபுவ்வத்தின் 13-ஆம் ஆண்டில் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் மக்காவை ஹிஜ்ரத் செய்து மதீனா வந்து சேர்ந்துவிட்டார்கள். அதுபொழுதும் குப்பார்கள் நானு பாகங்களிலும் முஸ்லிம்களைத் தாக்குவதற்கும் தொந்திரை கொடுப்பதற்கும் முற்பட்டார்கள். இந்நிலைமையில் ஹிஜ்ரத்தின் இரண்டாவதாண்டில் சத்தியத்திற்காகப் போர் நிகழ ஆரம்பமாயிற்று. ஹஜ்ரத் அவர்கள் பிரசங்க வன்மையில் பரிபக்குவமடைந்து இருந்ததுபோல் போர்க்களத்தை ஒழுங்கு செய்யும் சேவையிலும்பாண்டித்தியம் பெற்றவர்களா யிருந்தமையால், 'பத்ர்' யுத்தத்தில் முஹாஜிரீன்களின் கொடி இவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. 'உஹத்' போரிலும் கொடி தாங்கிச் செல்வதின் சிரப்பும் இவர்களுக்கே அளிக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் அவர்கள் போர்க்களத்தில் போற்றத்தக்க விதத்தில் பராக்கிரமத்துடன் சேவை புரிந்தார்கள். 'உஹத்' போரில் சில தப்பபிப்பிராயமேற்பட்ட காரணமாய் முஸ்லிம்கள் பலவிடங்களிலும் பிரிந்துவிட நேர்ந்தமையால் ஹஸ்ரத் முஸியிப் அவர்களைப் பத்துகாபிர்கள் சூழ்ந்துகொண்டு தாக்க ஆரம்பித்தார்களாயினும் ஹஸ்ரத் அவர்களும் பெரும் தீரத்தோடு எதிர்ப்பு புரிந்தார்கள். கடைசியாக 'இப்னு குமிய்யா' என்னும் வன்னெஞ்சம் படைத்த காபிர், ஹஸ்ரத் அவர்களின் வலது கையைத் துண்டித்துவிட்டான். உடனே இடது கையை உபயோகித்துப் போர் புரிந்தார்களாயினும் அதையும் துண்டித்து விட்டான். அதுபொழுது இரத்தம்தோவைந்திருந்த இரு குடங்கைகளையும் நெஞ்சில் சேர்த்துக்கொண்டு கொடியைத் தாங்கினார்கள். அதன்பின்னும் அச்சண்டாளர்கள் தாக்கி ஷஹீதாக்கிவிட்டார்கள்.

யுத்தம் முடிவடைந்தபின் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் முஸியிப் அவர்களது திருமேனியண்டை வந்து நின்று "மூமின்களிற் சிலர் அல்லாஹ்தஆலாவிடம் செய்துவந்த அறுதிமானத்தை உண்மையாக்கி வைத்தார்கள்" என்னும் கருத்துள்ள ஆயத்தை ஓதி, ஓ முஸியிபே! உம்மைவிட அழகான உடை அணிந்து வாசனை திரவியங்கள் பூசிக்கொண்டிருந்தவர்கள் யாரையும் நான் பார்த்ததில்லை! இதுபொழுது யான் உம்மை தலைரோமம் பங்கரையானவராகவும் ஒரே துணியுடையவராகவும் பார்க்கிறேன் எனக் கூறி, தங்கள்மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். சஹாபாக்களும் இப் பொன்மொழிகளைக் கேட்டுக் கவலையுற்று, முஸியிப் அவர்கள் மக்கமாநகரில் ஓர் அமீரைப்போல் சுவண்டி அனுபவித்தவர்களாகும்; குதிரைமீது சவாரி செய்வார்களாயின் முன்னும் பின்னும் வேலையாட்கள் ஓடுவார்கள்; எப்பொழுதும் 200 ரூபாய் மதிப்புக்குக் குறைவான வஸ்த்திரம் அணிந்திருந்ததை யாங்கள் கண்டிலோம்; ஆனால் இஸ்லாத்துக்காக அச்சுவண்டிகள்யாவற்றையும் அர்ப்பணஞ் செய்துவிட்டார்கள்எனக் கூறினார்கள்.

மேலான வஸ்திரங்களையும் விலை யுயர்ந்த பலவாறான பட்டாடைகளையும் அணிந்திருந்த இம்மன்னரின் திருமேனியானது, ஒரு கிழிந்த பழைய ஒரு துணியைக்கொண்டு கபனிடப்படுவதை உற்றுணர்ந்து பார்ப்போமாக! அதுவும் தலைப்பக்கம் இழுத்தால் காலுக்குப் போதாததாயும் காலுக்கிழுத்தால் தலைக்குப் போதாததாயு மிருந்தது. கடைசியாக எம்பெருமானார் (ஸல்.) அவர்களின்சமிக்கையின்மீது அத்துணி தலைப்பக்கம் இழுக்கப்பட்டு காலுக்குப்பச்சைப் புல் வைத்து அடக்கம் செய்யப்பட்டது. ஆகவே இவ்வரும் நிகட்சி சம்பவத்தைக் கண்டு உணர்ச்சி பெறுவோமாக.

"ஹிபாஜத்துல் இஸ்லாம்"

(நான்காம் வால்யூம்)

நமது மாசிகையின் நான்காம் வால்யூம் பயிண்டுசெய்து தையாராக இருக்கின்றது. சொற்பப்பிரதிகளே கைவசமிருப்பதால் சீக்கிரம் ஆர்டர்செய்து பெற்றுக் கொள்வீர்களாக.

காலிகோபைண்டு விலை ரூ. 3—8—0 தபால்செலவு வேறு.

சத்திய வீரர்களின் சத்தொழுக்க வாழ்க்கை.

அரசர் சுஜாஉ கிர்மானீ (ரஹ்.) அவர்களின் செல்வப் புதல்வி அழகு சௌந்தரியமுடைய இள நங்கையாக இருந்ததின் காரணமாய், கிர்மான் அரசர் அம்மாதை விவாகம்புரிந்து கொள்ள உத்தேசங்கொண்டு மெள்ள சாதுர்யமாக ஆள்மூலம் பெண்பேசி, தம்விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். ஹஸ்ரத் அவர்கள் மூன்று தினத்தில் பதில் சொல்வதாகக் கூறிவிட்டு, பள்ளிவாயலுக்குச் செல்லுந்தோறெல்லாம் அல்லாஹ்வுக்குப் பயந்து நடக்கும் முத்தகீ யாரும் கிடைக்கின்றார்களா வென்பதிலேயே கவனஞ் செலுத்திக் கொண்டிருந்தார்கள். இந் நிலைமையில் ஒருநாளன்று மிக பயபக்தியோடு தொழுது கொண்டிருக்கும் ஒருவரை சந்தித்து, 'உமக்கு விவாகம் நடைபெற்றுவிட்டதா? வென வினவினார்கள். அதற்கு அம்மனிதர் 'எஜமானவர்களே! என் வசம் மூன்று திர்ஹம்மட்டுமிருக்கும் நிலைமையில், எனக்கு யார் பெண்கொடுக்கப்போகின்றார்கள்?' என தாழ்மையோடு அறிவித்துக் கொண்டார். உடனே ஹஸ்ரத் அவர்கள் அன்னவரை நோக்கி, 'யான் என் குமாரத்தியை உமக்கு விவாகஞ்செய்து கொடுக்கின்றேன்; உம்மிடம் காசு பணம் இருக்கவேண்டுமென்னும் அவசியங் கிடையாது; ஆகவே உம்மிடமிருக்கும் 3 திர்ஹத்தில், ஒரு திர்ஹத்திற்குச் சாப்பாடும் மற்றொரு திர்ஹத்திற்கு வாசனைதிரவியமும் மூன்றாவது திர்ஹத்துக்கு இனிப்பு வஸ்த்துவையும் வாங்கிவாரும்; உமக்கு விவாகஞ்செய்து தருகிறேன்' எனக் கூறினார்கள். அம்மனிதன் ஹஸ்ரத் அவர்களின் கட்டளைக்கேற்ப சாமான்கள் வாங்கிவரவே, தங்களது அருமைப் புதல்வியை விவாகஞ்செய்து கொடுத்துவிட்டார்கள். உடனே அம் மனிதர், பெரும் குடும்பத்திலுதித்த ராஜகுமாரியான அழகு பொருந்திய இளநங்கையை அழைத்துக்கொண்டு தன்னிருப்பிடமாகிய குடிசைக்குச் சென்றார்: அரசகுமாரி அங்கு வந்து பார்க்கும்போது, ஒருமூலையில் வைக்கோல் புல்லினால் கட்டப்பட்ட ஒரு தலையணியும், மற்றொரு பக்கல் மண் கூஜா ஒன்றும் வைக்கப்பட்டு அதன்மீது காய்ந்து உலர்ந்து போன உரொட்டித் துண்டொன்றும் காணப்பட்டது. அரசகுபாரி இதனைப்பார்த்து விட்டு தன் கணவர் பக்கல் விழித்து 'இஃது யாதாகுமென வினவினள். அவ்வேழை மனிதர் பயந்துபோய், 'இது நேற்றயதில் மிஞ்சியதாகும்; இதனை இன்றைய உபயோகத்திற்காக வைத்திருக்கின்றேன்' எனக் கூறினார். இதனைச்செவியுற்ற அரசகுமாரி உடனே எழுந்துநின்று தன் தந்தையின் இல்லம் செல்வதற்குப்புறப்பட்டுவிட்டாள். அம்மாதுசிரோன்மணியின் புருடனாகிய அவ் வேழை மனிதர், இதனைக்கண்டு துக்கசாகரத்தில் மூழ்கியவராய் 'ஒரு இராஜகுமாரி என்போலொற்ற கைக்கில்லா ஏழை மனிதன்வீட்டில் வாசஞ் செய்யமுடியாதென்பதை ஏற்கனவே யானறிவேன்' எனக்கூறினான்: அரசகுமாரி இவ்வார்த்தையைச் செவியுற்றவுடன் அப்படியே நின்றுகொண்டு 'நீர் தரித்திரதிசையுள்ள ஏழையாக இருப்பதைப் பார்த்துவிட்டு யான்செல்லவில்லை; பெரும்பதவியினை அடைந்திருக்கும் என் அருமைத் தந்தையவர்கள், என்னை ஒரு பேணுதலுடையவருக்கு விவாகஞ்செய்து கொடுப்பதாய்க்கூறியிருந்தார்கள்; ஆனால் யான் இங்குவந்து எவ்விஷயத்தைப்பார்க்கின்றேனோ அதுபேணுதலுடையவர்கள் செய்யக்கூடிய விஷயமாகக் காணப்படவில்லை; ஒரு பேணுதலுடைய மனிதர் அல்லாஹ்தஆலா தனக்கு மறுநாளைக்கு ரிஜ்க் கொடுப்பானென்று அவன்மீது உறுதி (தவக்கல்) வைக்காது மறுநாள் சாப்பிடுவதற்காக ஏதாகிலுமொருவஸ்துவை மீதிப்படுத்தி வைப்பாரா?' எனக்கேட்டாள். இராஜகுமாரியின் வாயிலிருந்து இவ்வரும் மொழிகள் வெளிவந்ததைக் கண்ட அவ்வேழை மனிதர், நாவெழாது மௌனமுடன் அப்படியே நின்றுவிட்டுக் கடைசியாக மன்னிப்புத் தேடிக்கொண்டு, "இப்பாவத்தைநிவர்த்தி செய்வதற்கு ஏதாகிலும் பரிகாரமுண்டா?" வென் வினவவே, ஆம் ஒரே பரிகாரந்தானிருக்கிறது அதாவது, "இக்குடிசையில்' ஒன்றிருக்கில் நானிருக்கவேண்டும்; அல்லது இந்தஉரொட்டித்துண்டிருக்கவேண்டும்" என இராஜ குமாரி அறிவித்தாள். உடனே அவ்வேழை மனிதன் அந்த உரொட்டித் துண்டை எடுத்து வேறொரு பரம ஏழையிடம் கொடுத்து விட்டு

தம் இல்லறத் துணைவியிடமிருந்து (தவக்கல்) அல்லாஹ்வின்மீது ஆதரவு வைப்பதென்னும் பாடத்தை தக்க முறையில் கற்றுக்கொண்டார்.

* * *

ஷேக் அபூஹம்ஜா குராஸானீ (ரஹ்.) அவர்கள் ஒருமுறை வெளிதேசப் பிரயாணஞ் செல்லுங்கால், யாரிடமிருந்தும் உண்ணவோ பருகவோ அல்லது வேறு எவ்வாறான உதவியோ பெறலாகாதென்னும் உறுதிகொண்டு ஒரு (கிளாஸ்) தண்ணீர்ப் பாத்திரத்தைக்கூட கையிலெடுக்காது வெளிப் புறப்பட்டுவிட்டார்கள். அவ்வாறு புறப்படுங்கால் ஹஸ்ரத் அவர்களின் சகோதரி ஒருவெள்ளி நாணயம் கொடுத்ததைக் கூட வழிநடைப்பாதையில் கீழே எறிந்துவிட்டு கால்நடையாகச் செல்லுங்கால், வழியிலுள்ள தரைமட்டமான ஒரு கிணற்றிற்குள் தவறுதலாய் விழுந்துவிட்டார்களாதலின் மூன்று நாட்கள்வரை அதிலேயே கிடக்கவேண்டியிருந்தது. மூன்றாவதுநாள் மனிதசஞ்சாரத்தின் அரவம்கேட்டு அவர்களிடம் உதவி தேடலாமெனக் கருதினார்களாயினும் அவ்வாறு உதவி தேடுவது தாங்கள் ஏற்கனவே செய்துகொண்ட உறுதிமொழிக்குவிரோதமாக இருக்கிறதெனக் கருதி மௌனமாயிருந்துவிட்டார்கள். அதுபொழுது அவ்வழியே சென்றவர்கள் ஆலோசனை புரிந்து, இவ் வழியே செல்லும் வழிப்போக்கர்கள் இராக்காலங்களில் இங்கு செல்லுங்கால் இக்கிணற்றில் விழுந்து விடுவார்களென்று பயந்து ஒரு பெரும் கல்லை எடுத்து அதன் வாயலை அடைத்து விட்டார்கள். இவ்விஷயம் கிணற்றிற்குள்ளிருந்த ஷேக் அவர்களுக்குத் தெரிந்தவுடன், பெரும் குழப்பத்தில் வந்து உயிர்வாழ்வதின் முழு ஆதாரவுமற்றுப்போய் விட்டதாயினும் கடைசியாக மனதை ஒருவாறு சமாதானப்படுத்திக் கொண்டார்கள். இவ்வாறு இரவு கழிந்துகொண்டிருக்கும்போது ஒரு மிருகமானது அக்கல்லை ஒதுக்கி விட்டு தம் வாலைக் கிணற்றிற்குள் தொங்கவிடுவதைக் கண்டார்கள். ஹஸ்ரத் அவர்கள் இதனைக் கண்டு இம்மிருகத்தின் உதவியைக்கொண்டு வெளிச்செல்லக் கூடாதென எண்ணினார்கள். உடனே மறைவிலிருந்து "ஓ அபூஹம்ஸா! நீர் எண்ணுவது வழக்கத்துக்கு மாற்றமாக இருக்கிறது; நாம்தான் அம்மிருகத்தை அனுப்பியிருக்கிறோம்; உடனே வெளிப் புறப்பட்டு வாரும்" என்னும் அசரீரி சப்தம்கேட்டு அம்மிருகத்தின் வால் உதவிகொண்டு வெளிவந்து விட்டார்கள்.

* * *

ஒருமுறை பக்தாத் நகரிலுள்ள மிருகங்கள் விற்பனைச்சாலைக் கடைத்தெரு தீக்கிரையாயினமையால், அநேக உயிர்ப்பிராணிகளுக்கும் பொருள்களுக்கும் பெருத்த சேதமேற்பட்டுப் போயிற்று. அதுபொழுது ஒரு ஐசுவரியவானின் அழகுபொருந்திய இருஅடிமைகளும் அத்தீயில் மாட்டிக்கொண்டு விட்டனர். உடனே அத் தனவந்தர், யாராகிலும் இவ்விரு அடிமைகளையும் நெருப்பினின்று காப்பாற்றிவிடுவாராயின் அன்னாருக்கு இரண்டாயிரம் தங்க நாணயங்களை சன்மானமாக அளிப்பேனென பஹிரங்க அறிக்கை செய்தார். ஆனால் யாரும் அந்த நெருப்பிற்குள் பிரவேசிக்க தைரியம் கொண்டார்களில்லை. உடனே ஹஸ்ரத்ஷேக் அபுல்ஹஸன் நூரீ (ரஹ்.) அவர்கள் பிஸ்மில்லாஹ் ஓதியவர்களாய், சுழல்விட்டெறிந்து கொண்டிருக்கும் அத்தீயில் குதித்து அவ்விரு அடிமைகளையும் யாதொரு பின்னமுமின்றி வெளியிற்கொணர்ந்து சேர்த்துவிட்டார்கள். அவ்வடிமைகளின் எஜமானரான ஐசுவரியவானே தாம் வாக்களித்ததற் கேற்ப 2,000 தங்க நாணயங்களை எடுத்துக் கொடுக்க ஆரம்பித்தார். ஹஸ்ரத் அவர்களோ அதனை மறுத்துவிட்டு, யான் உலகத்தையும் அதன் அபிலாஷைகளையும் விட்டிருப்பதனால்தான் இப்பதவியை அடைந்திருக்கிறேனாதலின் மறுபடியும் அதனை எவ்வாறு பெற்றுக்கொள்ள இயலுமெனக் கூறி விட்டார்கள்.

* * *

ஒருநாளன்று ஹஸ்ரத் அபூமுஹம்மது முர்தயிஸ் (ரஹ்) அவர்கள் பக்தாத் நகரின் வீதிவழியே சுற்றிவருங்கால் தாகவிடாய் மேலிட்டவர்களாய் ஒருவீட்டு வாசற்படியண்டை அணுகித் தண்ணீர்மீது தங்களுக்கு விருப்பமிருப்பதைத் தெரிவித்துக்கொண்டார்கள். உடனே அழகு சௌந்தரியமுடைய ஒரு யௌவன மாது தண்ணீர்ப்பாத்திரத்தைக் கையிலெடுத்தவளாய் வெளியில் புறப்பட்டு வருவதை ஹஜ்ரத் அவர்கள் பார்த்து, மனம் ஏமாற்ற மடைந்தவர்களாய் தண்ணீரை வாங்கிக் குடித்துவிட்டு அந்த வாசற்படியிலேயே உட்கார்ந்து விட்டார்கள். பின்னர் சற்றுநேரங்கழித்து வீட்டுக்குடையவர் உள்ளாலிருந்து வெளியில் வந்தார். ஹஸ்ரத் அவர்கள் அன்னவரைவிளித்து

சோதர! "உமது இவ்வீட்டிலிருந்து அழகு சௌந்தரிய முடைய ஒரு இளநங்கை வெளியில்வந்து, எனக்குத் தண்ணீர் கொடுத்ததுடன் என் ஹிருதயத்தையும் கைப்பற்றிச் சென்றுவிட்டாள்" என்று கூறியதைச் செவியுற்ற அம்மனிதர், ஹஸ்ரத் அவர்களை இன்னாரென்று தெரிந்துகொண்டு, "அவள் எனதருமைப் புத்திரியாகும்; தாங்கள் அவளை மணம்புரிந்து கொள்ள நாடுவீர்களாயின் இதோ தயாராக இருக்கின்றாள்" எனக் கூறியதை ஹஸ்ரத் அவர்கள் அங்கீகரித்துக் கொண்டார்கள். உடனே அம்மனிதர் ஹஸ்ரத் அவர்களை குளிப்பாட்டி அழகுபொருந்திய உடைகளை அணியும்படிசெய்து திருக்கல்யாண சபையைக் கூட்டி நிகாஹ்செய்து கொடுத்துவிட்டார். உடனே பெண்ணும் மாப்பிள்ளையும் ஒரு வீட்டிற்குள் அனுப்பப்பட்டார்கள். ஹஸ்ரத் அவர்கள் உள்ளால் சென்றவுடன் தொழுகையி லாரம்பித்துவிட்டார்கள். தொழுகையை முடித்துக்கொண்டு திரும்பியவுடன் தண்ணுவற்றவர்களாய் அலறி அழ ஆரம்பித்தவர்களாய் தங்களது பழம் சட்டையைக் கொண்டுவரும்படி கூறினார்கள். உடனே அஃது கொண்டுவரப்படவே, தாங்கள் அணிந்திருந்த புதிய சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு, பழையதை அணிந்துகொண்டு விவாகஞ்செய்து கொண்ட பெண்ணை தலாக் கொடுத்துவிட்டு வெளிப்புறப்பட்டு விட்டார்கள். அதுபொழுது அங்குகூடி யிருந்தவர்கள் யாவரும் ஹஸ்ரத் அவர்களை நோக்கி, தாங்கள் இவ்வாறு செய்ததற்குக் காரணம் யாதாகுமென வினவவே, யான் கல்யாணப் பெண்ணுடன் அறைக்குட் பிரவேசித்தவுடன் "ஒரு பார்வைக்குப் பகரமாய் (பக்ர்) மிடுமைத்தனமென்னும் சட்டையைப் பிடுங்கிக்கொண்டோம்; இப்பொழுது இரண்டாவது பார்வை ஏற்படுமாயின் சிநேகிதத் தன்மை என்னும் உடுப்பும் கைபிழக்கப்பட்டுப் போய்விடும்" என்னும் அசரீரி சத்தமொன்று வெளியானது. அதனால் இவ்வாறு செய்யும்படி நேரிட்டதெனக் கூறினார்கள்.

ஹிபாஜத்தின் அரிய சேவை

ஜனப் மௌலவீ S. K. முஹம்மது ஷர்புத்தின் சாஹிப் அவர்களின் சிலோன் பிரயாணம்.

நேயன்மீர்! நமது ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கமும், அதன் பிரதான நோக்கங்களை எடுத்து வெளியிட்டுப் பிரசாரம் புரிந்து வரும் உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்னும் செந்தமிழ் இனிய மாசிகையும் நமது தூய்மைவாய்ந்த சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கத்தின் உண்மைக் கொள்கைகளை இனிதெடுத்தோதிமார்க்க சமூகத்தொண்டாற்றி வருவதை நீங்களெல்லீரும் நன்கறிந்தே இருக்கின்றீர்கள்.

இக்காலே உலகமக்களின் போக்கு எவ்வாறிருந்துவருகிறது; அன்னோரின்மனப்பான்மை நடை உடை பழக்கவழக்கம் ஆகியவைகள் எவ்வாறுவிபரீதமடைந்திருக்கிறது என்பனவற்றை ஆராய்ந்து பார்ப்போமாகில், அச்சுழல்காற்றில் நமது முஸ்லிம் சமூகமும் சிக்குண்டு போய், தமது நடை உடை பாவனை நாகரீகம் முதலியவைகளை யெல்லாம் மாற்றி யமைக்க முற்பட்டு வருவதைக் காண்கின்றோம். அவைகளை சீர்திருத்தமுன்வந்து, உண்மை இஸ்லாமிய நாகரீகத்தை மக்களுக்கெடுத்து போதித்து வருவது உங்கள் 'ஹிபாஜத்' துத்தானென்பது மறைந்த விஷயமன்று. இஸ்லாத்தின் பாதுகாவலனை இந்த உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" கடந்த நான்காண்டுகளாய்ப்புரிந்துவரும் அருஞ்சேவைகளை நம் தென்னாடென்ன? சிலோன், மலாயா, ஜாவா, பர்மாமுதலிய தேசங்களில் வதியும் முஸ்லிம்களும் போற்றிப் புகழ்ந்து வருகின்றார்கள். இவ்வாறாக சேவைபுரிவதற்கு ஆதரவாக இருந்துவருவது உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்னும் மாசிகையேயாதலால் அதனை அபிவிருத்திக்குக் கொண்டு வருவது உங்கள் கடமையல்லவா?

தமிழ் முஸ்லிம்களுக்காக வென்று ஒரு சில மாசிகைகளும், பத்திரிகைகளும் காணப்படினும் அவைகள் நம் சமூக ஜனத் தொகைக்குப் போதியனவாக இருக்கவில்லை. அதிலும் சன்மார்க்க முரணில்லாது சத்தியத்தை எடுத்தோதும் சத்தொழுக்கம் ததும்பும் பத்திரிகை மிக

மிக அரிதாகவே இருந்துவரும் இந்நிலைமையில், நீங்கள் உங்கள் ஹிபாஜத்தை அன்போடு ஆதரித்து அபிவிர்த்திக்குக் கொண்டுவரவேண்டியது உங்கள் கடமையல்லவா? இவ்வுண்மைகளை உணர்ந்த நீங்கள், இனியாகிலும் விழிப்புற்று ஒருமுகமாய் இதனை ஆதரித்து மென்மேலும் ஓங்கச் செய்வதற்குத் தக்கனசெய்ய முன் வருவீர்களாக.

நமது சங்கத்தின் பிரதான நோக்கங்களைப் பொதுமக்களுக் கெடுத்துக் கூறவும் அதனைப் பிரசாரம் புருந்துவரும் மாசிகையின் அபிவிர்த்தியைக் கருதியும் நமது பிரதிநிதியாகிய ஆலீ ஜனுப் மௌலானு மௌலவீ முஹம்மத் ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் சென்ற 1932-ம் ஆண்டின் ஆரம்பத்தில் சிலோன் சென்றிருந்தக்கால் அங்குள்ள பிரமுகர்களில், கொளும்பில் ஜனுப்களான அல்ஹாஜ் P. S. K. V. பல்வாக்கு லெப்பை ஆலிம், அல்ஹாஜ் செயித் உமர்லெப்பை, அல்ஹாஜ் A.M.K. ஆலிம் சாஹிப், ம. கா. மு. ஷ. மக்கி ஆலிம் சாஹிப், P. M. K. A. ஜுனைத், M. S. அப்துற்றஹீம் லெப்பை, T. M. K. அப்துல்லா சாஹிப், மர்தானு K. ஷாஹுல்ஹமீது, கொளும்பு புகாரி ஹோட்டல் K. M. அப்துல்காதிர், ஹமீதிய்யா பேக்ரீ ஓனர் அல்ஹாஜ் J. E. அஹ்மத்சாஹிப், A. காதிர்பாக்ஷா சாஹிப், மௌலானு ஜனுப் ரவூப்பாக்ஷா சாஹிப் முதலிய கனவான்களும், ரத்னபுரியில் ஜனுப்களான M.K.M.K. முஹம்மது அபூபக்ர் லெப்பை, P.M.S. நூருத்தீன் அப்துல்காதிர் கம்பெனியார், W. M. K. S. ஷாஹுல் ஹமீது முதலியவர்களும், கண்டியில் ஜனுப்களான A. E. A. யூசுப் சாஹிப் கம்பெனியார், மேற்படி கம்பெனி பிராஞ்சு மானேஜர் அப்துல் கரீம் சாஹிப், கமால் நைனுர் கம்பெனியார், ஸலாமா ஸ்டோர் A. R. அப்துற்றஹீம், முஹம்மது ஹுசைன் ஆலிம் சாஹிப், தைக்காப்பள்ளி கதீப் முஹியித்தீன் ஆலிம் சாஹிப் முதலியவர்களும், கம்பளையில் மஸ்ஜித் முத்தவல்லி ம. ச., நூர்ஜஹான் கம்பெனியார், ஜனுப் E. தாவூத் சாஹிப் கம்பெனியார் முதலியவர்களும் இன்னுமனேக கனவான்களும் அன்புடன் வரவேற்று அங்காங்கு மகா சபைகள் கூட்டி அரும் உபதேசங்கள் நடைபெறுவதற்குத்தக்க ஏற்பாடு செய்ததையும் பத்திரிகை அபிவிர்த்திக்கு முயற்சி செய்ததையும் நாம் ஒருக்காலும் மறந்துவிட முடியாது. அல்லாஹ்தஆலா அக்கனவான்களின் இந்நன் முயற்சிக்கு தக்க பயனளிப்பானுக.

ஜனுப் மௌலவீ சாஹிப் அவர்கள் அதுபொழுது அநேகரின் விருப்பத்திற்கிணங்க இன்னுமனேக இடங்களுக்குச் செல்லாது திரும்பிவர நேரிட்டதால், அங்குள்ள பலரின் வேண்டுகோளுக்கிணங்க சமீபத்தில் அங்கு பிரயாணஞ் செய்யவேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்ஷா அல்லாஹ் மௌலானு அவர்கள் கூடிய சீக்கிரம் சென்னையை விட்டுப் பிரயாணமாகி கொளும்பு போய்ச் சேர்ந்து, அங்கிருந்து பல இடங்களுக்கும் செல்வார்களாயின் ஆங்காங்குள்ள மார்க்க பக்தி பூண்டொழுகும் கனவான்கள் யாவரும் அவர்களை அன்போடு வரவேற்று அரிய உபதேசங்களைக் கேட்டு பயன்பெறுவார்களென எதிர்பார்க்கின்றோம்.

மேலும் நமது மாசிகைக்குள்ள சந்தாவை இதுவரை சிலர் அனுப்பாமலே இருந்துவருவதால், அன்னோர் ஜனுப் மௌலவீசாஹிப் அவர்களிடம் தங்கள் சந்தாக்களைச் செலுத்தியும், இன்னும் ஏராளமானோர் புதிதாக சந்தாதார்களாய்ச் சேர்ந்து ஆதரவும் புரியவேண்டுமெனக் கோருகின்றோம். எல்லாம் வல்ல அல்லாஹ் ஜல்லஷானுஹுவதஆலா ஜனுப் மௌலானு அவர்களின் இப்பிரயாணத்தை வெற்றிகரமாய் முடித்து வைப்பானுக.

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்.

கள்ளிக்கோட்டையில் காதியானிகள்.

சுத்த சத்திய இஸ்லாத்துக்கே நேர்முரணை காதியானிக் கொள்கை நம் சென்னை மாகாணத்தில், மலையாள பிரதேசத்தில் தான் முதன் முதல் ஆரம்பமாகப்பரவத்தொடங்கிற்று. அதிலும் பிரதானமாய்க்கள்ளிக்கோட்டைதான் அந்தத்தொத்துநோயின் இருப்பிடமாக அமைந்து வந்தது; ஆங்குள்ளசிலர் காதியானிகளிடம் சம்பளம் பெற்று அவ்வியாதியைப் பரத்த ஆரம்

பித்தனர். வாலிபர்களிலனேகருக்கு சன்மார்க்க வரம்பிற்குட்பட்டு நடப்பது ஒருபெரும்தடையான விலங்கேபோல் காணப்படுகிறதென்பது வெள்ளிடை. எனவே, அன்னோர் கண்டதே காக்ஷி கொண்டதேகோலம் என்றுநடக்கவிருப்பங்கொள்கின்றார்களாதலின் வழிகெட்ட காதியானிக் கொள்கை அவர்களுக்குச் சௌகரியமாகத் தோன்றுகிறது. எனவே இத்தீயப்ரசார வலையில் முதன்முதல் அன்னோரே சிக்கிக் கொண்டு அவ்வியாதிக்காளாகின்றனர். மலையாளப் பிரதேசத்தில் உலமாக்களும் அறிஞர்களும் இக்கொள்கையை மறுத்துவந்தனராயினும் பொதுஜனங்கள் அதன் கெடுதி இன்னதுதான் என்பதைக்கண்விழித்துப் பார்க்காதிருந்ததின் காரணமாக, அக்காலை ஒருமுஸ்லிம் காதியானிக் கொள்கையைப் பின்பற்றிக்கொண்டான். அதனால் அவன் முர்தத்தாய்விடுகிறானதலால், அவனுக்கும் அவன்பெண்சாதிக்கு மிடையிலுள்ள விவாகப்பந்தம் தானே நீங்கிப் போய்விட்டதென்று அப் பெண்ணின் உறவினர்கள் கூறி இருவருக்கிடையிலுமுள்ள சம்பந்தத்தை நீக்கிவிட்டார்களாதலின், அந்தகாதியானி அப்பெண்ணைத்தன்னுடன் சேர்த்துவைக்க வேண்டுமென்று தாவாச்செய்தான். ஸ்தல நீதிஸ்தலத்தில், அவன் மதமாறிவிட்டதால் விவாக றத்து ஏற்பட்டுவிட்டதெனத் தீர்ப்புக் கூறப்பட்டது. அந்தகாதியானி மறுபடியும் அத்தீர்ப்பைமாற்ற வேண்டுமென சென்னை ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டபொழுது வட்தேச அஹ்மதிகள் வேண்டிய உபகாரம் புரிந்தனர். அதுகாலை பெண்தரபாருக்குப் பக்கபல மில்லாதிருந்ததால் ஹைகோர்ட்டில் கேஸை பலமாய் நடத்த அவர்களால் முடியாதுபோயிற்று. இந்நிலைமையில் ஹைகோர்ட்டார் இஸ்லாத்திலுள்ள நுட்பங்களை நன்குணராது, காதியானிகளும் ஒருவகையான முஸ்லிம்களென்றே தாங்கள் கருதுவதாக தங்கள் தீர்ப்பில் கூறிவிட்டார்கள். அதுபொழுது முஸ்லிம் பொதுமக்கள் இவ்விஷயங்களைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவந் திருப்பார்களாயின், விஷயம் இவ்வாறு முடிவுபெற்றிரா தென்பது திண்ணம். மேலும் தக்கமுறையில் ஜட்ஜுகளுக்கு விஷயங்கள் எடுத்துக் காட்டப்பட்டு, வடதேச கோர்ட்டுகளில் முடிவுபெற் றிருக்கும் தீர்மானங்களை ஆதாரமாகக் காண்பிக்கப்பட்டிருக்குமாகில் இவ்வாறான முடிவேற் பட்டிருக்க நியாயமில்லை. அதற்கு நமதுமுஸ்லிம் சமுகம் கவனக் குறைவாக இருந்ததுதான் முக்கியக் காரணமாகும்.

அதற்குப்பின் அப் பிரதேசவாசிகள் காதியானிக் கொள்கைகளின் இரகசியங்களை உணர ஆரம்பித்தனர். எனவே சமீபத்தில் 31-1-34ல் கள்ளிக்கோட்டையில் காதியானிகள் தங்கள் இனத்தைச் சார்ந்த ஒருஜனாஸாவை சுன்னத் ஜமாஅத்தாரின் கபரஸ்தானில் அடக்கம்செய்ய எத்தனித்தபொழுது, 10,000 சுன்னிமாப்பிள்ளை முஸ்லிம்கள் முன்வந்து அடக்கஞ் செய்யக்கூடாதென்று தடைசெய்யவே, காதியானிகள் வெகுதூரம் முயற்சித்துப்பாாத்தும் ஜம்பம்பலியாது, அதைவிட்டு வேறு இடத்துக்குக் கொண்டு சென்று அங்கு அடக்கம்செய்தார்கள். இச்சம்பவநிகழ்ச்சியின்போது மிக்க அபாயநிலை ஏற்பட யிருந்ததை டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டும் போலிஸ் அதிகாரிகளும் மிக்க திறமையாக சமாளித்து அமைதியைப் பாதுகாக்க எடுத்துக் கொண்ட முயற்சி போற்றத்தக்கதாகும்.

இச்சம்பவத்துக்குப் பின் கள்ளிக்கோட்டையின் நிலைமை மாறுதலடைந்து வருவதாய்த் தெரிகிறது. அங்குள்ள முஸ்லிம் பொதுஜனங்கள் அஹ்மதியர்களின் வழிகெட்ட கொள்கைகளை நன்குணர்ந்து வருவதால், அன்னாரை காபிர்களென்று தீர்மானித்து அவர்களுடன் எவ்வாறான இஸ்லாமிய சம்மந்தமும் வைத்துக் கொள்ளக் கூடாதென்னும் முடிவுக்கு வந்து அவர்களை வெறுத்தும், கண்டித்தும், பகிஷ்கரித்தும் வருவதால், மார்க்கஞானமின்மையாலும் சுயநலமிகளான கூலிக்கு மாரடிக்கும் குண்டர்களான அஹ்மதியப் பிரசாரகர்களின் பசப்பு வார்த்தைகளைக்கண்டு ஏமாந்து போய் அக்கொள்கையின் கெடுதிகளை உணராததாலும் அத்தீயகொள்கையில் சிக்குண்ட பலர், இதுபொழுது கண்விழித்து வழிகெட்ட காதியானிக் கொள்கையைவிட்டுத் தௌபாச் செய்து மீண்டு கலிமாச்சொல்லி இஸ்லாத்தில் சேர்ந்துகொள்வதுடன் அஹ்மதியக் கொள்கையைத் தழுவியதால் றத்தாய்ப்போயிருந்த விவாகங்களையும் புதுப்பித்துக்கொண்டு வருகிறார்களென்னும் சுபச்செய்தியை அடியிற் குறிப்பிடப்படும் தந்தி சமாச்சாரத்தைக்கொண்டு நாம் நன்கு தெரிந்துகொள்கிறோம். அது வருமாறு:—

கள்ளிக்கோட்டை,
பிப்ரவரி, 13.

அஹ்மதியர்கள் இதுபொழுது தங்கள் தவறையுணர்ந்து தௌபாச் செய்து சுன்

னத் ஜமாஅத்தில் சேர்ந்துகொண்டார்கள். இவர்களை தௌபாச் செய்யும்படி செய்து புதிதாக இஸ்லாத்தில் சேர்த்து வைக்கப்பட்டனர். இவர்களுக்கு தங்கள் மனைவிமார்களுடன் மீண்டும் புதிதாக விவாகமுஞ் செய்துவைக்கப்பட்டது. அறியாமையாலும், அஞ்ஞானத்தாலும் தாங்கள் ஒரு வருஷகாலமாய் அஹ்மதியாக இருந்துவந்ததாயும், அதற்காக தாங்கள் இப்போது வருந்துவதாயும், தாங்கள் இதுபொழுது தவறையுணர்ந்து மீண்டும் சுன்னத்ஜமாஅத்தில் சேர்ந்துகொண்டதாயும், அவர்களிலொருவர் ஒரு துண்டுப்பிரசுரத்தையும் வெளியிட்டிருக்கிறார். அதில், கள்ளிக்கோட்டை வலியகாஜீ (பிரதம காஜீ)யாகிய காஜீ செய்யித் இம்புச்சுகோயாதங்கள் அவர்கள் முன்னிலையில் தௌபாச் செய்து இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டதாகவும் குறிப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வாபாசக் கொள்கை முதன்முதல் அடிவைத்த இடத்திலிருந்தே இதுபொழுது அதற்குப் பரிகாரம் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. இவ்வாறே அல்லாஹ்தஆலா மற்றவர்களையும் இத்தீயகொள்கையினின்று வெளியில் கொணர்ந்து விடுவானாக.

'மரத்தைப் பிடித்தபேய் மனிதனையும் பிடித்துக்கொண்டது' என்று கூறுவதற்கேற்ப துர் அதிர்ஷ்டவசமாய் நம் தமிழ்நாட்டிலும் சில காலமாய் இவ்வியாதி சிலரைப் பிடித்து ஆட்டிவைக்க ஆரம்பித்திருக்கிறது. எனவே ஒரு சிலர் பகிரங்கமாகவும், மற்றுஞ்சிலர் அந்தரங்கமாகவும் இத்தீய கொள்கையில் சிக்குண்டுழலுகின்றனர். ஆனல் பொதுமக்கள் இதன் உண்மைகளை நன்கு தெரிந்துகொள்ளாது, இஃது ஏதோ ஒரு சாதாரண விவாதமென்று கருதி வாளாவிருந்து வருகின்றார்கள். கேரள முஸ்லிம்களைப்போல் நம்மவரும் உணர்ச்சிபெற்று ஏகதேசத்தில் இத்தீய கொள்கையை வெறுத்துத்தள்ளி பகிஷ்கரித்தாலன்றி (மாஆஸ்தீன்) சட்டைக்கையில் வாசஞ்செய்யும் பாம்பேபோல் நம்மைவிட்டு இவ்வியாதி அகலமாட்டாதென்பது திண்ணம். எனவே, நம்சோதரர்கள் இனியும் இவ்விஷயத்தில் அஜாக்கிரதையாக இராமல் ஆவனசெய்ய முன்வருவார்களாக!

மார்க்க வினு விடை

வினு:—தலாக் எத்தனை வகைப்படும்? தலாக்பாயின் தலாக்ரஜஈ இவைகளின் விவரமென்ன?

விடை:—இஸ்லாத்தில் தலாக் (விவாகரத்து) பலவாறு ஏற்படுகிறது. (1) தலாக் சொல்லியபின் மறுபடியும் ஒருகாலம்வரை அவளை மீட்டிக்கொள்ளும் சுதந்திரம் புருஷனுக்கிருக்கும்படியானது. இதற்கு தலாக் றஜஈ என்று சொல்லப்படும். (2) தலாக் சொல்லியபின் அவளை மீட்டிக்கொள்ளும் பாத்தியதை புருஷனுக்கில்லாதிருப்பது. இதற்கு தலாக்பாயின் என்று சொல்லப்படும். இவ்வாறான தலாக்குகளிலும் தலாக்க அஹ்ஸன், தலாக்கஹஸன், தலாக்கபித்அத் ஆகிய மூன்றுவிதமிருக்கிறது. (1) தலாக்க அஹ்ஸன் என்பது, ஒருமுறை தலாக் கொடுத்துவிட்டு இத்தா (தவணை) தீரும்வரை அவளிடம் போகாதிருப்பது. இவ்வாறான தலாக்கில் இத்தா முடிவடைவதற்குமுன் புருஷன் விரும்பினல் மீட்டிக் கொள்ளலாம். (2) தலாக்கஹஸன் என்பது, பெண்பிள்ளைக்கு மாதவிடாய் ஏற்படாதிருக்கும் நிலைமையில் சற்று இடைவிட்டு மூன்றுமுறை தலாக் கொடுப்பதாகும். இதில் மூன்ருவது தலாக் கொடுப்பதற்குமுன் அவளிடம் சம்பந்தப்படாமலுமிருக்கவேண்டும். இதற்கு தவணை செல்லுபடியாகவேண்டுமென்னும் ஆவசியங் கிடையா. ஆகவே மூன்ருவது தலாக்குக்குப்பின் தலாக்கபாயின் ஏற்பட்டுப் போகிறது; அதற்குப்பின் அவளை மீட்டிக்கொள்ள முடியாது; அவள் இத்தா இருக்கவேண்டியது அவசியமாய்விடுகின்றது. தலாக்கபிதயி என்பது, பெண்பிள்ளை மாதவிடாயை விட்டுத் துப்பரவாக இருக்குங்கால் ஒரேநேரத்தில் மூன்று தலாக் கொடுப்பதாகும். இதில் உடனே பிரிவினை ஏற்பட்டுப் போகிறது. அதற்குப்பின் அவளை எவ்வகையிலும் மீட்டிக்கொள்ள முடியாது; அவள் இத்தா இருக்கக் கடமைப்பட்டவளாகி விடுகின்றாள். எனவே மூன்றுமுறை தலாக் கொடுத்த

பின் இத்தாவினுடைய காலத்திலோ அல்லது இத்தா கழித்தபின்போ அவளை மீட்டிக் கொள்ளமுடியாது. ஆனால் அவளுடைய இத் தாத் தீர்ந்து வேறொரு புருஷனுக்கு விவாகஞ் செய்துகொடுத்து அவ்விருவரும் வீடுகூடிய பின்னர் அப்புருஷன் சந்தோஷமாகத் தலாக் கொடுத்து அதன் இத்தாவும் முடிவடைந்தபின் தான் நிக்காஹ் செய்யலாம்.

வினா:—இக்காலை மாதர்களுக்கிடையே சுயே ச்சை என்னும் ஒரு எழுச்சி ஏற்பட்டு வெளி யில் புறப்படுவதன் வழக்கம் காணப்படுகிறது. அதிலும் இளவாலிப நங்கையர்கள் அநேக பொதுசபைகளுக்கும் வரத்தொடங்கியிருக்கின் றனர். அன்னோரின் இச்செயலுக்கு நமது சன் மார்க்கத்தில் ஏதேனும் ஆதாரமிருக்கின்றதா?

விடை:—பற ஆடவர்கள் முன்னிலையில் எப் பெண்மணியும் செல்வதை நம் சன்மார்க்கம் இடமளிக்கவில்லை. பெண்டிர்கள் மெல்லிய உடை அணிந்தவர்களாய் தங்கள் அழகை வெளிப்படுத்திக்கொண்டு வெளியில் செல்வது நிச்சயமாய் விலக்கப்பட்ட காரியமாகும். முஸ் லிம் மாதுக்கள் பரபுருடர்களிடம் தங்கள் அழகை வெளியாக்கக்கூடாதென்று திருகுர் ஆன் கட்டளை பிறப்பித்திருக்கின்றது. மேலும் ஒருநாளன்று அஸ்மாபின்த் அபூபக்ர் (ரலி.) அவர்கள் மார்க்கசம்பந்தமான ஏதோ ஒரு விஷ யத்தை எம்பிரான் சத்தியத்தூதர் (ஸல்.) அவர் களிடம் கேட்பதற்காக வருங்கால், அம்மாது மெல்லிய புடவை அணிந்துவந்ததால் பெருமா னார் (ஸல்.)அவர்கள் அம்மாதினின்றும் தங்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டு ஓ! அஸ்மாவே! பெண்கள் வயதை அடைந்துவிடுவார்களாயின் இவ்வாறான புடவைகள் அணிந்து வெளியில் செல்லலாகாதெனக்கூறியதாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்களைத்தொட்டும் றிவாயத்துச் செய் யப்பட்டிருக்கிறதென 'மஷாரிகுல்அன்வார்' என்னும் கிரந்தத்தில் வரையப்பட்டிருக்கிறது. பர்தா சம்மந்தமாய் குர்ஆன்ஷரீபில் எங்கெங் கெல்லாம் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கின்ற தோ ஆங்கெல்லாம் முஸ்லிம்மாதுக்கள் தங்கள் பார்வையை கீழ்நோக்க வேண்டுமென்றும், தங் கள் மானங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டு மென்றும், தங்கள் அழகை பரபுருடர்களிடம் வெளிப்படுத்தக் கூடாதென்றும், தங்கள் பர்த் தாக்களிடமே தங்கள் அழகு சௌந்தர்யங்களை வெளிப்படுத்தவேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே மாதர்கள் பர ஆடவர்கள்முன்னிலையில் தங்கள் அழகைவெளி யாக்குவது சன்மார்க்கத்தில் விலக்கப்பட்ட காரியமாகும் (ஹறாம்).

வினா:—ஒரு காபிர் இஸ்லாத்தைக் கொண்டு சிறப்புற்றபின் காபிராக இருக்கும் அவனது தாய்தந்தையர்களைச் சந்திப்பது ஆகுமா? அது. பொழுது அவர்களுக்கு சங்கை மரியாதை செய்து அவர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமா?

விடை:—அல்லாஹ்தஆலா குர்ஆன்ஷரீபில் தாய் தந்தையர்களுடன் சதாவும் ஒழுங்கான முறையிலேயே நடந்துகொள்ளுங்களென்றும், நாம் மானிடர்களுக்கு, அவர்களது மாதாப் பிதாக்களுடன் தக்கமுறையில் நடந்துகொள் ளுங்களென்றும் கட்டாயப்படுத்தி யிருப்பதா யும், மானிடர்காள்! தாய்தந்தையர்கள், அயல் பாகக்காரர்கள், வழிப்போக்கர், வேலையாட்கள் ஆகியவர்களுடன் தக்கமுறையில் நடந்துகொள் ளுங்களென்றும் அறிவித்திருக்கின்றான்.

தவிரவும் ஹஸ்ரத் அஸ்மாஉபின்த் அபூபக்ர் (ரலி.) அவர்கள் அறிவிப்பதாவது: இஸ்லாத் தின் ஆரம்பத்தில் ஒருநாளன்று என் தாய் என் னிடம் வந்தகாலை அவள் விக்கிரக ஆராதனை செய்பவளாக இருந்ததால் அவளைச் சந்தித்துப் பேசாது எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களின் சமுகம் வந்து, என் தாய் என்னிடம் வந்திருக்கின்றாள்; அவள் இஸ்லாத்தின்மீது சற்று நோக்கங்கொள்வதுபோல் தெரிகிறது; அனுமதி கிடைத்தால் அவளைச் சந்தித்துப் பேசுகின்றேன் என்று கூறி அனுமதி கோரி னேன். அதற்கு எம்பெருமானார் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் 'ஓ! அஸ்மாவே! உன் தாயுடன் அழகிய முறையில் நடந்துகொள்வா யாக' வெனக் கட்டளை பிறப்பித்தார்கள். ஹஸ் ரத் அபூஉபைதா (ரலி.) அவர்கள் கூறுவதா வது: ஒருநாளன்று சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் மஸ்ஜித நபவிய்யில் வீற்றிருக்குங் கால், தங்கள் பால்குடித் தந்தை அதாவது ஹலீமாஸஅதிய்யாவின் கணவர் வந்தபொழுது அவருக்காகத் தங்கள் துப்பட்டியை விரித்து அதன்மீது அமரும்படி செய்தார்கள். பின்னர் ஹலீமாஸஅதிய்யா வந்தவுடன் மற்றொரு துப் பட்டியை விரித்து அதன்மீது உட்காரும்படி செய்தார்கள். இச்செய்கையால் நமது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் தாய் தந்தையர்

களுக்கு சங்கை மரியாதை செய்யவேண்டியது பிரதானமாகுமென்பதை தக்கமுறையில் கற்பித்துக் கொடுத்தார்களென்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம். ஆனால் தாய்தந்தையர்கள் சன்மார்க்கத்துக்கு விரோதமான ஏதாகிலுமொரு செயல் புரியுமாறு கூறுவார்களாயின் அக்காரியத்தில் அன்னோருக்கு வழிப்பட்டு நடப்பது கூடாது.

வினு:—ஒரு மாது தன் பர்த்தாவின்மீது அளவற்ற மோகங்கொண்டு போயிருந்த தால் அவனுக்கு வழிப்பட்டு நடப்பதைத் தமது பிரதான கடமையாகக் கருதுகின்றார்; இவளுடைய பார்வையிலிருந்து எப்பொழுதாகிலும் அவன் மறைந்து விடுவானுகில் அவளுடைய மனம்தரிபாடற்றநிலைமைக்குவந்துவிடுகின்றது. இந்நிகழ்ச்சிகளைக்கண்டு அநேகர் அப்பெண்ணை பரிகசிக்கத்தொடங்கி, பர்தாவின்மீது இவ்வாறு மோகங் கொண்டிருக்கலாகாதெனக் கூறுகின்றனர். இதுசம்மந்தமாய் நமது சன்மார்க்கம் யாது கட்டளையிடுகிறதென்பதைத் தெரியப்படுத்தும்படி கோருகிறேன்.

விடை:—புருடர்களுக்கு சங்கை மரியாதை செய்வதும் அவர்கள்மீது பிரீதி கொண்டிருப்பதும் பெண்சாதிமார்களின் கடமைகளிலுள்ளதாகும். எம்பெருமானூர் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களின் நம்பிராட்டிமார்கள் பெருமானூர் அவர்கள்மீது அளவுக்கதிகமான பிரீதிகொண்டிருந்தார்கள். பெருமானூர் (ஸல்.) அவர்கள் எங்காகிலும் (ஸபர்) பிரயாணஞ் செல்லுவார்களாயின் அவர்கள் நற்சுகத்தோடு திரும்பி வருவதற்காக நம்பிராட்டிமார்கள் பிரார்த்தனை புரிந்துகொண்டிருப்பார்கள். அவர்கள் வந்து சேர்ந்து விடுவார்களாயின் அல்லாஹ்தஆலாவுக்கு நன்றி செலுத்தும் முகத்தான் நபில் தொழுகை நிறைவேற்றுவார்கள். சஹபாக்களின் அருமைப் பத்தினிமார்களும் தங்கள் பர்த்தாக்கள்மீது அளவுகடந்த பிரீதிகொண்டிருந்திருக்கிறார்கள். ஆஸிமா என்னும் வீர மாது சிரோன்மணி தமது கணவர் கடுசான நோய் வாய்ப்பட்டிருந்ததினிமித்தம் இரண்டு வருடகாலம் வரை இரவுமுழுதும் விழித்திருந்து புருடருக்கு சம்ரக்ஷணை செய்யும்தொண்டில் ஈடுபட்டிருக்கின்றார்கள். ஹஸ்ரத் ஆத்திகா ரலி.) தமது பர்தாவான ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு அபூபக்ர்(ரலி.)அவர்கள்பால் அளவுகடந்த பிரீதிகொண்டிருந்தார்களாதலின் ஹஸ்ரத் அவர்கள் யுத்தகளத்தில் ஷஹீதாய்விட்ட செய்தி கேட்டு மதிமயங்கித் தன்னுணர்வற்றவர்களாய் விட்டார்கள். பின்னர் எழுந்து உட்கார்ந்து "தங்களுடைய ஞாபகத்தில் என் கண் சதாவும் வடிந்துகொண்டிருக்குமென்றும் என் திரேகம் புழுதிகலந்ததாக இருக்குமென்றும் பிரதிக்கினை செய்துகொண்டு விட்டேன்" என்னும் கருத்தமைந்த ஒரு கவியைப்பாடி துக்கசாகரத்தில் மூழ்கிவிட்டார்கள்.

இவ்வாறு பர்த்தாக்கள்மீது பிரீதிகொள்வதோடு அவர்களின் பணியாற்றுவதும் மாதர்கள்மீதுள்ள பிரதானக்கடமையாகும் ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீக்கா (ரலி.) அவர்கள், எம்பெருமானூர் (ஸல்.) அவர்களால் அதிகம் உகக்கப்பட்டவர்களாயிருந்தும் பெருமானூர் (ஸல்.) அவர்களுக்கு அதிகமாய் ஊழியஞ் செய்திருக்கின்றார்கள்; அநேக நேரங்களில் உடுப்புகளைத் துவைத்துக் கொடுப்பதுடன் பிரயாணத்துக்கு வேண்டிய சாமான்களை தங்கள் திருக்கரத்தினுல் தயார்செய்தும் வைப்பார்கள். ஆகவே புருடர்கள்மீது அளவற்ற பிரீதிகொள்வதும் அவர்களுக்குப் பணியாற்றுவதும் ஒவ்வொரு அறிவுள்ள மாதுக்கள்மீதும் பிரதானக்கடமையாகுமென்பதை மாதர் யாவரும் கவனித்துக்கொண்டுவருதல் அத்தியாவசியமாகும்.

கூத்தானல்லூர் சன்மார்க்க தொண்டர் சபை:—இதன் சட்டதிட்டங்களும், 1933-ம் ஆண்டின் வரவு செலவும் அடங்கிய ரிபோர்ட் வரப்பெற்றோம். அதில் சபையை நடத்துவதற்குள்ள சட்டதிட்டங்களும், சங்கம் ஆற்றிவரும் அரும் சேவைகளும், வரவுசெலவு கணக்கு விபரமும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவைகளை நோக்குங்கால், சபையின் நோக்கங்களெல்லாம் மிகமிகப் போற்றத்தக்கதாக இருப்பதுடன் தற்காலதேவைக்கு இன்றியமையாதனவைகளாகவுமிருக்கின்றன. தவிரவும் சிக்கனமான செலவில் அநேகபொது நலகாரியங்கள் நடைபெற்றிருப்பதைக் கண்டு நாம் மிக மகிழ்வெய்துகின்றோம். மேலும் சிங்கப்பூரில் இதற்கோர் கிளைஸ்தாபன மேற்பட்டு, இதன் அபிவிர்த்திக்குப் பக்கபலமாக சேவைபுரிந்து வருவதாகவும் தெரிகிறது. எனவே நிர்வாகிகள் தக்க முறையில் திருப்திகரமாய்ச் சேவைபுரிந்து வருவதை நாம் மிகமிகப் பாராட்டுவதுடன் இன்னும் ஏராளமானோர் மெம்பர்களாய்ச் சேரும்படியும், கனவான்கள் தக்க தனசகாயம் புரியும்படியும் வேண்டுகிறோம்.

செய்தித்திரள்

கொழும்பு.

'அல்மஸ்ஜிதுல்லாபிர்' 2-வது வருஷக்கூட்டம்.

கொழும்பு உல்பண்டால் ஸ்டிரீட்டிலுள்ள 'அல்மஸ்ஜிதுல்லாபிர்' பள்ளி வாசலின் 2-வது வருஷாந்திரப் பொதுக்கூட்டம் சென்றமீ 4-ந்வ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்குக் கூடிற்று. அக்கூட்டத்திற்கு ஜனாப்களான ஹாஜீ P. B. உம்பிச்சி, J. P. ஹாஜீ பா. சு. பல்லாக்கு லெப்பை ஆலிம் சாஹிப் அவர்களின் பிரதிநிதி ஹாஜீ க. வி. செய்யிது உமர்லெப்பை, ஹாஜீ பி. வி. சி. அப்துல்லா, மு. செ. அ. கோயாமரைக்காயர், மு. கா. மீ. ரு. முஹம்மது மீராசாஹிப், ஹாஜீ M. K. முஹம்மதுகனீ, M. E. உதுமான் அண்ட் ஸன்ஸ் அவர்கள் பிரதிநிதி, A. M. உதுமான் பிள்ளை பிரதிநிதி, வ. அ. முஹம்மது தம்பி மரைக்காயர், ஹாஜீ T. K. அப்துற்றஹ்மான் பிரதிநிதி T.K. அபூ, ஹாஜீ மு. ஒ. மு. முஹம்மது முஹியித்தீன் ஆலிம் சாஹிப் பிரதிநிதி முஹம்மது அப்துல்காதிர், பி. ஹுஸைன்கோயா, சே. வருசைக்கண்ணு மரைக்காயர் பிரதிநிதி ஜைனுல் ஆபிதீன், செ. மு. செய்யிது முஹம்மது ஆகிய கனவான்களும் இன்னுமனேகரும் விஜயஞ் செய்திருந்தனர்.

கனம் ஹாஜி M. K. முஹம்மதுகனி அவர்கள் அக்கிராசனம் வகிக்க, பேஷ் இமாம் தை. அ. செய்யிது அபூபக்ர் ஆலிம் அவர்களால் கிராஅத் ஓதப்பட்டு சபையின் நடவடிக்கை ஆரம்பமாயிற்று.

1933-ம் ஆண்டு டிஸம்பர்மீ 10ந்தேதி மீட்டிங்கில் தீர்மானிக்கப்பெற்ற விஷயங்கள் வாசித்துக் காட்டப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் 1934-ம் ஆண்டு ஜனவரிமீ 31-ந்தேதியோடு முடிவாகிற 2-வது வருஷாந்திரரிபோர்ட்டையும் கணக்குகளையும்காரியதரிசி ஆஜர் செய்தார். அவைகள் வாசித்துக்காட்டப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. ரிபோர்ட்டின் முடிவில் சிக்கனம் செய்ய வழியிருந்தால் அவைகளைப்பற்றி யோசிக்கவேண்டுமென காரியதரிசி குறிப்பிட்டிருந்த விஷயம் ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

கனம் ஹாஜீ P. B. உம்பிச்சி, J. P. அவர்கள் இப்பள்ளியைக்கட்டி வக்பு செய்ததோடு அதன் பராமரிபுக்காகத் தேவையான சொத்துக்களைக் கொடுத்தும் அதன் வருமானம் போதாமையால், இந்தக்கமிட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்க மேற்கொண்டும் வருமானம் வரக்கூடிய சொத்தைக் கொடுத்தும் பேருபகாரஞ் செய்துள்ளார்களாகையால் பள்ளி சம்மந்தமாக கனம் ஹாஜீ P. B. உம்பிச்சி J. P. அவர்களை மறுபடியும் கேட்டுக்கொள்ளக் கூடாதென்றும், போதிய வருமான மிருப்பதால் அதைக் கொண்டே நிர்வாகத்தைச் சிக்கனமாக நடத்திக் கொள்ள வேண்டுமென்றும் ஆலோசனை கூறப்பட்டது.

சென்ற வருடத்தில் ஸ்நான அறை கட்ட வேண்டிய விஷயத்திலும் சலவைக்கல்லில் பைத்துகள் வரைந்து பதித்த வகையிலும் இன்னும் சில வகையிலும் செலவேற்பட்டு விட்டதால், அதிகமாய் மிச்சப்படுவதற்கு ஹேதுவில்லாது போய்விட்டது. சம்பளம் முதலியவைகளில் குறைக்காமல் செலவிடுவதற்குப் போதிய வருமானமிருப்பதால் சிக்கனவிஷயமாய் ஆலோசிக்கத்தேவையில்லை, என தலைவர் ஆலோசனைகூறியதை யாவரும் அங்கீகரித்துக் கொண்டனராதலின் சிக்க யோசனை ஒத்திவைக்கப்பட்டது. காரியதரிசி அவர்கள் தக்க முறையில் அதிக சிரத்தையுடன் ரிபோர்ட்டு தயாரித்து சபையில் ஆஜர் செய்திருந்ததால், காரியதரிசி தம் கடமையை சரிவர தக்க முறையில் திருப்திகரமாய்ச் செய்திருப்பதை கனம் அக்கிராசனர் சிலாகித்துக்கூறி, இவ்வாறுன காரியங்களில் இக்கமிட்டியிலுள்ள ஏனைய மெம்பர்களும் கலந்து பள்ளியின் காரியங்களைச் செவ்வனே நிறைவேற்றி வந்தால் இன்னும் அழகிய முறையில் காரியாதிகள் நடைபெறுமெனக் கூறினார்கள். பின்னர் பேஷ் இமாம் நியமிக்கும் விஷயமாய்ப் பேசியபின் சிற்றுண்டி அருந்தி பாத்திஹா ஓதப்பெற்று சபை கலைந்தது.

இரங்கூன்

சோலியமுஸ்லிம் அஸோஸியேஷன் வருஷாந்திரப் பொதுச்சபையும் 22-வது வருஷ விழாவும்.

1934-ஸு பிப்ரவரிமீ 4-ந் தேதி மாலை

8-மணிக்கு மேற்படி சங்க பொதுச் சபையும், 22-வது வருஷாந்திர விழாவும் ஒருங்கே நடைபெற்றது. சங்க சபா மண்டபத்திலும் வெளியிலும் கொடிகளாலும் எலக்டிரிக் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

ஜனுப் வ. நா. முகையித்தீன் ராவுத்தர் அவர்கள் சபாநாயகராய் அமர்ந்ததும், ஜனுப் A. M. S. ஹமீது B. Sc., B. L., அவர்களால் குர்ஆன் வாக்கியங்கள் ஓதப்பட்டு சபை ஆரம்பிக்கப்பட்டது. சபாநாயகர் முன்னுரைக்குப் பின் கௌரவ காரியதரிசி எம். கே. எ. முஹம்மது இப்ராஹீம் அவர்களால் சங்க நடவடிக்கை யாதாஸ்தும், 1933-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதியோடு முடிந்த சென்ற வருஷத்தின் வரவு செலவு கணக்கும் சமர்ப்பிக்கப்பட்டு சபையோரால் அங்கீகரிக்கப்பட்டன. பின்னர் ஜனுப் நூ. முஹம்மது இப்ராஹீம் அவர்கள் சங்கநலன்களைப் பற்றி ஓர் இனிய சொற்பொழிவாற்றினார்கள்.

புதுவருஷத்திற்கு கீழ்கண்ட உத்தியோகஸ்தர்களும் நிருவாகசபை அங்கத்தினர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அக்கிராசனுதிபதி ஜனுப் V. M. பீர் முஹம்மது அம்பலம், உப அக்கிராசனுதிபதி ஜனுப் T. M. S. முஹம்மது அப்துல் காதிர், கௌரவ காரியதரிசி ஜனுப் எம். கே. எ. முஹம்மது இப்ராஹீம், உபகாரியதரிசி P. B. முஹம்மது இப்ராஹீம், பொக்கிஷாதிபர் ஜனுப் வெ. மு. காசீம் ராவுத்தர், புஸ்தகசாலை அதிபர் ஜனுப் ஹாஜி எஸ். செய்யிது அப்துல் காதிர், தரும இராப்பாடசாலை சூப்ரென்டென்ட்—ஜனுப் K. A. அப்துல் அஜீஸ் மரைக்காயர், B. A.,

நிருவாக சபை அங்கத்தினர்கள்.—ஜனுப்கள் வி. அ. செய்யிது முஹம்மது அம்பலம், அ.சி. இ. முஹம்மது இப்ராஹீம். வி. பி. மீரா அலி அம்பலம், ம. கா. முகையதீன் ராவுத்தர், S. முஹம்மது ஜான், B.A., A. C. I., எ. எம். எஸ். ஹமீது B. Sc. B. L. B. S. அப்துல் ஜலீல் மரைக்காயர், உ. கா. மீ. முஹம்மது ஹபீபு, கு.சி. ஆ. முஹம்மது சுல்தான் அம்பலம், V.N. அப்துல்கரீம் அம்பலம், B.M. முஹம்மது இப்ருஹீம் அம்பலம், ந. எ. சிக்கந்தர், O. H. பீர் முஹம்மது, கொ. ம. மீராப்பிள்ளை, கி. தி. அ. அப்துற் ரஹ்மான், ஆ. அப்துல்லாஷா. ந. முகையித்தீன் பிள்ளை, செ. மு. செய்யிது முகையித்தீன், கொ. மீ. ஷாகுல் ஹமீது, லெ. கா. கா. அப்பாஸ், எஸ். எஸ். தாவூது, க. ந. இஸ்மாயில் அம்பலம், ஹாபிஸ் இ. கா. முஹம்மது அபூபக்கர் ஸாஹிபு, மு.ப. அப்துல் முத்தலிபு அம்பலம்.

பின்னர் கௌரவகாரியதரிசி ஜனுப் எம். கே. எ. முஹம்மதுஇப்ராஹீம் அவர்கள் சங்கத்தின் வரலாற்றைப்பற்றியும், தற்கால நிலைமையைப் பற்றியும், இதுகாறும் ஆதரவளித்து வந்தது போல் இனிமேல் அதிகமான ஆதரவளித்து ஒற்றுமைத்து வரவேண்டுமென்றும் கூறினார்கள் ஜனுப் எஸ். அப்துல்கரீம் மரைக்காயர் அவர்கள் இனிமையான உருதுக்கவிபாடி அனைவருக்கும் மகிழ்ச்சியளித்தார்கள்.

சபாநாயகரவர்கள் தங்களைத் தலைமைவகிக்கக் கேட்டுக்கொண்டதற்கு நன்றி செலுத்தியும், சங்கத்தின் அவசியத்தையும் இதுகாறும் செய்துள்ள ஊழியங்களையும்பற்றி எடுத்துக் கூறி ஒவ்வொருவரும் தங்களாலியன்ற உதவியும் ஆதரவும் அளித்துவரும்படி கூறினார்கள்.

முடிவில் சபாநாயகர் அவர்களுக்கும், விஜயஞ் செய்திருந்தவர்களுக்கும், மேற்படி விழா செலவுக்கு நன்கொடைகள் அளித்த கனவான்களுக்கும் வந்தனோபசாரங் கூறப்பட்டு அனைவர்களுக்கும் விருந்தளிக்கப்பட்டது. பின்னர் ஏழைகளுக்கும் சாப்பாடு அளிக்கப்பட்டு 10-30 மணிக்கு சபை இனிதுகலைந்தது.

மதீனாவில் தொழிற்சாலை.

பரிசுத்த ஸ்தலங்களாகிய 'ஹரமைனிஷ்ஷரீபைன்'களான மக்கா மதீனாவில் வாசஞ்செய்யும் மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக வறுமையுற்று வாடுவதைக் கண்ட சில மார்க்க பக்திபூண்ட மகான்கள் முன்வந்து, அவர்களுக்குப் பண உதவி செய்வதற்குப் பதிலாய் நிரந்தரமாக அவர்களின் வறுமை நீங்குவதற்கான ஒரு வழியைக் கண்டு பிடிக்க வேண்டுவது உசிதமாகுமெனக் கருதி, கைத்தறி நெசவுத் தொழிற்சாலையை அங்கு ஏற்படுத்த வேண்டுமென்றும், அதில் இஹ்ராம் கட்டுதல் கபனிடுதல் ஆகியவைகளுக்கு வேண்டிய துணிகளை தயார்செய்ய வேண்டுமென்றும், இந்த நெசவுத் தொழிலை பரிசுத்த புண்ணிய க்ஷேத்திரங்களில் வசிப்பவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும், இத் தொழிலபிவிர்த்தியில் வெற்றி பெற்றால் ஆயிரக்கணக்கானவர்களுக்குத் தொழில் கிடைத்துவிடுமென்றும், இத் தொழில் அபிவிர்த்தியடைந்தபின் இதர கைத்தொழில்களையும் படிப்படியாக ஏற்படுத்திவிட

லாமென்னும் முடிவுக்கு வந்து, ஆரம்பத்தில் சில குறிப்பிட்ட நபர்களிடமிருந்து சந்தாப் பெற்று பரீக்ஷார்த்தமாக நடத்துவதென்றும், இஃது வெற்றியுடன்நடைபெறுமாயின், இந்திய பொதுமுஸ்லிம்கள் ஹைதராபாத் சமஸ்தானதிபதி ஆகியவர்களிடம் தக்கஉதவி பெற்று நடத்தலாமென ஆலோசனைசெய்து, தற்கால வேலைக்காக 19 ஆயிரரூபாய் சேர்த்தனர். டாக்டர் காஜாமுயீனுத்தின் சாஹிப் அவர்கள் பெரும் பிரயாசையோடு எழுமாத காலம்வரை மக்கமாநகரிலே தாமதித்திருந்து மதீனாவில் இத்தொழிற்சாலையை ஸ்தாபிக்கும் விஷயத்தில் முயற்சிசெய்தது பாராட்டத்தக்கதாகும். ஆகவே இத்தொழிலை இன்னும் தக்கமுறையில் அபிவிருத்திக்குக் கொண்டுவர வேண்டுமாயின், சகல முஸ்லிம்களும் இதில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். அதற்காக குறைந்தபக்ஷம் 50 ஆயிரம் ரூபாயேனும் அவசியம் தேவையிருக்கிறது. எனவே தர்ம சிந்தனையுள்ள கனவான்கள், இப்புண்ணிய காரியத்துக்குப் பொருளுதவி அளித்து அதனாலேற்படும் நற்பயன்களைப் பெற்றுக்கொள்ளுமாறு ஹைதராபாத் பிரபல கனவான்கள் கையொப்பமிட்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

மௌலானா அவர்கள் விஜயம்.

மீறட்வாசியும், சிங்கப்பூர், பினங், ஜாவா, சுமாட்ரா, ஈஜிப்ட் முதலிய தேசங்களில் அரிய உபந்நியாசங்கள் புரிந்து கியாதிபெற்று விளங்குபவரும், காதியானிமத சம்ஹாரியுமாகிய கனம் மௌலானா மௌல்வீ அல்ஹாஜ் ஹாபிஸ்காரீ அப்துல் அலீம் சாஹி ஸித்தீகி அவர்கள், சமீபத்தில் சிலோன் பிரயாணத்தின்போது மதராஸ் விஜயஞ்செய்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள். மகான் அவர்கள் விஜயஞ்செய்யும் திகதியைத் தெரிந்து அன்னாரை வரவேற்க சென்னை 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்கத்தார் தக்க ஏற்பாடு செய்துவருகின்றார்கள். இது சம்மந்தமான மற்ற விபரங்கள் அடிக்கடி பத்திரிகை மூலம் வெளியிடப்படுமாகையால் மார்க்காபிமானிகளும் மௌலானா அவர்களின் முஹிப்பீன்களும் அது சமயம் சென்னையில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

K. A. பகீர் முஹம்மது, (சாஹிப்)

பண்டாரவாடை.

(கனம் மௌலானா அவர்களை நேரில்சந்தித்து அவர்களது அரிய உபதேசங்களைப்பெற்ற கனவான்களில் அனேகர், ஒருமுறை அவர்கள் இச் சென்னைமாநகருக்கு விஜயஞ் செய்தால், பெரும்பயன் உண்டாகுமெனக்கூறி வருவதால், எதிர்ப்பாராத இவ்வரவை நாம் பெரும் பாக்கியமாகக் கருதி சந்தோஷமடைவதுடன் கூடிய சீக்கிரம் ஜனாப் மௌலானா அவர்கள் விஜயஞ் செய்வார்களென்பதையும் மிக ஆவலோடு எதிர்ப்பார்த்துக்கொண் டிருக்கிறோம். (ப-ர்.)

ஆசிரியர் குறிப்புகள்

ஆயிரத்து நானூறு மஸ்ஜித்கள் சேதம்:— சமீபத்தில் பீஹார் மாகாணத்திலேற்பட்ட பூகம்ப அதிர்ச்சியானது நமக்கு தக்க உணர்ச்சியை உண்டுபண்ணி யிருக்கிறதென்பதிலையமில்லை. அங்கேற்பட்ட நாசங்களிலெல்லாம் நமது மனதை அதிகமாய்ப் புண்படுத்திக் கொண்டிருப்பது, அம்மாகாணத்திலுள்ள 1400 மஸ்ஜிதுகளுக்கேற்பட்ட சகிக்கமுடியாத சேதமேயாகும். இதுகாலை அம்மஸ்ஜிதின் கட்டடங்களெல்லாம் மண்குவியலே போலாய்விட்டது. இதனைக் கண்ணுறும் மார்க்கபக்தி ததும்பும் பீஹார் முஸ்லிம்கள், தங்கள் வீடு வாசல் சொத்து சுதந்திரம் முதலியவற்றை இழந்து பரிதபித்துக்கொண்டிருக்கும் நிலைமையில், அம்மஸ்ஜித்களை ஒழுங்குபடுத்தி வைக்காதவரை, இடிந்து பாழடைந்துபோயிருக்கும் தங்கள் வீடுகளைச் சீர்படுத்தும் வேலையில் பிரவேசிப்பதில்லை என உறுதிகொண்டிருப்பது மிக மிகப் போற்றத்தக்கதேயாகும். அன்னோர் இவ்வாறான கஷ்ட சங்கடத்தி லகப்பட்டுழலும்போதும் இம்மாதிரியான மார்க்க வைராக்கியங் கொண்டிருப்பதைத் தெரிந்த இந்திய முஸ்லிம்

களாகிய நாம், செய்யவேண்டிய காரியம் யாதாகும்? நம்மீது எவ்வாருன கடமை ஏற்பட்டிருக்கிறதென்பதை சிந்திப்போமாக.

வைஸ்ராய் பண்டு, சென்ட்ரல் ரிலீப்கமிட்டி, அநேக பொது ஸ்தாபனங்கள், முஸ்லிம்களின் பற்பல அஞ்சுமன்கள் முதலிய சகலனவும் இப்புண்ணிய கைங்கரியத்திலீடுபட்டுழைத்து வந்த போதிலும், இதில் முஸ்லிம்களின் மஸ்ஜிது பரிபாலன சம்மந்தமான ஏதாகிலும் ஒரு காரியம் செய்யப்படுகிறதா என்பதை நம் முஸ்லிம் நேயர்கள் சிந்திக்கக்கடவர். இச்சுமை முழுதும் நம் முஸ்லிம்களின் தலையிலேயே வந்து சார்ந்திருக்கின்றன. இதுவரை பீஹாருக்காகத் திரட்டப்பட்டு வரும் நிதிகளெல்லாம் ஹிந்து முஸ்லிம்களிடமிருந்து திரட்டப்பட்டு வருவதால், அந்நிதியிலிருந்து முஸ்லிம்களின் வணக்க ஸ்தலமாகிய மஸ்ஜிதை ஒழுங்குபடுத்துவதில் செலவிடுவதற்கு நம் சன்மார்க்கம் இடந்தராததையால், இந்திய முஸ்லிம்களாகிய நாம், அபாயகரமான இப்பூகம்ப அதிர்ச்சியினின்று நம்மைக் காப்பாற்றிய அல்லாஹ்தஆலாவுக்கு (ஷுகூர்) நன்றி பாராட்டுவான்வேண்டி அவனது வீட்டின் பரிபாலனத்துக்காகத் தனியே நிதி வசூலித்து அதனை பீஹாரிலுள்ள பொறுப்பு வாய்ந்த தலைவர்களுக்கு அனுப்பிக் கொடுத்து மஸ்ஜித் பரிபாலன விஷயத்தில் செலவிடுமாறு செய்யவேண்டியது. இதுவே நம்மீதுள்ள பிரதானக் கடமையாகும். எனவே இந்திய முஸ்லிம்களனைவரும் இப்புண்ணிய நற்கைங்கரியத்துக்காக இடுப்புக்கட்டி முன்வந்து நிதி சேகரிக்கும் சேவையிலீடுபட்டு எல்லாம்வல்ல அல்லாஹ்தஆலாவின் தர்பாரில் மட்டில்லா புண்ணியங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்ருேம்.

ஸர் ஆகாகானின் ஒற்றுமை முயற்சி:— லண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மகாநாட்டில் ஹிந்து மகா சபாவின் சூழ்ச்சியைப் பஹிரங்கப்படுத்தியவரும், பிரிட்டிஷ் மேதாவிகளிடம் மகா சபாவின் தந்திர ஏமாற்றம் பலியாது செய்தவருமாகிய ஸர் ஆகாகான் அவர்கள் இது சமயம் டில்லிமாநகர் விஜயஞ் செய்திருக்கிருர்கள். அப்பெரியாரின் பிரதான முக்கிய நோக்கம், இந்தியாவின் கண்வதியும் முஸ்லிம்கள் யாவரும் இராஜிய விஷயங்களில் ஒரே ஒற்றுமையாய் ஏக அபிப்பிராயமுடன் யாவரும் ஒரே துறையில் ஒற்றுமையுடன் வேலைசெய்ய வேண்டுமென்பதேயாகும். அதற்காக அகில இந்திய முஸ்லிம் லீக்கின் இரு பிரிவினர்களையும் ஒற்றுமைப்படுத்திவைக்க முழுப் பிரயாசையுமெடுத்து வருகின்ருர்கள். இதுவன்றி மற்றுமுள்ள முஸ்லிம் ஸ்தாபனங்களுக்கிடையிலும் ஐக்கியத்தை ஏற்படுத்திவைக்க முயற்சி செய்யப்பட்டுவருகிறது. எனவே பற்பல அபிப்பிராயபேதமுடைய முஸ்லிம்களும் அங்குவந்து சேர்ந்திருக்கின்றனர். ஆகவே அவர்களின் இவ்வபிப்பிராயம் மிகமிகப் போற்றத்தக்கதேயாகும். நம்முஸ்லிம் சமுகத்திலும் இதுகாலை இவ்வொற்றுமைதான் மிகமிக ஆவசியமாக இருக்கின்றது. ஏனெனில், இவ்வொற்றுமை நம் முஸ்லிம் சமுகத்தை ஒரே துறையில்நின்று தேசிய சமூகத் தொண்டாற்றுவதற்கும் இந்துக்களின் தாக்குதலுக்கு பதில் கூறுவதற்கும் ஏற்ற சாதனமாய்க் காணப்படுகின்றது. இதுகாலை முஸ்லிம் சமுகத்துக்குப் பெரும் பெரும் தீங்குகளேற்படுவதெல்லாம், முஸ்லிம்களுக்குள்ளேற்பட்டிருக்கும் ஒற்றுமைக்குறைவினலேயாகும். முன்னொருகாலத்தில் சொற்ப முஸ்லிம்கள் இந்தியாவின்கண் காலடிவைத்தவுடன் இந்துக்களின் மாபெரும் இராஜாங்கங்களையெல்லாம் தவிடுபொடி செய்திருக்கின்ருர்கள். முஸ்லிம்களின் எண்ணிக்கை அதுகாலை 10 ஆயிரமுமில்லாதிருக்கும் நிலைமையில் இந்தியாவை தங்கள் ஆக்ஷியின்கீழ் கொணர்ந்திருக்கும்பொழுது, இதுகாலை 10 கோடி முஸ்லிம்களிருந்துகொண்டு இந்துக்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் அடிமைப்பட்டுக்கிடப்பதற்குள்ள காரணந்தான் நமக்கும் புலனுகாதிருக்கிறது? ஆனல் இச்கீனதிசைக்கு இன்னேரில் ஏற்பட்டுள்ள ஒற்றுமைக் குறைவுதான் பிரதானகாரணமாது மென்பதை யூகித்துப் பார்க்கவேண்டியிருக்கின்றது. ஆகவே அல்லாஹ் தஆலா நம்முஸ்லிம் சமுகத்தினருக்கிடையே ஒற்றுமையை யுண்டுபண்ணி வைத்து, பிரிந்து வாழ்வதென்னும் கஷ்டத்திலிருந்து வெளிவந்து ஏக ஒற்றுமையுடையவர்களாய், முஸ்லிம்கள் உயிருடனிருக்கின்ருர்கள்! ஒற்றுமையாய் உயிர்வாழ்வதற்காகவே இப்பூவுலகின்கண் ஜீவித்திருக்கின்ருர்களென்பதை இதரர்கள் தெரிந்து கொள்ளும்படி செய்வதற்குள்ள நல்லுதவிபுரிவானுக.

பாலஸ்தீனில் யூதர்கள் குடியேற்றம்:— ஆங்கிலேயர்கள், யூதர்களுக்கு ஆதரவு புரிந்துவருவதை இற்றைய நாள்வரை கைவிட்டதாகத் தெரியவில்லை. எனவே ஆங்கிலேயர்கள் யூதர்களுக்கு ஆதரவளித்து வருவதன் பயனுக பாலஸ்

தீனிலுள்ள முஸ்லிம்கள் தங்கள் சுயபதியில் உயிர்வாழ்வதே பெரும் கஷ்டமாக இருந்துவருகிறது. அங்குள்ள முஸ்லிம்கள் தங்கள் தேசத்தைப் பாதுகாக்கும்பொருட்டு ஐரோப்பியர்களால் புரியப்பட்டுவரும் சொல்லொணா கஷ்ட சங்கடங்களை யெல்லாம் பொறுமையோடுசகித்து வருகின்றார்கள். ஆனால் பாலஸ்தீனில்யூதர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டேபோய்முடிவாக அங்குமுஸ்லிம்களை இலலாது ஒழித்துவிட வேண்டுமென்று ஐரோப்பியர் கருதுவதாகத் தெரிகிறது.அதற்காதாரமாய் சென்ற மாதத்தில் 4 ஆயிரம் யூதர்கள் தங்கள் சுயபதியை விட்டுபாலஸ்தீனில் குடியேறியிருப்பதாக சமீபத்தில் லண்டன்மா நகரில் ஒரு மந்திரி பிரஸ்தாபித்திருக்கிறார். இவ்வாறு ஒருமாத காலத்தில் 4 ஆயிரம் பேர் குடியேறி யிருப்பதை நோக்குங்கால், ஒருவருடத்தில் எத்தனை யூதர்கள் ஐரோப்பியரின் உதவியைக்கொண்டு அங்கு குடியேறி விடுவார்களென்பதை யூகித்தறிந்து கொள்ளலாம். ஐரோப்பியர் முஸ்லிம்களைத் தலை எடுக்காது செய்து விடுவதற்காகவும், அவர்களின் மிகுதத்தைக் குறைப்பதற்காகவும் யூதர்களை அங்கு அதிகமாய்க் குடியேற்றி வருகின்றார்கள். ஆனால் யூதர்கள், ஹிந்துக்களின் சகோதரர்கள் தானென்பதை ஐரோப்பா மறந்து விடலாகாது. ஐரோப்பியர் இந்தியாவில் ஹிந்துக்களைத் தலை தூக்கி விட்டதினால் ஐரோப்பியர் மீது எவ்வாறான கஷ்ட சங்கடங்கள் சம்பவித்திருக்கின்றதோ அவ்வாறே ஒரு காலத்தில் ஐரோப்பியர் பாலஸ்தீன் யூதர்களால் சங்கடப்பட நேரிடுமென்பது திண்ணம். பிரிட்டிஷ் இராஜ தந்திரிகள் இவ்வாறு யூதர்களுக்கு உதவிபுரிவதானது, பாலஸ்தீனில் வதியும் முஸ்லிம்களின் மனதைமட்டும் புண்படுத்துவதாகக் கருதாமல் உலக முஸ்லிம்கள் யாவர்களின் மனதையும் புண்படுத்துவதாகவே கருதப்படுவதுடன், அன்னோர்மீது துர் அபிப்பிராய மேற்படக் காரணமாகவு மிருக்கிறது. ஆகவே பிரிட்டிஷ் நிபுணர்கள் தாங்கள் புரிந்து வரும் இச்செயலின்மீது மறுபடியும் ஒரு முறை கவனத்தைச் செலுத்தி தங்கள் பிரஜைகளாகிய முஸ்லிம் மக்களின் மனம் புண்படாதிருப்பதற்குத் தக்க ஏறபாடு செய்வார்களாக.

சைனாவில் இஸ்லாத்தின் முன்னேற்றம் :— சைனாவில் நடைபெற்ற ஜனக்கணித சங்கியைகளை நோட்டமிடுவோமாயின், அங்கு இஸ்லாம் அதிக விரைவாக முன்னேற்றமடைந்து கொண்டு போகிறதென்பது நன்கு புலனாகின்றது. அங்குள்ள முஸ்லிம்களின் எண்ணிக்கை சம்பந்தமாய் பலவாறான செய்திகள் எட்டிவந்த போதிலும், சில கிறிஸ்தவமிஷனரிகளின் ரிபோர்ட்டிலிருந்து சைனாவில் இரண்டு கோடி முஸ்லிம்கள் வசிக்கின்றார்களென்றும் தெரிகிறது. தவிரவும் பலதேயங்களிலும் சுற்றுப் பிரயாணஞ்செய்துவரும் ஓர் அரபி, அங்கு நான்கு கோடி முஸ்லிம்கள் வசித்து வருகிறார்களென்பது தமது உத்தேசமெனக் கூறியிருக்கிறார். ஆனால் கவர்ன்மெண்ட் அறிக்கையை நன்கு பரிசீலனை செய்து பார்ப்போமாகில் அங்கு ஆறு கோடி முஸ்லிம்களுக்கதிகமாகவே வசிப்பதாகத் தெரிகிறது. சமீபமாய் அத்தேசத்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்து வந்த ஒருவர், அங்கு 10 கோடி முஸ்லிம்கள் வசிப்பதாகக் கூறுகின்றார். எவ்வாற்றானும் கவர்ன்மெண்ட் அறிக்கைப்படி பார்த்தாலும் அங்கு இஸ்லாம் விரைவாக முன்னேற்றமடைந்துகொண்டு வருவதாகவே தெரிகிறது. அங்குள்ள முஸ்லிம்களின் நடையுடை பாவனை முதலியவற்றை நேரில் கண்டு வந்த மேனாட்டு அறிஞரொருவர் ஈஸ்ட்டர்ன் டைம்ஸில் "சீன முஸ்லிம்கள் இஸ்லாமிப் மார்க்கத்தின்மீது பற்றுக்கோடுடையவர்களாய் முழுப் பிரயாசையோடு மார்க்க வரம்புக்குட்பட்டு நடக்கின்றவர்களாயிருக்கின்றார்கள்; அவர்கள் வாழ்வு, மரணம், விவாகம் முதலிய சுகதுக்க காரியங்கள் யாவும் மார்க்க சட்டப்படியே நடைபெற்று வருகின்றது; அவர்களில் முஸ்லிம் அல்லாதாரின் நடத்தை வந்து நுழைவதற்கு சற்றும் இடம் பெறுவதாக இருக்கவில்லை; இதுகாலை வரையில் அங்கு எந்த முஸ்லிமும், முஸ்லிம் அல்லாத இதரமதஸ்தர்களை விவாகஞ்செய்து கொண்டதாகத் தெரியவில்லை;முஸ்லிம் களிலனேகர்வியாபாரிகளாகவே இருந்து சுவண்டியோடு காலங்கழிப்பவர்களா யிருக்கின்றார்கள் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். சீன முஸ்லிம்களின் இவ்வாறான நிலைமையைத் தெரிந்துகொண்ட பின்னரேனும், இந்திய முஸ்லிம்களை விட அன்னோர் தக்கமுறையில் சன்மார்க்கப் பற்றுடையவர்களாய்த் திகழ்கின்றார்களென்பது நன்குபுலனாகும். அன்னோர் ஒழுங்கான முறையிலே இஸ்லாமிய சத்போதனைகளைப் பின்பற்றி எவ்வாறு நடந்துவருகிறார்களென்பதை ஆராய்ந்து பார்ப்போமாகில் நம் இந்திய முஸ்லிம்களாகிய நாம் தலைகுனிய வேண்டியதாக இருக்கின்றது.

"ஹயாத்து மஸீஹ் அலைஹிஸ்ஸலாம்"

ஹஜ்ரத் ஈஸா நபியவர்களின் சரித்திரச் சுருக்கம், நபியவர்கள் விண்ணுக்குயர்த்தப்பட்ட விபரம், இனி அவர்கள் உலகுக்கு வரும் விபரம் ஆகிய இவைகள் குர்ஆன் ஹதீது முதலிய ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டது. காதியானிகள் ஹஜ்ரத் ஈஸா நபியவர்களைப்பற்றிக் கூறும் கூற்றுகளுக்கு இந்நூல் தக்க மறுப்பாக மிளிர்கின்றது. இந்நூலைப் போலொரு நூல் இதுகாறும் தமிழில் வெளிவந்ததில்லை. காதியானித் தமிழ் புத்தகங்களைப் படித்து வழிவிலகிச் செல்லும் சோதர சோதரிகளின் கண்களை இந்நூல் திறந்துவிடும் என்பதிலையமின்று. முதல் பாகம் 90 பக்கங்களைக்கொண்டது. விலை அணு **7.**

இரண்டாம் பாகம் 350 பக்கங்களைக் கொண்டது. விலை ரூ. **1-0-0.**

கிறிஸ்தவர்களுக்கோர் வாயாப்பு

கிறிஸ்தவப் பாதிரிகள் இஸ்லாத்தைப்பற்றியும் நபிகள்பிரானவர்களைப்பற்றியும் விடுத்த 14 வினாக்களுக்கு சுன்னத்துவல்ஜமாஅத்து உலமாக்களால் அளிக்கப்பட்ட விடைகள் இதிலடங்கி இருக்கிறது. இந்த நூலைப் படித்துப் பார்ப்பார்களாயின் உண்மை இஸ்லாத்தைத் தெரிந்துகொள்வார்கள் என்பதில் எள்ளத்துணையும் சந்தேகமில்லை. மேலும் லாகூர் அஹ்மதியா பார்ட்டித் தலைவர் முஹம்மது அலி, M. A., LL. B., யால் எழுதப்பட்ட இயேசுவின் இரகசியம் குர்ஆனுக்கும் ஹதீதுகளுக்கும் விரோதமாகயிருப்பதை நன்கு தெரிந்துகொள்வர். சொற்ப காப்பிகளே கைவசமிருக்கின்றன. முந்திக்கொள்ளுங்கள். விலை அணு **6 தான்.**

சுன்னத்ஜமாஅத்தின் விஸ்வாசம்

சுன்னத்து வல் ஜமாஅத்து என்றால் என்ன என்று வினவும் காதியானிகளுக்கு இது ஒரு பதிலாகும். இது சுன்னத்துவல் ஜமாஅத்து முஸ்லிம்கள் யார்? அவர்களின் கொள்கை யாது? சுன்னத்துவல்ஜமாஅத்தை விட்டு விலகியவர்கள் யார்? அவர்களின் கொள்கைகள் யாவை? இக்கொள்கைகள் தோன்றிய காலம் ஆகியவைகளைத் தெளிவுபட விளக்கும் நூல். விலை அணு **6 தான்.**

காதியானி மத ஆராய்ச்சி

காதியானி மதக்கோட்பாடுகளைத் தெரிந்துகொள்ளாமல் அநேகர் அவர்களின் நூல்களைப் படித்து வழிதவறி விடுகின்றனர். இஸ்லாத்துக்கும் காதியானி மதத்துக்குமுள்ள வேற்றுமை, காதியானிகள் இஸ்லாத்தைத் தழுவியவர்கள் என்று கூறிக்கொண்டு அதைக் கெடுப்பதற்காகச் செய்யும் சூழ்ச்சி விபரம் முதலியவைகள் இதில் கூறப்பட்டிருக்கின்றன. காதியானிகளைச் சீர்திருத்த முஸ்லிம்கள் என்றும், மிர்ஜா குலாம் அஹ்மதைச் சீர்திருத்தக்காரர் என்றும் கருதி வருபவர்களின் கண்ணைத் திறந்துவிட்டு அவர்கள் இஸ்லாத்தைவிட்டு எவ்வளவு தூரம் விலகிச் சென்றிருக்கின்றனர் என்பதை நன்கு துலக்கும் நூல். 200-பக்கங்களுக்கு மேற்கொண்டது. விலை ரூபா **1-0-0 தான்.**

முஸ்லிம்களின் நவீன அநுஷ்டானச் சம்ஹாரம்

அனுச்சார பித்அத் ஷிர்க்கு முதலிய நவீன அநுஷ்டானங்களில் கிடந்துழலும் முஸ்லிம்களுக்கும், அனுவசியமான சடங்குகளைக் கைக்கொண்டு கடன்படுவோருக்கும் இஸ்லாத்தின் உண்மை ஆசாரம் யாது என்பதைத் தெளிவுபடுத்தி அத்தகை வீண்டம்பச் செலவுகளிலும் அனுச்சாரப் பழக்க வழக்கங்களிலுமிருந்து விடுவிக்கும் அரிய புத்தகம்.
விலை அணு 10.

குர்ஆன் ஆங்கில வியாக்யான ஆராய்ச்சியின் முகவுரை

திருக்குர்ஆனுக்குக் காதியானி அஹ்மதிப் பார்ட்டியின் தலைவர் முஹம்மது அலி, M.A., LL. B., எழுதிய ஆங்கில வியாக்யானத்தில் இஸ்லாத்துக்கு விரோதமாக எழுதியுள்ள தவறுகளிற் சிலவற்றை எடுத்துக்காட்டுகிறது. இது பாஞ்சாலத்தைச் சேர்ந்த ஷேக் குலாம்ஹைதர் சாஹிபால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு.
விலை அணு 4.

அஹ்மதியர்களைப்பற்றிய கோர்ட்டுத் தீர்ப்பு

இதில் காதியானி மதஸ்தர்கட்கும் முஸ்லிம்கட்கும் மஸ்ஜித் கப்ருஸ்தான் ஆகியவைகள் சம்பந்தமாக ஏற்பட்ட வியாச்சியங்களும் கோர்ட்டுத் தீர்ப்புகளும் எழுதப்பட்டிருக்கிறது. விலை அணு 2 தான்.

காதியானிப் பிரசாரமும் கம்பளை முஸ்லிம்களின் வெற்றியும்

சிலோன் கம்பளையில் காதியானிகளுக்கும், உலமாக்களுக்கும் நடக்க இருந்த மத தர்க்கவாத சம்பந்தமாக எழுதப்பட்டது. காதியானிகளின் தர்க்க நிலைமைகளையும் அவர்களின் தந்திரக் கபடங்களையும் தெரிந்து அவர்களோடு மல்லாடி அவர்களின் குறும்புகளை அடக்க விரும்புவோருக்கு இந்நூல் இன்றியமையாததாகும். விலை அணு 6 தான்.

ரத்துல் காதியானி

வஹீ என்பதென்ன? அது எவருக்கு வரலாம். தற்காலம் வஹீ உண்டா? இல்ஹாம் என்றால் என்ன? என்பனபோன்ற விஷயங்களைப்பற்றி விபரமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டிருக்கிறது. விலை அணு 4.

காதியானி மதஸ்தருடன் ஒற்றுமையாமை — விலை அணு 8.

காதியானிக் கொள்கைகள் தலைகாட்ட முற்பட்டிருக்கும் இதுகாலை இந்நூல்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அவசியமாகும் என்பதை அறிவித்துக்கொள்ளப் படுகிறது.

கிடைக்குமிடம் :—

முஸல்மான் ஆபீஸ்,
தென்காசி.

தமிழ்நாடு உலகக் காப்பக நூலகம் சென்னை-600 008

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.